தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

விளம்பர எண் : 737

அறிவிக்கை எண் : 06 / 2026 **நாள்:** 07.07.2026

ஒருங்கிணைந்த தொழில் நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை)

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை)-ல் உள்ள பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் இணையவழி மூலம் மட்டும் வரவேற்கப்படுகின்றன.

1. முக்கியமான அறிவுரைகள்:

1.1. தேர்வர்கள் தேர்வுக்கான தகுதியை உறுதி செய்தல்:

அனைத்துத் தேர்வர்களும் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in-இல் உள்ள "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" மற்றும் இந்த அறிவிக்கையில் உள்ள அறிவுரைகளை கவனமாகப் படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்கான அனைத்து தகுதி நிபந்தனைகளையும் அவர்கள் பூர்த்தி செய்ததை உறுதி செய்துகொள்ள வேண்டும். அவர்கள் தகுதி நிபந்தனைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்ததற்கு உட்பட்டு தேர்வின் அனைத்து நிலைகளிலும் அவர்களது அனுமதி முற்றிலும் தற்காலிகமானதாகும். எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக தேர்வரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒரு தேர்வர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராக கருதப்பட மாட்டார். தேர்வரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன எனக் கண்டறியப்பட்டாலோ, எந்நிலையிலும், தெரிவு செய்யப்பட்ட பின்னர்கூட, விண்ணப்ப நிலையை உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு. எனவே, இத்தெரிவிற்கான விண்ணப்பமானது அனைத்து நிலைகளிலும், அதாவது தெரிவு செய்யப்பட்ட பின்னரும்கூட, தற்காலிகமானது ஆகும்.

1.2. முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:

அறிவிக்கை நாள்	07.07.2026
விண்ணப்பம் பெறத் தொடங்கும் நாள்	17.07.2026
இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	15.08.2026 11:59 பி.ப
விண்ணப்பத் திருத்தச் சாளர காலம்	19.08.2026 12:01 மு.ப முதல் 21.08.2026 11:59 பி.ப வரை

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம்		
தாள் - I		
பாடம்	**பாடத்தாள் குறியீட்டு எண்**	**நாள்**
தமிழ் தகுதித் தேர்வு, பொது அறிவு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு	501	பின்னர் அறிவிக்கப்படும்
தாள் - II		
பாடத் தாள்	**பாடத்தாள் குறியீட்டு எண்**	**நாள்**
வேளாண்மை	431	பின்னர் அறிவிக்கப்படும்
தானியங்கி மற்றும் இயந்திர பொறியியல்	512	
அமைப்பியல் பொறியியல்	443	
அமைப்பியல் பொறியியல் மற்றும் கட்டடக் கலையியல்	509	

மின்னணுவியல் / மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல்	447	பின்னர் அறிவிக்கப்படும்
மீன்வளத் தொழில்நுட்பம், மீன்வள அறிவியல் மற்றும் வழிசெலுத்துதல் பொறியியல்	589	
கைத்தறி தொழில்நுட்பம், துணிநூல் தொழில்நுட்பம் மற்றும் துணிநூல் உற்பத்தி	445	
தோட்டக்கலை	432	
சுரங்கப் பொறியியல்	605	
உடற்கல்வியியல்	603	
அச்சுத் தொழில்நுட்பம்	484	
நகர் ஊரமைப்பு மற்றும் திட்டமிடல்	508	
தொழிற்பிரிவு: மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்	534	
தொழிற்பிரிவு: அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்	532	
தொழிற்பிரிவு: டீசல் கம்மியர்	521	
தொழிற்பிரிவு: வரைவாளர் (சிவில்)	388	
தொழிற்பிரிவு: கணினி அச்சுக் கோப்பாளர்	612	
தொழிற்பிரிவு: மின் பணியாளர்	438	
தொழிற்பிரிவு: கம்மியர் மின்னணுவியல்	535	
தொழிற்பிரிவு: பொறியியல் வரைபடம் மற்றும் வரைவாளர் (இயந்திரவியல் மற்றும் அமைப்பியல்)	551	
தொழிற்பிரிவு: தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை	610	
தொழிற்பிரிவு: பொருத்துநர்	436	
தொழிற்பிரிவு: தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியலாளர்	538	
தொழிற்பிரிவு: தகவல் தொடர்பு தொழில் நுட்ப சாதனங்கள் பராமரிப்பு	537	
தொழிற்பிரிவு: இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்	608	
தொழிற்பிரிவு: இயந்திர வேலையாள்	539	
தொழிற்பிரிவு: உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்	543	
தொழிற்பிரிவு: கடல்சார் இயந்திரப் பொருத்துநர்	614	
தொழிற்பிரிவு: வேளாண் இயந்திர கம்மியர்	609	
தொழிற்பிரிவு: கம்மியர் மின்சார வாகனம்	542	
தொழிற்பிரிவு: கம்மியர் மோட்டார் வாகனம்	437	
தொழிற்பிரிவு: வண்ணப் பூச்சாளர் (பொது)	615	
தொழிற்பிரிவு: குழாய் வேலையாளர்	613	
தொழிற்பிரிவு: கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்	435	
தொழிற்பிரிவு: தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்	611	
தொழிற்பிரிவு: தையல் தொழில்நுட்பம்	546	
தொழிற்பிரிவு: அளவர் மற்றும் வரைவாளர் (சிவில்)	490	
தொழிற்பிரிவு: திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்	616	
தொழிற்பிரிவு: தொழில்நுட்பவியலாளர் (செயல்பாடுகள்)	523	
தொழிற்பிரிவு: துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்	626	
தொழிற்பிரிவு: கடைசலர், கருவி மற்றும் டை மேக்கர்	552	

தொழிற்பிரிவு: பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)	440	பின்னர் அறிவிக்கப்படும்
தொழிற்பிரிவு: கம்பியாள்	550	
தொழிற்பிரிவு: பணிமனை கணக்கீடு அறிவியல்	540	
தொழிற்பிரிவு: டீசல் கம்மியர் மற்றும் கம்மியர் (மோட்டார் வாகனம்)	627	
சுரங்க பணித் துணைவர்	591	

1.2.1. தாள் வாரியாக தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் தொடர்பான விவரங்கள் தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in வாயிலாக மட்டுமே வெளியிடப்படும்.

1.3. விண்ணப்பிப்பது எப்படி:

1.3.1. ஒருமுறைப் பதிவு மற்றும் இணைய வழி விண்ணப்பம்:

தேர்வர்கள் www.tnpscexams.in எனும் தேர்வாணையத்தின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள ஒருமுறைப் பதிவு தளத்தில் (OTR) பதிவு செய்த பின்பு இத்தேர்விற்கான விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும். தேர்வர்கள் ஏற்கனவே ஒருமுறைப்பதிவில் பதிவு செய்திருப்பின், அவர்கள் இத்தேர்விற்கான இணையவழி விண்ணப்பத்தை நேரடியாக பூர்த்தி செய்யத் தொடங்கலாம்.

1.3.2. விண்ணப்பத் திருத்தச் சாளரம்:

இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளுக்குப் பின்னர், விண்ணப்பத் திருத்தச் சாளரம் 19.08.2026 முதல் 21.08.2026 வரை மூன்று நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும். இக்காலத்தில் தேர்வர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் உள்ள விவரங்களைத் திருத்தம் செய்ய இயலும். விண்ணப்பத் திருத்தச் சாளரக் காலம் முடிந்த பின்னர் இணையவழி விண்ணப்பத்தில் எந்தவொரு மாற்றத்தையும் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

1.3.3. பாடத்தாள் விருப்பத்தேர்வு:

தேர்வர்கள் பாடத்தாள்(கள்)-ஐ தேர்வு செய்து இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தேர்வர்கள் எந்த பாடத்தில் கல்வித்தகுதி அல்லது அதற்கு இணையான தகுதியினைப் பெற்றிருக்கின்றனரோ அந்த பாடத்தாள் (கள்)-ஐ மட்டுமே தேர்வு எழுத தேர்ந்தெடுக்க வேண்டும்.

1.3.4. எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதற்கான விரிவான அறிவுரைகள் மற்றும் தேர்வு மையங்கள் குறித்த விவரங்கள் இந்த அறிவிக்கையின் பின்னிணைப்பு-I இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1.3.5. இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, தேர்வரால் எழுப்பப்படும் உரிமை கோரல்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1.4. தடை செய்யப்பட்ட பொருட்கள்:

1.4.1. அலைபேசி (Mobile Phone), அகவி (Pager) அல்லது ஏதேனும் மின்னணு கருவி அல்லது நிரலாக்கம் செய்யப்பட்ட சாதனங்கள் (Programmable Devices) அல்லது விரலி (Pendrive), திறன் கைக்கடிகாரம் (Smart Watches) போன்ற சேமிப்பு மின் ஊடகம் (Storage Media), குறிப்பு நினைவகங்களை (Memory Notes) உள்ளடக்கிய கைக்கடிகாரம் மற்றும் குறிப்பு நினைவகங்களை (Memory Notes) உள்ளடக்கிய மோதிரம், இன்னும் பிற அல்லது புகைப்படக்கருவி அல்லது ஊடலை கருவிகள் (Bluetooth Devices) அல்லது தகவல் தொடர்பு சில்லுகள் (Communication Chips) அல்லது வேறு ஏதேனும் சாதனங்கள் அல்லது தகவல் தொடர்பு சாதனமாக பயன்படுத்தத்தக்க துணைக் கருவிகள் செயல்பாட்டிலோ அல்லது அணைக்கப்பட்ட நிலையிலோ தேர்வர்கள் தேர்வுக்கூடத்திற்குள் கொண்டுவர அனுமதியில்லை. P&G தரவுப் புத்தகம், கணிதம் மற்றும் வரையும் கருவிகள், மடக்கை அட்டவணைகள், படியெடுக்கப்பட்ட வரைபடங்கள், புத்தகங்கள், நகரி (Slide Rules), குறிப்புகள், கையேடுகள், தாள்கள் (Loose Sheets and Rough Sheets), கைப்பைகள் போன்றவற்றையும் தேர்வர்கள் தேர்வுக்கூடத்திற்குள் கொண்டுவர அனுமதியில்லை.

1.4.2. அவ்வாறான தடை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது கருவிகள் வைத்திருப்போர்கள் கண்டறியப்பட்டால், தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும், மேலும், தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர். தேவை எனக் கருதப்படின் அவ்விடத்திலேயே சோதனைக்கு (உடற்சோதனை உட்பட) உட்படுத்தப்படுவர்.

1.4.3. தேர்வர்கள் அவர்களின் சொந்த நலன் கருதி கைப்பேசி உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களைத் தேர்வு கூடத்திற்கு எடுத்துவரவேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன் அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2. எச்சரிக்கை:

2.1. தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் தேர்வரின் தர வரிசைப்படியே மேற்கொள்ளப் படுகின்றன. பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கித் தருவதாக கூறும் இடைத்தரகர்களிடம் மிகவும் கவனமாக இருக்குமாறு தேர்வர்களைத் தேர்வாணையம் எச்சரிக்கிறது. இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் தேர்வர்களுக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது.

2.2. இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் தேர்வரே முழுப் பொறுப்பாவார். தேர்வர்கள், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்போது, ஏதேனும் தவறு ஏற்படின், அதற்கான இணைய சேவை மையங்களையோ / பொது சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. தேர்வர்கள் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர் நன்கு சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. பதவிகள் மற்றும் காலிப் பணியிடங்கள்:

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	துறை / நிறுவனத்தின் பெயர்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய நிலை
1.	சுரங்க முதலாள்	3803	தமிழ்நாடு கனிமவள நிறுவனம்	5	நிலை 15 (தொ.வ.நி)
2.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு	2	நிலை 13
3.	மீன்வள சார் ஆய்வாளர்	1760	மீன்வளம் மற்றும் மீனவர் நலம்	12#	
4.	உதவி மேலாளர்	3789	தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்	14	நிலை 13 (தொ.வ.நி)
5.	துணிநூல் ஆய்வாளர்	3676	துணிநூல்	3	நிலை 12
6.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853		2	நிலை 11
7.	வானொலி மேற்பார்வையாளர்	1748	பொதுப் பணித் துறை	14	
8.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375	கைத்தறி	1[$]	
9.	வரைவாளர், நிலை-III	2114	நகர் ஊரமைப்பு	1[#]	
10.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சிப் பிரிவு)	3	
11.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி	129	
12.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120	நீர்வளம் - பொதுப்பணி	101 *#	
13.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	நெடுஞ்சாலை	46[*]	
14.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650	வனம்	2	
15	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்	12	

16.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சிப் பிரிவு)	1	நிலை 11
17.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619		3	
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621		6	
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622		1	
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623		6	
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625		17	
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627		2	
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629		4	
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630		5	
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631		14	
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634		2	
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635		9	
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636		2	
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637		5	
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640		1	
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646		5	
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647		8	
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648		15	
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773		3	
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774		1	
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775		1	

37.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சிப் பிரிவு)	3	நிலை 11
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777		1	
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778		3	
40.	இளநிலை பயிற்சி அலுவலர் வண்ணப் பூச்சாளர் (பொது)	3779		2	
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780		4	
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781		1	
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782		1	
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)	3783		1	
45.	தொழில்நுட்ப உதவியாளர்	3380	தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் லிமிடெட்	15	நிலை 11 (தொ.வ.நி)
46.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	வேளாண்மை	110*#	நிலை 10
47.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள்	24	
48.	அளவர் மற்றும் உதவி வரைவாளர்	3234	நகர் ஊரமைப்பு	32	நிலை 8
49.	சாலை ஆய்வாளர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி	149#	
50.	திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)	3800	இயக்கூர்தி பராமரிப்பு	2$	
51.	தொழில்நுட்ப உதவியாளர்	3381	தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்	1	
52.	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329	தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்	1#	நிலை 8 (!)
53.	தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327		1#	
54.	சுரங்கப் பணித்துணைவர்	3748	தமிழ்நாடு கனிமவள நிறுவனம்	8@	நிலை 8 (தொ.வ.நி)
55.	பணி ஆய்வாளர்	3821	தமிழ்நாடு கடல்சார் வாரியம்	2	நிலை 5
56.	கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772	தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	20^@	ரூ.26,500 – 84,180 (தொ.வ.நி)
			மொத்தம்	**839**	

* சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு பொருந்தும் நேர்வுகளில் தேவையான காலிப்பணியிடங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

\# பின்னடைவு காலிப் பணியிடங்கள் மட்டும் / உள்ளடக்கியது

@ ஆதி திராவிடர் குறைவு காலிப்பணியிடங்களை உள்ளடக்கியது

$ பட்டியல் பழங்குடியினர் குறைவு காலிப்பணியிடங்கள் மட்டும்

^ தேர்வு செய்யப்படும் தெரிவாளர்கள் இந்தியாவில் எப்பகுதியிலும் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்.

! இப்பதவிகளுக்கான ஓய்வூதிய பயன்கள் இத்துறையின் சிறப்பு துணை விதிகளின்படி வழங்கப்படும்.

சுருக்கம்:
தொ.வ.நி – தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

3.1. இவ்வறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் பகிர்மான பட்டியல் தோராயமானதாகும். நேரடி சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்வு தொடங்கும் முன்பு வரை மாறுதலுக்குட்பட்டது. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும்போது, அடுத்தடுத்த நிலைகளுக்கு தேர்வு செய்யப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கையிலும் மாற்றம் செய்யப்படும்.

3.2. இவ்வறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பதவிகளுடன் ஒத்த தகுதி நிபந்தனைகளுடன் கூடிய வேறு பெயர் கொண்ட பதவிகளைக் கூடுதலாகச் சேர்க்க தேர்வாணையத்திற்கு உரிமை உள்ளது.

3.3. பதவி வாரியான காலிப்பணியிட பகிர்வு பட்டியல் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு VII ல் உள்ளது.

4. தகுதி நிபந்தனைகள்:

4.1. வயது வரம்பு: (01. 07.2026 அன்று)

தேர்வர்கள், அனைத்து பதவிகளுக்கும் (வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சி பிரிவு) துறையில் உள்ள இளநிலை பயிற்சி அலுவலர் பதவி மற்றும் இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II நீங்கலாக) 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். தேர்வர்கள் இளநிலை பயிற்சி அலுவலர் (பதவிக் குறியீடு: 3617 முதல் 3648 மற்றும் 3773 முதல் 3783 வரை) பதவிக்கு 01.08.2026 அன்றும் மற்றும் இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II (பதவிக் குறியீடு: 2119) பதவிக்கு 01.07.2026 அன்றும் 21 வயது நிறைவு செய்திருக்க வேண்டும். இனவாரியான உச்ச வயது வரம்பு மற்றும் வயது வரம்பு சலுகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

4.1.1. பிறவகுப்பினர் (ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), மற்றும் பி.வ.(இ) சாராத தேர்வர்கள்)

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	உச்ச வயது வரம்பு (நிறைவடைந் திருக்கக் கூடாது)	வயது வரம்பு சலுகை		
				நிர்ணயிக்கப் பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்	முன்னாள் இராணுவத் தினர்	ஆதர வற்ற விதவை
1.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	34	NA	50	உச்ச வயது வரம்பு இல்லை
2.	உதவி மேலாளர்	3789	32			
3.	வானொலி மேற்பார்வையாளர்	1748	32	42		
4.	சுரங்க முதலாள்	3803				
5.	மீன்வள சார் ஆய்வாளர்	1760				
6.	துணிநூல் ஆய்வாளர்	3676				
7.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375				
8.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853				
9.	வரைவாளர், நிலை-III	2114				
10.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115				
11.	தொழில்நுட்ப உதவியாளர்	3380				
12.	உதவி வேளாண்மை அலுவலர்	3101				
13.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104				
14.	அளவர் மற்றும் உதவி வரைவாளர்	3234				
15.	தொழில்நுட்ப உதவியாளர்	3381				

16.	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329	32	42	50	உச்ச வயது வரம்பு இல்லை
17.	தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327				
18.	சுரங்கப் பணித்துணைவர்	3748				
19.	திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)	3800				
20.	பணி ஆய்வாளர்	3821				
21.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120	32	42	32*	
22.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650				
23.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க	$37^{\%}$	$47^{\%}$	$50^{\%}$	
24.	சாலை ஆய்வாளர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க	37	47	50	
25.	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376				
26.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731				
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617				
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619				
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621				
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622				
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623				
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625				
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627				
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629				
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630				
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631				

37.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	37	47	50	வயது வரம்பு இல்லை
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635				
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636				
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637				
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640				
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646				
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647				
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648				
45.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773				
46.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774				
47.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775				
48.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776				
49.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777				
50.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778				
51.	இளநிலை பயிற்சி அலுவலர் வண்ணப் பூச்சாளர் (பொது)	3779				
52.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780				
53.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781				
54.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782				
55.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)	3783				

56.	கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772	32	42	50	37

NA – பொருந்தாது, ஏனெனில் இப்பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

* - இராணுவப் பணியின் பணிக்காலத்தைக் கழித்த பின்பு

% - 2015-ம் ஆண்டு 22.12.2015 நாளிட்டு தொடரப்பட்ட W.P.No. 4136 - 4147/2015-ன் மீதான தீர்ப்பாணை செயல்படுத்தும் விதமாக தமிழக அரசினால் வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண்.240, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 31.10.2025-ன்படி "தானே (Thane) தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர்களாக" பணியாற்றிய நபர்களுக்கு இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் (பதவிக் குறியீடு: பின்னிணைப்பு VII-ஐக் காண்க) பதவிக்கு இதர தகுதிகள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் விண்ணப்பிக்கும் பொருட்டு இந்த ஒருமுறை மட்டும் வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படுகிறது.

4.1.2. ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), மற்றும் பி.வ.(இ):

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	உச்ச வயது வரம்பு (நிறைவடைந்திருக்கக் கூடாது)	வயது வரம்பு சலுகை		
				நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்	முன்னாள் இராணுவத்தினர்	ஆதரவற்ற விதவை
1.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	உச்ச வயது வரம்பு இல்லை	NA	உச்ச வயது வரம்பு இல்லை	உச்ச வயது வரம்பு இல்லை
2.	உதவி மேலாளர்	3789				
3.	வானொலி மேற்பார்வையாளர்	1748		உச்ச வயது வரம்பு இல்லை		
4.	சுரங்க முதலாள்	3803				
5.	மீன்வள சார் ஆய்வாளர்	1760				
6.	துணிநூல் ஆய்வாளர்	3676				
7.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375				
8.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853				
9.	வரைவாளர், நிலை-III	2114				
10.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731				
11.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க				
12.	சாலை ஆய்வாளர்					
13.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120				
14.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115				
15.	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376				
16.	தொழில்நுட்ப உதவியாளர்	3380				
17.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650				
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617				
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619				
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621				
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622				

22.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	உச்ச வயது வரம்பு இல்லை	உச்ச வயது வரம்பு இல்லை	உச்ச வயது வரம்பு இல்லை	உச்ச வயது வரம்பு இல்லை
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625				
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627				
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629				
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630				
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631				
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634				
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635				
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636				
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637				
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640				
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646				
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647				
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648				
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773				
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774				
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775				
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776				
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777				
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778				
42.	இளநிலை பயிற்சி அலுவலர் வண்ணப் பூச்சாளர் (பொது)	3779				
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780				
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781				
45.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782				

<table>
<tr><td>46.</td><td>இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)</td><td>3783</td><td rowspan="10">உச்ச வயது வரம்பு இல்லை</td><td rowspan="10">உச்ச வயது வரம்பு இல்லை</td><td rowspan="10">உச்ச வயது வரம்பு இல்லை</td><td rowspan="10">உச்ச வயது வரம்பு இல்லை</td></tr>
<tr><td>47.</td><td>உதவி வேளாண்மை அலுவலர்</td><td>3101</td></tr>
<tr><td>48.</td><td>உதவி தோட்டக்கலை அலுவலர்</td><td>3104</td></tr>
<tr><td>49.</td><td>அளவர் மற்றும் உதவி வரைவாளர்</td><td>3234</td></tr>
<tr><td>50.</td><td>தொழில்நுட்ப உதவியாளர்</td><td>3381</td></tr>
<tr><td>51.</td><td>தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)</td><td>3329</td></tr>
<tr><td>52.</td><td>தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)</td><td>3327</td></tr>
<tr><td>53.</td><td>சுரங்கப் பணித்துணைவர்</td><td>3748</td></tr>
<tr><td>54.</td><td>திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)</td><td>3800</td></tr>
<tr><td>55.</td><td>பணி ஆய்வாளர்</td><td>3821</td></tr>
<tr><td>56.</td><td>கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்</td><td>3772</td><td>பி.வ (இ.அ), பி.வ (இ), மி.பி.வ / சீ.ம - 34, ஆ.தி, ஆ.தி(அ) ப.பு - 37</td><td>பி.வ (இ.அ), பி.வ (இ), மி.பி.வ / சீ.ம - 44, ஆ.தி, ஆ.தி(அ) ப.பு - 47</td><td>55</td><td>37</td></tr>
<tr><td colspan="7">சுருக்கம்:
பி.வ (இ.அ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதோர்)
பி.வ (இ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)
மி.பி.வ / சீ.ம - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர்
ஆ.தி - ஆதி திராவிடர்
ஆ.தி (அ) - ஆதி திராவிடர் (அருந்ததியர்)
ப.பு - பட்டியல் பழங்குடியினர்
NA - பொருந்தாது, ஏனெனில் இப்பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.</td></tr>
</table>

4.1.3. உச்ச வயது வரம்பு இல்லை என்பது 01.07.2026 அன்றோ அல்லது தெரிவு செய்யப்படும் நாளன்றோ அல்லது நியமனம் செய்யப்படும் நாளன்றோ தேர்வர் 60 வயதை நிறைவு செய்திருக்கக் கூடாது.

4.1.4. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 3(j)(vii) இன் படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வயதுச் சலுகை, ஏற்கனவே ஏதேனும் ஒரு வகுப்பு அல்லது பணி அல்லது பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரர்களுக்குப் பொருந்தாது.

4.1.5. ஆதாரச் சான்றுகள்:

4.1.5.1. தேர்வர்களின் பிறந்ததேதி, தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் அல்லது தமிழ்நாடு மேல்நிலைக்கல்வி வாரியத்தால் வழங்கப்படும் முறையே பத்தாம் வகுப்பு (SSLC) அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) மதிப்பெண் பட்டியலுடன் சரிபார்க்கப்படும். பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் தேர்வரின் பிறந்ததேதி குறிப்பிடப்படாமல் இருப்பின், தேர்வர்கள் அவர்களது பிறப்புச் சான்றிதழ் / மாற்றுச் சான்றிதழ் / பட்டப் படிப்பு / முதுநிலை பட்டப் படிப்பு மதிப்பெண் பட்டியல் போன்ற ஆவணங்களை தங்களது பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலுக்கு மாற்றாக பதிவேற்றம் செய்ய வேண்டும். வேறு எவ்வித ஆதாரமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. உரிய சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.1.5.2. வயது வரம்புச் சலுகை கோரும் தேர்வர்கள், அத்தகைய உரிமைக் கோரல்களுக்கான ஆதாரச் சான்றுகளை தேர்வாணையம் கோரும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும். அத்தகைய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறினால் அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2. கல்வித்தகுதி, தொழில்நுட்பத் தகுதி மற்றும் அனுபவம்:

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	தகுதி மற்றும் அனுபவம்
1.	சுரங்க முதலாள்	3803	சுரங்கப் பொறியியல் பட்டயத்துடன் தன்பாத்தில் உள்ள சுரங்க பாதுகாப்பு இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட சுரங்க முதலாள் சான்றிதழ் (வரையறுக்கப்பட்டது) பெற்றிருக்க வேண்டும்.
2.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	(i) குறைந்தபட்ச பொதுக் கல்வித்தகுதி (ii) மத்திய அரசு அல்லது மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் அல்லது தமிழ்நாடு மாநில தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட தானியங்கி பொறியியல் (மூன்றாண்டு) அல்லது இயந்திரவியலில் (மூன்றாண்டு) பட்டயக் கல்வித்தகுதி மற்றும் பல்சக்கரம் உள்ள இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக இயக்கூர்திகளை இயக்குவதற்கான செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்
3.	மீன்வள சார் ஆய்வாளர்	1760	i) தமிழ்நாடு மாநில அரசின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் வழிசெலுத்துதல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) ii) விலங்கியலை முதன்மை பாடமாக கொண்டு இளநிலை அறிவியல் பட்டம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) iii) மீன்வள அறிவியலில் இளங்கலை பட்டம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டம் பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.
4.	உதவி மேலாளர்	3789	i) தமிழ்நாடு மாநில அரசின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் வழிசெலுத்துதல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) ii) விலங்கியலை முதன்மை பாடமாக கொண்டு இளநிலை அறிவியல் பட்டம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) iii) மீன்வள அறிவியலில் இளங்கலை பட்டம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டம் பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.
5.	துணிநூல் ஆய்வாளர்	3676	i) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியினை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் ii) துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) கைத்தறி தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) துணிநூல் உற்பத்தியில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்

6.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	i) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியினை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் ii) துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) கைத்தறி தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) துணிநூல் உற்பத்தியில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
7.	வானொலி மேற்பார்வையாளர்	1748	தொழில்நுட்ப கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியலில் பட்டயம் அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.
8.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375	i) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியினை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் ii) கைத்தறி தொழில்நுட்பம் அல்லது துணிநூல் தொழில்நுட்பம் அல்லது கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பம் அல்லது துணிநூல் உற்பத்தியில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
9.	வரைவாளர், நிலை - III	2114	(i) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடலில் முதுநிலை பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது அமைப்பியலில் மூன்று வருடங்களுக்கு குறையாத முன்அனுபவத்துடன் மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட அமைப்பியல் பட்டயம் அல்லது கட்டடக்கலை உதவியாளர் பட்டயம் அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
10.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	i) ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் உடற்கல்வியியலில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் அல்லது உடற்கல்வி ஆசிரியருக்கான சான்றிதழ் (மேல்நிலை தரம்) மற்றும் கற்பித்தலில் ஒராண்டிற்கு குறையாமல் முன்அனுபவம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் ; மற்றும் ii) பழைய 11 ஆண்டு பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் தேர்ச்சி பெற்று கல்லூரிக் கல்விக்கு அனுமதிக்கப்பட கட்டாயம் தகுதியானவராக இருத்தல் வேண்டும் அல்லது தற்போதைய 10 ஆண்டு பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் தேர்ச்சி பெற்று மேல்நிலை படிப்பிற்கு அனுமதிக்கப்பட கட்டாயம் தகுதியானவராக இருத்தல் வேண்டும்
11.	பணிப்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு – VIIஐக் காண்க	i) அமைப்பியலில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் / நிறுவனத்தில் அமைப்பியலில் பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

12.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120	(i) மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட அமைப்பியலில் பட்டயம் அல்லது தலைமை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அகில இந்திய தொழில்நுட்ப கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட இணையான கல்வித் தகுதி: அல்லது தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட கட்டடக்கலை உதவியாளர் பட்டயம் அல்லது தலைமை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இந்திய அரசு அல்லது அகில இந்திய தொழில்நுட்பக் குழுமத்தால் அங்கீகரிக்கபட்ட இணைக் கல்வித் தகுதி
13.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	மாநில அரசின் தொழில்நுட்பக் கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட அமைப்பியலில் பட்டயம்
14.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650	(அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட அமைப்பியலில் பொறியியல் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகம் அல்லது மாநில அரசின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட அமைப்பியலில் பொறியியல் பட்டயம் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 25-ன் கீழுள்ள விளக்கம்-I-ல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் முழு நேரக் கல்வியாக பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருக்கலாம்.
15.	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376	(i) மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்பட்ட அமைப்பியல் பட்டயம் பட்டியல் இனத்தை சார்ந்த தேர்வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
16.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தொழிற்துறை / இயந்திரவியல் / உற்பத்தி / இயந்திர பொறியியல் வடிவமைப்பு மற்றும் வரைவு / இயந்திர மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு / தொழிற்துறை / இயந்திரவியல் / உற்பத்தி / இயந்திர பொறியியல் வடிவமைப்பு மற்றும் வரைவு / இயந்திர மின்னணுவியலில் பொறியியல் பட்டயம்.

			அல்லது (இ) அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
17.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு / தொழிற்துறை / இயந்திரவியல் / உற்பத்தி / இயந்திர மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு பொறியியல் / தொழிற்துறை பொறியியல் / இயந்திரவியல் பொறியியல் / உற்பத்தி பொறியியல் / இயந்திர மின்னணுவியல் பொறியியலில் பட்டயம். அல்லது (இ) மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு (CNC) இயந்திர தொழில் நுட்பவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி / பல்கலைக்கழகத்தின் மூலம் பெறப்பட்ட பொறியியல் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி வாரியத்தினால் வழங்கப்பட்ட பொறியியல் பட்டயம் அல்லது பயிற்சிக்கான தலைமை இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்ட மேற்படி தொழிற்பிரிவு தொடர்புடைய மேம்பட்ட தொழில்முறை பட்டயம். அல்லது (இ) பொறியியல் வரைபடம் / இயந்திர வரைவாளர் / அமைப்பியல் வரைவாளர் தொழிற்பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இயந்திரவியல் பிரிவு (தரம் 1) தொழிற்பிரிவில் ஏதேனும் ஒன்றில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ். இயந்திரவியல் (தரம்-I) தொழிற்பிரிவிற்கான பட்டியல் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு VIII-ன் பட்டியல் I-ல் உள்ளது
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /

			பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியல் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியல் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பட்டயம். அல்லது (இ) கம்மியர் மின்னணுவியல் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் பட்டயம் அல்லது (இ) மின் பணியாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / தயாரிப்பு / உற்பத்தியில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / தயாரிப்பு / உற்பத்தியில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) பொருத்துநர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள்	3627	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /

	பராமரிப்பு)		பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கணினி அறிவியல் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பு / கணினி தொழில்நுட்பம் / கணினி அறிவியல் மற்றும் பொறியியல் / கணினி பொறியியல் / தகவல் தொழில்நுட்பத்தில் பட்டயம் அல்லது (இ) தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப சாதனங்கள் பராமரிப்பு தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு / தொழிற்துறை / இயந்திரவியல் / உற்பத்தி / இயந்திர மின்னணுவியல்/ எந்திரனியல் மற்றும் தானியங்கு துறையில் பொறியியல்/ தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல் / தயாரிப்பு பொறியியல் / தொழிற்துறை பொறியியல்/ இயந்திரவியல் பொறியியல் / உற்பத்தி பொறியியல் / இயந்திர மின்னணுவியல் பொறியியல் / எந்திரனியல் மற்றும் தானியங்கி பட்டயம் அல்லது (இ) தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்முறை உற்பத்தி தொழில் நுட்பவியளாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பு பொறியியலில்

			பட்டயம் அல்லது (இ) இயந்திர வேலையாள் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட பொறியியல் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி வாரியத்தினால் வழங்கப்பட்ட பொறியியல் பட்டயம் அல்லது பயிற்சிக்கான தலைமை இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்ட மேற்படி தொழிற்பிரிவு தொடர்புடைய மேம்பட்ட தொழில்முறை பட்டயம் அல்லது (இ) ஏதேனும் ஒரு பொறியியல் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பொறியியல் தொழிற்பிரிவிற்கான பட்டியல் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு VIII-ன் பட்டியல் II-ல் உள்ளது
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / தானியங்கியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் பொறியியல் / தானியங்கியலில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) கம்மியர் மின் வாகனம் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயக்கூர்தி கம்மியர்)	3635	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / தானியங்கி பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /

			பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் பொறியியல் / தானியங்கியலில் பொறியியல் பட்டயம். அல்லது (இ) இயக்கூர்தி கம்மியர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு / தொழிற்துறை / இயந்திரவியல் / உற்பத்தி / இயந்திர மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தயாரிப்பு பொறியியல் / தொழிற்துறை பொறியியல் / இயந்திரவியல் பொறியியல் / உற்பத்தி பொறியியல் / இயந்திர மின்னணுவியலில் பொறியியல் பட்டயம். அல்லது (இ) உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பு பொறியியல் / குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்துதலில் பட்டயம் அல்லது (இ) குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால்

			அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட நவீன ஆடை / துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடை புனைதல் தொழில்நுட்பம் (Garment Fabrication) / ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை உருவாக்கம் / ஆடை தொழில்நுட்பம் (Apparel / Garment Technology) / நவீன ஆடை தொழில்நுட்பம் (Fashion Technology) / நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை தொழில்நுட்பத்தில் (Fashion Design & Clothing) பட்டயம். அல்லது (இ) தையல் வேலை தொழில்நுட்ப தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) கடைசலர் அல்லது "கருவி மற்றும் சாயம் தயாரிப்பாளர்" (PTJF) அல்லது " கருவி மற்றும் சாயம் தயாரிப்பாளர்" (சாயங்கள் மற்றும் அச்சுகள்) தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உலோகவியல் / இயந்திர மின்னணுவியல்/ உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் மற்றும் தொடர்புடைய / உற்பத்தி /

			தயாரிப்பு பொறியியலில் பட்டயம் அல்லது (இ) பற்றவைப்பவர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் கம்பியாள்)	3648	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல்/ மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) மின் கம்பியாள் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
34	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட அச்சுத் தொழில்நுட்பத்தில் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட அச்சுத் தொழில்நுட்பத்தில் பட்டயம் அல்லது (இ) கணினி அச்சுக் கோப்பாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தீயணைப்பு அறிவியல் / தொழிற்துறை பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் பட்டம் / தீயணைப்பு மற்றும் பாதுகாப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தொழிற்சாலை பாதுகாப்பு பொறியியல் / தீயணைப்பு மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு பொறியியல் /

			சுகாதாரம், பாதுகாப்பு & சுற்றுச்சூழல் / தொழிற்சாலை பாதுகாப்பு / தீயணைப்பு பாதுகாப்பில் பட்டயம் அல்லது (இ) தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட வேதிப்பொருள் / கருவியமைப்பு / கருவியமைப்பு கட்டுபாட்டு செயல்முறை / பெட்ரோலிய வேதிப்பொருளில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட வேதிப்பொருள் / கருவியமைப்பு / கருவியமைப்பு கட்டுபாட்டு செயல்முறையில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டயம் அல்லது (இ) இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மரைன் / மெக்கானிக்கல் / ஆட்டோமொபைல் பொறியியல்/ தொழில்நுட்பப் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மரைன் / மெக்கானிக்கல் / ஆட்டோமொபைல் பொறியியலில் பட்டயம். அல்லது (இ) கடல்சார் இயந்திர பொருத்துநர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட வேளாண்மை / வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் / ஆட்டோ மொபைல் / மெக்கானிக்கலில் பொறியியல்/ தொழில்நுட்பப் பட்டம்:

			அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட வேளாண் தொழில்நுட்பம் / வேளாண் பொறியியல் மற்றும் பண்ணை உபகரணங்கள் தொழில்நுட்பம் / வேளாண் பொறியியல் / ஆட்டோமொபைல் பொறியியல் / இயந்திர பொறியியலில் பட்டயம். அல்லது (இ) வேளாண் இயந்திர கம்மியர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆட்டொமொபைல்/ இயந்தரவியல் (ஆட்டோமொபைலில் சிறப்புடன்) / இயந்தரவியலில் பொறியியல்/ தொழில்நுட்பப் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆட்டொமொபைல்/ இயந்தரவியல் (ஆட்டோமொபைலில் சிறப்புடன்) / இயந்தரவியல் பொறியியலில் பட்டயம். அல்லது (இ) கம்மியர் டீசல் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (வண்ணப் பூச்சாளர் (பொது))	3779	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட பெயிண்ட் தொழில்நுட்பத்தில் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட பெயிண்ட் தொழில்நுட்பத்தில் பட்டயம். அல்லது (இ) வண்ணப் பூச்சாளர் (பொது) தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட

			அமைப்பியல் / இயந்திரவியலில் பொறியியல் / தொழில்நுட்பத்தில் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட அமைப்பியல் / இயந்திரவியலில் பொறியியல் / தொழில்நுட்பத்தில் பட்டயம். அல்லது (இ) குழாய் வேலையாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஏரோநாட்டிகல் இன்ஜினியரிங் / எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் / மெக்கட்ரானிக்ஸ் பொறியியலில்/ பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஏரோநாட்டிகல் இன்ஜினியரிங்/ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங்/ மெக்கட்ரானிக்ஸ் / எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங்கில் பட்டயம். அல்லது (இ) தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்ப வியலாளர்)	3782	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல் / மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு / மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பில் பொறியியல் / தொழில்நுட்பத்தில் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல் / மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு / மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பில் பட்டயம். அல்லது (இ) திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.

44.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்ப வியலாளர்)	3783	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட டெக்ஸ்டைல் / டெக்ஸ்டைல் கெமிஸ்ட்ரி / டெக்ஸ்டைல் பிராசஸிங்கில் பொறியியல் / தொழில்நுட்பத்தில் பட்டம்: அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட டெக்ஸ்டைல் டெக்னாலஜி / டெக்ஸ்டைல் பிராசஸிங்/ டெக்ஸ்டைல் இன்ஜினியரிங்கில் பட்டயம். அல்லது (இ) துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
45.	தொழில்நுட்ப உதவியாளர்	3380	தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பியல் பொறியியலில் பட்டயம்.
46.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	i) மேல்நிலை (பிளஸ் 2) தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்வி நிறுவனங்களில் அல்லது திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள காந்தி கிராம ஊரக கல்வி நிறுவனம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகம் அல்லது வேளாண்மை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் இரண்டு வருட வேளாண்மை பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
47.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	i) மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் ii) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் / காந்தி கிராம ஊரக பல்கலைக்கழகம் / தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர் இயக்குநரகம் ஆகிய ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் இரண்டு வருட தோட்டக்கலை பட்டயம் பெற்றிருக்க வேண்டும் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தோட்டக்கலையில் பட்டயம் பெற்றிருக்க வேண்டும்
48.	அளவர் (ம) உதவி வரைவாளர்	3234	(i) இந்திய அரசு, தொழிலாளர் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட ஜூலை 1952 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்திய பாடத்திட்டத்தின் கீழ் வரைவாளர் திறன் (அமைப்பியல்) தேர்ச்சி ; அல்லது (ii) தலைவர், தொழில்நுட்ப சோதனை வாரியம், மதராஸ் பொறியியல் குழுமம் மற்றும் மையத்தால் வழங்கப்பட்ட ராணுவ தொழில் வரைவாளர் (புலம்) சான்றிதழ்: அல்லது (iii) கைவினைஞர் பயிற்சி மையத்தால் வழங்கப்பட்ட

			வரைவாளர் (அமைப்பியல்) சான்றிதழ்: அல்லது (iv) வரைவாளர் (அமைப்பியல்) தொழிற்பிரிவில் தேசிய தொழிற்பிரிவு சான்றிதழ்: அல்லது இந்திய அரசின் தேசிய தொழிற்கல்வி பயிற்சி குழுமத்தால் தொழிற்பயிற்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட வரைவாளர் (அமைப்பியல்) தொழிற்பிரிவில் அல்லது அளவர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற்பிரிவு சான்றிதழ் மற்றும் 1961 தொழிற்பழகுநர் சட்டத்தின் கீழ் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சி அல்லது (v) அமைப்பியல் பட்டயம் கட்டாயம்பெற்றிருக்க வேண்டும்
49.	சாலை ஆய்வாளர்	பின்னிணைப்பு -VIIஐக் காண்க	அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வரைவாளர் (சிவில்) தொழிற்பயிற்சி சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அமைப்பியல் பொறியியலில் பட்டயம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
50	திறன்மிகு உதவியாளர், நிலை II (பொருத்துநர்)	3800	பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் இந்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் வழங்கப்பட்ட கம்மியர் (இயக்கூர்தி) அல்லது டீசல் கம்மியர் தொழிற் பிரிவில் தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ் மற்றும் தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
51.	தொழில்நுட்ப உதவியாளர்	3381	தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வித் துறையால் வழங்கப்படும் அச்சு தொழில்நுட்ப பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
52.	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329	(i) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (ii) தேசிய தொழிற்பிரிவு சான்றிதழுடன் (NTC) தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட கம்மியர் குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டல் / பொருத்துநர் / கம்மியர் மோட்டார் வாகனம் / மின்சார பணியாளர் / கம்மியர் கருவி தொழிற்பிரிவு சான்றிதழ் (அல்லது) இயந்திர பொறியியல் / மின் மற்றும் மின்னணு பொறியியல் / கருவி மற்றும் கட்டுப்பாட்டு பொறியியலில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
53.	தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327	(i) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (ii) தேசிய தொழிற்பிரிவு சான்றிதழுடன் தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்சாரப் பணியாளர் தொழிற்பிரிவு சான்றிதழ் மற்றும் 'B' உரிமம் (அல்லது) மின் மற்றும் மின்னணு பொறியியலில் பட்டயத்துடன் 'C' உரிமம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
54.	சுரங்க பணித்துணைவர்	3748	பத்தாம் வகுப்புடன் தன்பாத்தில் உள்ள சுரங்க பாதுகாப்பு இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட சுரங்க பணித்துணைவர் சான்றிதழ் (வரையறுக்கப்பட்டது) பெற்றிருக்க வேண்டும்.
55.	பணி ஆய்வாளர்	3821	தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அமைப்பியல் பொறியியலில் பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.
56.	கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772	கைத்தறி தொழில்நுட்பம் அல்லது துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டயம்

4.2.1. தேர்வர்கள் இவ்வறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி, தொழில்நுட்பத் தகுதி மற்றும் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். பதவிக்கான நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை பெற்ற பின்னர் அனுபவம் மற்றும் பயிற்சி காலத்திற்கான தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

4.2.2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பட்டயம் / தொழிற்பயிற்சி / தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / இளங்கலைப் பட்டம்/ முதுகலைப்பட்டம் / கல்வித்தகுதி முறையே 10-ஆம் வகுப்பு + 12-ஆம் வகுப்பு / பட்டயப்படிப்பு / தொழிற் பயிற்சி சான்றிதழ் அல்லது இணைக்கல்வித் தகுதி + இளங்கலையில் பட்டம் + முதுகலைப்பட்டம் என்ற வரிசையில் பெற்றிருக்க வேண்டும்.

4.2.3. கல்வி தகுதியானது பட்டயம் என நிர்ணயிக்கப்பட்ட பதவிகளுக்கு அந்த பாடத்தில் பட்டக்கல்வி பெற்றிருப்பது உயர் தகுதியாக கருதப்படும். தேர்வர்கள் அப்பாடத்தில் பட்டக்கல்வித் தகுதி கொண்டிருந்தாலும் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக் குறியீடு:3101) மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவிக் குறியீடு:3104) பதவிகளைத் தவிர மற்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவார்.

4.2.4. இரண்டு வருட வேளாண்மை பட்டயக் கல்வித் தகுதி இல்லாத தேர்வர்கள் அதே பாடத்தில் உயர் கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக் குறியீடு:3101) பதவிக்கும், இரண்டு வருட தோட்டக்கலை பட்டயக் கல்வித் தகுதி இல்லாத தேர்வர்கள் அதே பாடத்தில் உயர் கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவிக் குறியீடு: 3104) பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர். மேலும் வேளாண்மை தொழில்நுட்பத்தில் மூன்று வருட பட்டயக் கல்வித் தகுதி கொண்டவர்கள் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக்குறியீடு: 3101) பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

4.2.5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள சாலை ஆய்வாளர் (பின்னிணைப்பு VII ஐக் காண்க) பதவிக்கு வரைவாளர் (சிவில்) தொழிற்பயிற்சி சான்று பெறாமலும் மற்றும் மோட்டார் வாகன பராமாரிப்புத் துறையில் உள்ள திறன்மிகு உதவியாளர், நிலை II (பொருத்துநர்) (பதவிக் குறியீடு: 3800) பதவிக்கு கம்மியர் (மோட்டார் வாகனம்) அல்லது டீசல் கம்மியர் தொழிற்பயிற்சி சான்று பெறாமலும் அதே பாடப்பிரிவில் உயர் கல்வித் தகுதி பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

4.2.6. ஆதாரச் சான்றுகள்:

4.2.6.1. பத்தாம்வகுப்பு / மேல்நிலைக்கல்வி / தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / தொழிற்பயிற்சி சான்றிதழ் / பட்டயம் / பட்டம் / முதுகலைப்பட்டம் / ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டம் அல்லது அப்படிப்புகளுக்கான தற்காலிக பட்டம் / தற்காலிக பட்டய சான்றிதழ் அல்லது ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழுடன் தற்காலிக / இறுதி சான்றிதழ் ஆகியவை கல்வித்தகுதிக்கு ஆதாரமானவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

4.2.6.2. தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / தொழிற்பயிற்சி / பட்டயம் / பட்டப்படிப்பு / முதுகலைப்பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அறிவிக்கை தேதிக்கு முன் பெறப்படவில்லை எனில் தேர்வர்கள் தங்களது கல்வித்தகுதியை அறிவிக்கைதேதி அன்று அல்லது அறிவிக்கைத்தேதிக்கு முன்னர் பெற்றதற்கு ஆதாரமான ஆவணங்களை அதாவது தற்காலிக பட்டயம் / தொழிற்பயிற்சி / பட்டச்சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு VI ல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் உள்ளவாறு நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் தலைவரிடம் சான்று பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.3. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட அதிகமான கல்வித்தகுதியைப் பெற்றிருப்பதாக உரிமைகோரும் தேர்வர், அதற்கு ஆதாரமாக அறிவிக்கை நாள் அன்றோ அதற்கு முன்னரோ பெறப்பட்ட சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.4. நகர் ஊரமைப்புத் துறையில் உள்ள வரைவாளர், நிலை III (பதவிக் குறியீடு: 2114) மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் (பயிற்சிப் பிரிவு) துறையில் உள்ள விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் (பதவிக் குறியீடு: 1731) ஆகிய பதவிகளுக்கு அனுபவம் கோரும் தேர்வர்கள் அவர்களது அனுபவ சான்றிதழினை இவ்வறிவிக்கையில் பின்னிணைப்பு V-ல் உள்ள அனுபவ சான்றின் படிவத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.5. கல்வித்தகுதி / தொழில்நுட்பத் தகுதி / அனுபவம் ஆகியவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட படிப்புக்கான காலஅளவு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேர்வுகளில், விண்ணப்பத்தில் உள்ள உரிமை கோரலுக்கும் பதிவேற்றப்பட்ட ஆவணங்களுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின், தேர்வரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2.6.6. பட்டப்படிப்புச் சான்றிதழ் தொலைந்து விட்டாலோ அல்லது குறிப்பிட்ட காரணங்களுக்காக உடனடியாக சான்றிதழ் கிடைக்கப் பெறாமலிருந்தாலோ, பட்டப்படிப்புச் சான்றிதழ் பதிவேட்டின் சுருக்கக்குறிப்பு கல்வித்தகுதிக்கு சான்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

4.2.6.7. இணைய வழியில் விண்ணப்பிக்கும் போது இணைக்கல்வித் தகுதியைக் கோரும் தேர்வர்கள் அதற்குரிய அரசாணையின் நகலினை பதிவேற்றம் செய்ய வேண்டும் / மூலச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ அரசாணையின் நகலினை பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் அவர்களின் விண்ணப்பம் உரிய நடைமுறைக்குப் பின்பு நிராகரிக்கப்படும். இணைக்கல்வித் தகுதி தொடர்பான அரசாணைகள் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் இணையதளத்தில் (www.tnsche.tn.gov.in) உள்ளன.

4.3. மருத்துவ மற்றும் உடற்தகுதி:

4.3.1. பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் உடல் தகுதிச் சான்றிதழை பணி நியமனத்தின் போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.2. பின்வரும் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வர்களின் பார்வைத்திறன் கீழே குறிப்பிட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	**பதவியின் பெயர்**	**பதவிக் குறியீடு**	**பார்வைத் தரம்**
1.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	தரம் III அல்லது மேம்பட்ட தரம். நிறக்குருடு தகுதியில்லை
2.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	
3.	பணி ஆய்வாளர்	3821	
4.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	தரம் III இயல்பான நிறப் பார்வைத்திறனுடன்
5.	துணிநூல் ஆய்வாளர்	3676	தரம் III நிறக்குருடு மற்றும் மாலைக்கண் குறைபாடு தகுதியில்லை
6.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375	
7.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	
8.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னினைப்பு-VII-ஐக் காண்க	தரம் III அல்லது மேம்பட்ட தரம். நிறக்குருடு மற்றும் மாலைக்கண் குறைபாடு தகுதியில்லை
9.	சாலை ஆய்வாளர்		
10.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120	
11.	வானொலி மேற்பார்வையாளர்	1748	
12.	சுரங்க முதலாள்	3803	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
13.	மீன்வள சார் ஆய்வாளர்	1760	
14.	உதவி மேலாளர்	3789	
15.	வரைவாளர், நிலை-III	2114	
16.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	
17.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	
18.	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376	
19.	தொழில்நுட்ப உதவியாளர்	3380	
20.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650	
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	

23.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627	
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629	
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635	
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648	
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேசைத்தள வெளியீட்டு இயக்குபவர்)	3773	
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774	
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775	
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776	
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777	
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778	
45.	இளநிலை பயிற்சி அலுவலர் (வண்ணப் பூச்சாளர் (பொது))	3779	
46.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780	
47.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781	

48.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
49.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)	3783	
50.	அளவர்/ உதவி வரைவாளர்	3234	
51.	தொழில்நுட்ப உதவியாளர்	3381	
52.	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329	
53.	தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327	
54.	சுரங்கப் பணித்துணைவர்	3748	
55.	திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)	3800	
56.	கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772	

4.3.3. பார்வைத்திறனில் குறைபாடு உள்ள தேர்வர்கள் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் தகுதிவாய்ந்த கண்சிகிச்சை நிபுணரிடமிருந்து கண்பார்வைத் திறன் சான்றிதழ் பெற்று பணியில் சேரும்போது பணிநியமன அலுவலரிடம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.4. பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் சாலை ஆய்வாளர் (பின்னிணைப்பு-VIIஐக் காண்க), இளநிலை வரைதொழில் அலுவலர் (பதவிக் குறியீடு: 3120), இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் (பதவி குறியீடு.1853), இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் (பதவி குறியீடு.3375), துணிநூல் ஆய்வாளர் (பதவி குறியீடு.3676), உதவி வேளாண்மை அலுவலர் (பதவி குறியீடு.3101), உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவி குறியீடு.3104), பணி ஆய்வாளர் (பதவிக் குறியீடு: 3821) மற்றும் வானொலி மேற்பார்வையாளர் (பதவிக் குறியீடு: 1748) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு VI-ல் குறிப்பிட்டுள்ளவாறு அரசு மருத்துவனையில் பணிபுரியும் கண் மருத்துவ நிபுணரிடமிருந்து கண் தகுதி சான்றிதழினை பெற்று இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் மேற்கண்ட பதவிகளுக்கு பரிசீலனை செய்யப்படமாட்டாது.

4.4. தமிழ் மொழியில் தகுதி:

4.4.1. தேர்வர்கள் தேர்வு அறிவிக்கை வெளியாகும் நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். பின்வரும் தகுதியைப் பெற்றிருக்கும் ஒருவர் தமிழில் போதிய தகுதி உடையவராகக் கருதப்படுவார். பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியில் / உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் / மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் / பட்டப் படிப்பில், தமிழை ஒருமொழிப் பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; அல்லது உயர்நிலை பள்ளிப்படிப்பை / பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்..

4.4.2. தேர்வர் தங்களது பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு / இளங்கலை பட்டம் / முதுகலைப் பட்ட மதிப்பெண் சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றையோ, தமிழில் இரண்டாம்நிலை மொழித்தேர்வில் (முழுத் தேர்வு) தேர்ச்சி பெற்றதற்கான சான்றையோ இணையதளத்தில் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்போது அவற்றை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.4.3 போதிய தமிழறிவுப் பெற்றதற்கான சான்றாவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் தேர்வர், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் (தமிழில்) தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

4.5. தேர்வுக்கு விண்ணப்பித்தலில் உள்ள கட்டுப்பாடுகள்:

4.5.1. ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., பி.வ.(இ.அ) மற்றும் பி.வ.(இ) தவிர "ஏனையோர்" இந்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசு / யூனியன் பிரதேசப் பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் முறையான பணியில் பணிபுரிந்தவர்கள் இப்பதவிகளுக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

4.5.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் கீழ்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	துறை / நிறுவனம்
1.	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119	போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு
2.	உதவி மேலாளர்	3789	தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்

4.6. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான பொருத்தமென அடையாளப் படுத்தப்பட்ட பதவிகள்

4.6.1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீட்டிற்கு, ஏற்றதாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	பொருத்தமான நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளின் வகைகள்
1.	வானொலி மேற்பார்வையாளர்	1748	அனைத்து வகையான நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகள்
2.	துணிநூல் ஆய்வாளர்	3676	
3.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375	
4.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	
5.	வரைவாளர், நிலை-III	2114	
7.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120	
8.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3650	
9.	சிறப்பு பணிப்பார்வையாளர்	3376	
10.	தொழில்நுட்ப உதவியாளர்	3380	
11.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	
12.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	
13.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	
14.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	
15.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	
16.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	
17.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627	
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629	
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635	
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	

25.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648	
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773	
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774	
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775	
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776	
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777	அனைத்து வகையான நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகள்
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778	
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (வண்ணப் பூச்சாளர் (பொது))	3779	
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780	
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781	
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782	
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)	3783	
40.	அளவர் / உதவி வரைவாளர்	3234	
41.	தொழில்நுட்ப உதவியாளர்	3381	
42.	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329	
43.	தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327	
44.	திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)	3800	
45.	பணி ஆய்வாளர்	3821	
46.	கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772	
47.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	கண் பார்வையின்மை தவிர மற்ற அனைத்து வகைகளும்
48.	மீன்வள சார் ஆய்வாளர்	1760	LV, LC, DF
	சுரங்க முதலாள்	3803	AC, LC, SLD
49.	சுரங்கப் பணித்துணைவர்	3748	
50.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க	HH, LD (OA,OL, Others), LC, AC, DF, SLD and MD
51.	சாலை ஆய்வாளர்		
52.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	HI, HH, LD (OA,OL), LC, DF, AC, SLD, MI, MD of the above
53.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	LV, HH/ HI, LD (OA,OL, OAL), LC, DF, AC, MD of above
54.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	LV, HH, LD, CP, LC, DF, AC, MuD, ASD, SLD, MI

சுருக்கம்:

LV	– Low Vision	CP	– Cerebral Palsy
VI	– Visually Impaired	LC	– Leprosy Cured
HH	– Hard of Hearing	AC	– Acid Attack Victims
HI	– Hearing Impaired	DF	– Dwarfism
LD	– Locomotor Disability	MuD	– Muscular Dystrophy
OA	- One Arm	SLD	– Specific Learning Disability
OL	- One Leg	MD	– Multiple Disabilities
OAL	- One Arm, One Leg	MI	– Mentally Ill
ASD	– Autism Spectrum Disorder		

LD (others) – Scoliosis and / or Kyphoscoliosis, kyphosis, Spinal Cord Injuries and Spine Kyphoscoliosis

4.6.2. மேற்குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளி வகையினைச் சேர்ந்த தேர்வர்கள் மட்டுமே இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். எனவே தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முன்னர் இதனை சரியாக படித்து இத்தேர்வுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. தேர்வு நடைமுறை:

5.1. ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) ஒரு படிநிலை எழுத்துத்தேர்வு உடையது. இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்ட உரிமைக்கோரல்களின் அடிப்படையில், தேர்வர் எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

5.2. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு முன் கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும். அறிவிக்கையில் பத்தி 6-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீடு விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தகுதியான தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தால் இறுதி செய்யப்படும். தேர்வர்கள், கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:3 / 1:2 (அனுபவம் கோரப்படாத பதவிகளுக்கு) என்ற விகிதத்திலும், 1:5 (அனுபவம் கோரப்படும் பதவிகளுக்கு) என்ற விகிதத்திலும் அனுமதிக்கப்படுவார்கள்.

5.3. கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்குப் பின்னர், எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் இடஒதுக்கீடு விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வர்கள் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு (பொருந்தும் இடங்களில்) அனுமதிக்கப்படுவர். கலந்தாய்வு தேவைப்படும் பதவிகளுக்கு தேர்வர்கள் பொது மற்றும் அனைத்து ஒதுக்கீட்டு பிரிவினரும் முறையே 1:3 மற்றும் 1:1.5 என்ற விகிதத்தில் மூலசான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கும் அனுமதிக்கப்படுவர். கலந்தாய்வு தேவைப்படாத பதவிகளுக்கு அனைத்து பிரிவினரும் 1:1.2 என்ற விகிதத்தில் மூலசான்றிதழ் சரிபார்ப்பிற்கு மட்டும் அனுமதிக்கப்படுவர்.

5.4. கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பின் போது, தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட அனுபவ சான்றிதழ்கள் உரிய துறைத்தலைமை / அமைப்பினரால் அமைக்கப்படும் குழுவினால் சரிபார்க்கப்படும். தேர்வர்களின் அனுபவ சான்றிதழினை உரிய நடைமுறைகளுக்குப் பின் இக்குழு நிராகரிக்கலாம். இக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

5.5. நியமன ஒதுக்கீட்டு விதி பொருந்தாத ஒரேயொரு பணியிடத்தை மட்டும் கொண்ட பதவிகளைப் பொறுத்தவரை, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அனுமதிக்கப்படும் தேர்வர்களின் எண்ணிக்கை மூன்றாக இருக்கும்.

5.6. தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் (தாள்-I-ன் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II) பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும், நியமன இட ஒதுக்கீட்டு விதிகளுக்கு உட்பட்டும் இறுதி தெரிவு மேற்கொள்ளப்படும். தேர்வர்கள், அவர்களது தரவரிசையின் அடிப்படையில் கலந்தாய்வில் (பொருந்தும் இடங்களில்) பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

5.7. தரவரிசை நடைமுறை:

5.7.1. எழுத்துத் தேர்வில் தேர்வர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் அல்லது தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். எழுத்துத் தேர்வில் (தாள்-I-ல் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II) மற்றும் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் இறுதி தரவரிசையை தீர்மானிக்கும்.

5.7.2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வர்கள் சம மதிப்பெண்களைப் பெற்றால், அதிக கல்வித் தகுதி பெற்ற தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.7.3. எழுத்துத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களும் கல்வித் தகுதியும் ஒரே மாதிரியாக இருப்பின், வயதில் மூத்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.7.4. வயதும் ஒரே மாதிரியாக இருப்பின், விண்ணப்ப எண்ணிலிருந்து தீர்மானிக்கப்பட்டபடி, ஆணையத்திற்கு முன்னதாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.7.5. தேர்வர்கள் எழுத்துத் தேர்வின் தாள் I மற்றும் தாள் II தேர்விலும் கலந்து கொள்வது கட்டாயமாகும். தாள் I மற்றும் தாள் II ஆகிய இரண்டிலும் கலந்து கொள்ளாத தேர்வர்கள் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் கூட, தெரிவிற்கு கருதப்பட மாட்டார்.

6. தேர்வுத் திட்டம்:

பாடம்	தரம்	வினாக்களின் எண்ணிக்கை	நேரம்	அதிகபட்ச மதிப் பெண்கள்	குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள்		தேர்வின் வகை	தேர்வு முறை
					ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), பி.வ.(இ),	ஏனை யோர்*		
தாள் I	பத்தாம் வகுப்பு		3 மணி நேரம்				கொள் குறி வகை	OMR
பகுதி அ தமிழ் தகுதித் தேர்வு		100		150	60	60		
பகுதி ஆ பொது அறிவு		75		150	135	180		
பகுதி இ திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு		25						
தாள் II பாடத்தாள்	பட்டயம்/ தொழிற் பயிற்சி	200	3 மணி நேரம்	300				CBT
மொத்தம் (தாள் I ல் பகுதி ஆ மற்றும் பகுதி இ மற்றும் தாள் II)				450				
* ஏனையோர் - ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), பி.வ.(இ) பிரிவினைச் சாராதவர்கள்								
OMR - ஒளிக்குறி உணரி				CBT – கணினிவழித் தேர்வு				

6.1. தாள் II – பாடத் தாள்

வ. எண்	பாடத் தாள்	பாடக் குறியீடு	தரம்	வினாத்தாள் மொழி	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு
1.	வேளாண்மை	431	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	உதவி வேளாண்மை அலுவலர்	3101
2.	தானியங்கி மற்றும் இயந்திர பொறியியல்	512	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-II	2119
3.	அமைப்பியல் பொறியியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115
					பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க
					இளநிலை வரைதொழில் அலுவலர்	3650
					சிறப்பு பணிப்பார்வையாளர்	3376
					தொழில்நுட்ப உதவியாளர்	3380
					பணி ஆய்வாளர்	3821
4.	அமைப்பியல் பொறியியல் மற்றும் கட்டடக் கலையியல்	509	பட்டயம்	ஆங்கிலம்	இளநிலை வரைதொழில் அலுவலர்	3120
5.	மின்னணுவியல் / மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல்	447	பட்டயம்	ஆங்கிலம்	வானொலி மேற்பார்வையாளர்	1748
6	மீன்வளத் தொழில்நுட்பம், மீன்வள அறிவியல் மற்றும் வழிசெலுத்துதல் பொறியியல்	589	பட்டயம்	ஆங்கிலம்	மீன்வள சார் ஆய்வாளர்	1760
					உதவி மேலாளர்	3789

7.	கைத்தறி தொழில்நுட்பம், துணிநூல் தொழில்நுட்பம் மற்றும் துணிநூல் உற்பத்தி	445	பட்டயம்	ஆங்கிலம்	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	3375
					இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853
					துணிநூல் ஆய்வாளர்	3676
					கொள்முதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்	3772
8.	தோட்டக்கலை	432	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104
9.	சுரங்கப் பொறியியல்	605	பட்டயம்	ஆங்கிலம்	சுரங்க முதலாள்	3803
10.	உடற்கல்வியியல்	603	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731
11.	அச்சுத் தொழில்நுட்பம்	484	பட்டயம்	ஆங்கிலம்	தொழில்நுட்ப உதவியாளர்	3381
12.	நகர் ஊரமைப்பு	508	முதுநிலை பட்டயம் / பட்டயம்	ஆங்கிலம்	வரைவாளர், நிலை-III	2114
13.	தொழிற்பிரிவு: மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்	534	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619
14.	தொழிற்பிரிவு: அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்	532	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617
15.	தொழிற்பிரிவு: டீசல் கம்மியர்	521	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (டீசல் கம்மியர்)	3778
16.	தொழிற்பிரிவு: வரைவாளர் (சிவில்)	388	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	சாலை ஆய்வாளர்	பின்னிணைப்பு-VII-ஐக் காண்க
17.	தொழிற்பிரிவு: கணினி அச்சுக் கோப்பாளர்	612	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி அச்சுக் கோப்பாளர்)	3773
18.	தொழிற்பிரிவு: மின் பணியாளர்	438	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623
					தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்)	3327
19.	தொழிற்பிரிவு: கம்மியர் மின்னணுவியல்	535	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622
20.	தொழிற்பிரிவு: பொறியியல் வரைபடம் மற்றும் வரைவாளர் (இயந்திரவியல் மற்றும் அமைப்பியல்)	551	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621
21.	தொழிற்பிரிவு: தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை	610	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறை பாதுகாப்பு மேலாண்மை)	3774
22.	தொழிற்பிரிவு: பொருத்துநர்	436	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625
23.	தொழிற்பிரிவு: தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியலாளர்	538	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629

24.	தொழிற்பிரிவு: தகவல் தொடர்பு தொழில் நுட்ப சாதனங்கள் பராமரிப்பு	537	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627
25.	தொழிற்பிரிவு: இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்	608	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக் கருவி இயந்திரவியலாளர்)	3775
26.	தொழிற்பிரிவு: இயந்திர வேலையாள்	539	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630
27.	தொழிற்பிரிவு: உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்	543	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636
28.	தொழிற்பிரிவு: கடல்சார் இயந்திரப் பொருத்துநர்	614	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கடல்சார் இயந்திர பொருத்துநர்)	3776
29.	தொழிற்பிரிவு: வேளாண் இயந்திர கம்மியர்	609	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (வேளாண் இயந்திர கம்மியர்)	3777
30.	தொழிற்பிரிவு: கம்மியர் மின்சார வாகனம்	542	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634
31.	தொழிற்பிரிவு: கம்மியர் மோட்டார் வாகனம்	437	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635
32.	தொழிற்பிரிவு: வண்ணப் பூச்சாளர் (பொது)	615	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (வண்ணப் பூச்சாளர் (பொது))	3779
33.	தொழிற்பிரிவு: குழாய் வேலையாளர்	613	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் வேலையாளர்)	3780
34.	தொழிற்பிரிவு: கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்	435	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637
35.	தொழிற்பிரிவு: தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்	611	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (தொலைநிலை விமானி / ஆளில்லா விமான பயிற்சியாளர்)	3781
36.	தொழிற்பிரிவு: தையல் தொழில்நுட்பம்	546	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640
37.	தொழிற்பிரிவு: அளவர் மற்றும் வரைவாளர் (சிவில்)	490	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	அளவர் மற்றும் உதவி வரைவாளர்	3234
38.	தொழிற்பிரிவு: திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்	616	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன் மின்னணுவியல் தொழில்நுட்பவியலாளர்)	3782
39.	தொழிற்பிரிவு: தொழில்நுட்பவியலாளர் (செயல்பாடுகள்)	523	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	தொழில்நுட்பவியலாளர் (இயக்கம்)	3329
40.	தொழிற்பிரிவு: துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்	626	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்)	3783
41.	தொழிற்பிரிவு: கடைசலர், கருவி மற்றும் டை மேக்கர்	552	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646
42.	தொழிற்பிரிவு: பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)	440	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647
43.	தொழிற்பிரிவு: கம்பியாள்	550	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648

44.	தொழிற்பிரிவு: பணிமனை கணக்கீடு அறிவியல்	540	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631
45.	டீசல் கம்மியர் மற்றும் கம்மியர் (மோட்டார் வாகனம்)	627	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்	திறன்மிகு உதவியாளர், நிலை-II (பொருத்துநர்)	3800
46.	சுரங்க பணித் துணைவர்	591	சான்றிதழ்	ஆங்கிலம் மற்றும் தமிழ்	சுரங்கப் பணித்துணைவர்	3748

6.2. தேர்வர் தாள்-I-ன் பகுதி அ-ல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 40% (அதாவது 60 மதிப்பெண்கள்) பெற்றிருந்தால் மட்டுமே தாள்-I-ன் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II மதிப்பீடு செய்யப்படும்.

6.3. தாள் I –ல் பகுதி ஆ மற்றும் பகுதி இ விற்கான வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.

6.4. மாற்றுத் திறனாளி தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் தாள்-I பகுதி-அ-வினை (தமிழ் தகுதித் தேர்வு) எழுதுவதிலிருந்து விலக்குப் பெறலாம். அத்தகைய விலக்கு கோரும் மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது தேவையான விவரங்களை தவறாமல் அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பின்னர் பெறப்படும் எந்த ஒரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்தகைய தேர்வர்கள் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு-II இல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் மாற்றுத்திறனாளி சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

6.5. எழுத்துத் தேர்வுகளுக்கான பாடத்திட்டங்கள் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு-III-இல் உள்ளது. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலகு வாரியான கேள்விகளின் பகிர்மானம் உத்தேசமானது. தேவைப்பட்டால், ஒவ்வொரு அலகிலும் உள்ள கேள்விகளின் எண்ணிக்கையை ஓரளவு அதிகரிக்கவோ குறைக்கவோ தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

6.6. தேர்வின் போது பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள், இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு-IV இல் உள்ளன.

6.7. இவ்வறிவிக்கை ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி பதிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது. ஏதேனும், சந்தேகம் இருப்பின் ஆங்கில பதிப்பே இறுதியானதாகும்.

7. பணி நியமன இட ஒதுக்கீடு:

இத்தெரிவில் உள்ள அனைத்து பதவிகளுக்கும் இட ஒதுக்கீட்டு நியமன விதிகள் பொருந்தும். பல்வேறு இனங்களைச் சார்ந்த தேர்வர்களுக்கான இட ஒதுக்கீட்டு விவரங்கள் இவ்வறிவிக்கையின் பின்னிணைப்பு II-இல் கொடுக்கப்பட்டுள்ளன. பணிநிலை எண்ணிக்கை 1 என்று நிர்ணயிக்கப்பட்ட இளநிலை பயிற்சி அலுவலர் (இரசாயன தொழிற்சாலைக்கருவி இயந்திரவியலாளர்) (பதவிக் குறியீடு: 3775), இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் வேளாண் இயந்திரங்கள்) (பதவிக் குறியீடு:3777), இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் ஈரப்பதனிடும் தொழில்நுட்பவியலாளர்) (பதவிக் குறியீடு:3783) ஆகிய பதவிகளுக்கு இடஒதுக்கீட்டு விதிகள் பொருந்தாது.

8. தேர்வர்களுக்கான தகவல் பரிமாற்றம்

8.1. தேர்வர்களுக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டு, தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு ஏதுவாக www.tnpscexams.in என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அனுமதிச்சீட்டு அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. தேர்வர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையினையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

8.2. எழுத்துத் தேர்வு முடிவுகள், சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வு நாள் மற்றும் நேரம் ஆகியவை தேர்வாணைய இணையதளத்தில் www.tnpsc.gov.in வெளியிடப்படும். தேர்வர்களுக்கு இது குறித்து தனியாக அஞ்சல் மூலமாக தகவல் அனுப்பப்படமாட்டாது. இருப்பினும், மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள், தேதிகள், சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் வாய்மொழித் தேர்வு முதலியன குறித்த தகவல்களை, விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்டுள்ள அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தெரிவிப்பது தேர்வாணையத்தினால் விண்ணப்பதாரார்களுக்கு வழங்கப்படும் கூடுதல் வசதியாகும். எனவே, தேர்வர்கள் இது தொடர்பாக

தேர்வாணைய இணையதளத்தை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தவறான கைப்பேசி எண் / மின்னஞ்சல் முகவரி காரணமாகவோ அல்லது தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களாலோ தேர்வர்களை குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடையாவிட்டாலும், சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல், தாமதம் ஏற்பட்டாலும் தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாதது குறித்து தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

9. தேர்வாணையத்துடனான தகவல் தொடர்பு:

9.1. தெளிவுரை வேண்டும் தேர்வர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரிலோ அல்லது 1800 419 0958 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலமாகவோ, அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

9.2. ஒருமுறைப் பதிவு மற்றும் கணினிவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களை helpdesk@tnpscexams.in எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். இதர சந்தேகங்களை grievance.tnpsc@tn.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அஞ்சல் வழியாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அனைத்தும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தேர்வாணையச் சாலை, வ. உ.சி. நகர், பூங்கா நகர், சென்னை-600 003, எனும் முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

9.3. தேர்வர்கள் பின்வரும் விவரங்களுடன் தேர்வாணையத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்விவரங்கள் இல்லாமல் பெறப்படும் தகவல்கள் கவனிக்கப்படமாட்டாது.

அ) தேர்வின் பெயர்
ஆ) அறிவிக்கை எண் மற்றும் ஆண்டு
இ) பதிவு எண்
ஈ) தேர்வரின் பெயர் (முழுமையாக)
உ) விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள முழுமையான முகவரி
ஊ) தற்போது செயல்பாட்டில் உள்ள சரியான மின்னஞ்சல் முகவரி

9.4. வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரி வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டாது. எழுத்துத்தேர்வில் தோல்வியடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்கு காரணங்கள் கேட்டு அல்லது விடைப்புத்தகங்களை மறுமதிப்பீடு செய்யும்படி கேட்டு தேர்வர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டாது.

9.5. இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் / எழுத்துத் தேர்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்வு ஆகியவற்றின் தேதியில் மாற்றம் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்யக் கோருதல் / தேர்வு தொடர்பான வழிமுறைகளில் மாற்றம் / குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் மற்றும் தகுதிகளில் மாற்றம் கோரி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

9.6. தேர்வு பணிகள் செயல்முறையில் உள்ளபோது, அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல் தேர்வு செயல்முறைகள் வரை தகவல் அறியும் உரிமைச் சட்டம் கீழ் பெறப்படும் மனுக்கல் உட்பட எந்தவொரு மனுக்கள் / கோரிக்கைகளுக்கு தேர்வு செயல்பாடுகள் குறித்த விபரங்கள் / தகவல்கள் / விளக்கங்கள் அளிக்கப்படமாட்டாது.

9.7. வெளிப்படையான தரவுக் கொள்கையின் (Open Date Policy) ஒரு பகுதியாக, தெரிவு பணிகள் நிறைவடைந்த பிறகு அனைத்து தகவல்களும் தேர்வாணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்படும்.

10. வழக்குகள்:

இத்தெரிவு தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு இத்தெரிவு தற்காலிகமானதாகும்.

செயலாளர்

பின்னிணைப்பு – I
இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை

1. **இணையதளம்**: தேர்வர்கள் www.tnpscexams.in என்ற தேர்வாணையத்தின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **ஒருமுறைப் பதிவு:**

2.1. தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள ஒருமுறைப் பதிவு பிரிவில் பதிவு செய்த பின்பு தேர்விற்கான விண்ணப்பத்தினை நிரப்பத் தொடங்க வேண்டும். தேர்வர்கள் ஒருமுறைப்பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை செல்லுபடியாகும்.

2.2. ஒருமுறைப்பதிவின்போது, தேர்வர்கள் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து, 20KB - 50KB அளவில் "Photograph.jpg" என்றும், கையொப்பத்தினை 10KB - 20KB அளவில் "Signature.jpg" என்றும் CD / DVD / pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் 200 DPI என்ற அளவில் ஒளிச்செறிவு இருக்குமாறு சேமித்து, பதிவேற்றம் செய்வதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.

2.3. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது தேர்வரின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கென தனித்தனியே தன்விவரப்பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். தேர்வர் தேர்வு எழுதவிரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே கணினிவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

2.4. ஒரு முறைப்பதிவு (OTR) செய்வதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவை கட்டாயமாகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு தேர்வரும் தனக்கான தனி மின்னஞ்சல் முகவரியையும், கடவுச் சொல்லையும் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். எந்த தேர்வரும் தனது மின்னஞ்சல் முகவரி, கடவுச் சொல் மற்றும் அலைப்பேசி எண்ணை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தேர்வர் தமக்கான மின்னஞ்சல் முகவரி ஏதும் வைத்திருக்கவில்லையெனில், அவர் விண்ணப்பிப்பதற்கு முன்னரே, புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி கணினிவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒரு முறைப்பதிவு அல்லது கணினிவழி (Online) விண்ணப்பங்கள் சார்ந்த கேள்விகள் / கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் பெறப்பட்டால் மட்டுமே பதில் அளிக்கப்படும்.

2.5. தேர்வர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், தேர்வரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. தேர்வர் ஒருமுறைப்பதிவில் தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தேர்வரின் உண்மைத்தன்மையினை உறுதி செய்வதற்காக மட்டும் Central Identities Data Repository-(CIDR) க்கு ஆதார் தொடர்புடைய விவரங்களை தேர்வாணையம் பகிர்ந்துக்கொள்ளும். வருங்காலத்தில் விண்ணப்பிக்க இருக்கும் தேர்வர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப்பதிவில் உள்நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும்.

2.6. ஒருமுறைப்பதிவின் போது அளிக்கப்பட வேண்டிய தகவல்கள்

2.6.1. தேர்வர் கணினிவழியில் பதிவு செய்யும் பொழுது, பத்தாம் வகுப்பு (SSLC) பதிவு எண், சான்றிதழ் எண், தேர்ச்சி பெற்ற ஆண்டு, மாதம், பயிற்று மொழி மற்றும் சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக பதிவு செய்திருப்பது கண்டறியப்பட்டால், தேர்வுக்கான கணினிவழி விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2.6.2. பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சிக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வைத்திருக்கும் தேர்வர் தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

2.6.3. தேர்வர் பத்தாம் வகுப்பு (SSLC) தொடர்பான விவரங்கள் மட்டுமின்றி ஒருமுறை பதிவுக்குத் தேவையான மற்ற அனைத்து விவரங்களையும் எத்தகைய தவறுமின்றி கவனமுடன் அளிக்கவேண்டும். இவ்விவரங்கள், ஒவ்வொரு தேர்வுக்கும் இணையவழியில் விண்ணப்பிக்கும்போது தேர்வரால் அவ்வப்பொழுது அளிக்கப்படும் மற்ற அனைத்து விவரங்களுக்கும் அடிப்படையாக இருக்கும்.

2.7. **ஒருமுறைப் பதிவில் திருத்தம்**:

2.7.1. தேர்வர், ஒருமுறைப் பதிவில் அளித்துள்ள விவரங்களை, ஆதாரச் சான்றுகளை பதிவேற்றம் செய்து தேவைப்படும் பொழுது திருத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

2.7.2. ஒருமுறைப் பதிவில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், அதனை தேர்வர், இணையவழியில் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே சரி செய்து விட வேண்டும். தேர்வருடைய ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்கள் தானாகவே போட்டித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களில் நிரப்பப்படும் என்பதால், ஒருமுறைப் பதிவில் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறாக இருப்பின், அதன்விளைவாக அவர்களது இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். எனவே, தேர்வர் தங்களது ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்களை கவனமுடனும், சரியாகவும் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றார்.

2.7.3. ஒருமுறைப்பதிவு அல்லது இணையவழி விண்ணப்பங்களை நிரப்புவது குறித்த அறிவுரைகளை தேர்வர் பின்பற்றாததால் வரும் எந்த விளைவுகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

2.7.4. ஒருமுறைப் பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கங்கள் www.tnpscexams.in என்ற இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. **இணையவழி விண்ணப்பம்**:

3.1. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் "APPLY" என்ற உள்ளீடு வழியே ஒருமுறைப் பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். தேர்வர் ஏற்கனவே ஏற்படுத்திய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை மறந்துவிட்டால், அவற்றை "FORGOT PASSWORD" மற்றும் "FORGOT USER ID" ஆகிய விருப்பத் தெரிவுகள் மூலம் மீண்டும் பெறலாம் / உருவாக்கலாம். தேர்வருக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை தேர்வாணையம் வழங்காது.

3.2. ஏற்கனவே பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் தேர்வர் அதனைப் பயன்படுத்தி உள்நுழையலாம். ஒரு முறைப்பதிவில் ஏற்கனவே பதிவு செய்துள்ள புகைப்படம் உள்ளிட்ட விவரங்களுடன், முந்தைய இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களும் திரையில் தெரியவரும். தேர்வர் மேலும் தொடரும் முன், ஒரு முறைப்பதிவில் தங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை சரிபார்த்து மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டும். தேர்வாணையத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் போது, அதற்குரிய கூடுதலாக தேவைப்படும் விவரங்களையும் பதிய வேண்டும். தேர்வர் ஒரு முறைப்பதிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் ஏதேனும் தவறாக இருப்பின், OTR Edit என்ற விருப்பத் தெரிவின் மூலம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம். ஒரு முறைப்பதிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பங்களில் மட்டுமே தோன்றும்.



3.3. தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்ட அன்றோ, அதற்கு பிறகோ எடுக்கப்பட்ட புகைப்படத்தை இணையவழியில் ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும்போதும் தேர்வர் பதிவேற்றம் செய்ய வேண்டும். தேர்வர் தங்களது விண்ணப்பத்தில் கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (உயரம் 4.5 செ.மீ. [170 Pixels] மற்றும் அகலம் 3.5 செ.மீ. [130 Pixels]) வெள்ளைப் பின்னணியில், முகம் மற்றும் இரண்டு காதுகளும், கழுத்துப் பகுதியும் தெளிவாகத் தெரியுமாறு சரியான அளவு (Correct Size) மற்றும் சரியான படிவத்தில் (Correct Format), புகைப்பட ஸ்டூடியோவில் (Photo Studio) எடுக்கப்பட்ட வண்ணப் புகைப்படத்தினை மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி தெரியுமாறு அச்சிடப்பட்டிருக்க வேண்டும். புகைப்படத்தின் 4.5 செ.மீ. (170 Pixels) மொத்த உயரத்தில், தேர்வரின் படம் 3.0 செ.மீ. (115 Pixels) ஆகவும், தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி ஆகிய தகவல் 1.5 செ.மீ. (55 Pixels) ஆகவும் இருக்க வேண்டும். புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்வதற்கு டிஜிட்டல் வடிவில் CD / DVD / pen drive / hard drive போன்ற ஏதேனும் ஒன்றில் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

3.4. டிஜிட்டல் வடிவிலான புகைப்படம் இல்லையெனில், புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய (Passport Size) புகைப்படத்தினை ஒரு வெள்ளைத்தாளில் ஒட்டி, அத்தாளினை 200 DPI ஒளிச்செறிவு என்ற அளவில் ஸ்கேன் செய்து புகைப்படத்தை மட்டும் CROP செய்து 20 KB – 50 KB என்ற அளவில் "Photograph.jpg" என சேமித்து, அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படம் ஒட்டப்பட்ட முழுத்தாளினையும் ஸ்கேன் / பதிவேற்றம் செய்யக்கூடாது. சுயமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (Selfie), கைப்பேசியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், நகலெடுக்கப்பட்ட (Xerox) புகைப்படங்கள், குடும்ப விழாக்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், மரம், செடி, கொடி, கட்டடங்கள் போன்ற பின்னணியைக் கொண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எவற்றையும் பதிவேற்றம் செய்யக்கூடாது. தேர்வரின் புகைப்படமின்றி வேறு இயற்கைக்காட்சிகள், விலங்குகள், கட்டடங்கள் போன்ற புகைப்படத்தினை பதிவேற்றம் செய்யக்கூடாது. இவ்வறிவுரைகளை மீறி, பொருத்தமற்ற புகைப்படங்களை பதிவேற்றம் செய்யும் தேர்வரின் இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.5. கையொப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு முன்பு, தேர்வர் ஒரு வெள்ளைத்தாளில் அகலம் 6.0 X உயரம் 2.0 செ.மீ. (230 Pixels X 75 Pixels) கொண்ட கட்டம் வரைந்து, அதில் நீலம் அல்லது கருப்பு நிற மை பேனாவைப் பயன்படுத்தி கையொப்பமிட வேண்டும். கையொப்பமிட்ட வெள்ளைத் தாளினை 200 DPI என்ற ஒளிச்செறிவில் ஸ்கேன் செய்து 10KB–20KB என்ற அளவில் "Signature.jpg" என சேமித்து அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3.6. தேர்வரின் தெளிவான புகைப்படம் மற்றும் கையொப்பம் உரிய அளவு மற்றும் வடிவத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். புகைப்படம் மற்றும் கையொப்பம் பதிவேற்றம் செய்யப்படாமலோ / பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படம் மற்றும் கையொப்பம் தெளிவாக இல்லாமலோ இருப்பின், இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2.5. ஏதேனும் ஒரு பாடத்தை பகுதி நேரமாகப் படித்ததற்காக, தேர்வர் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் பதிவேற்றம் செய்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் *

திரு./திருமதி/செல்வி…………………………………………………………… (பெயர்) …………………………… வகுப்பு முதல் ……………....….. வகுப்பு வரை, **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** ………………………… ஆண்டு முதல் ……………………….. ஆண்டு வரை இப்பள்ளியில் / தனித் தேர்வர் முறையில் படித்தார் எனவும், மேற்குறிப்பிட்ட வகுப்புகளுக்கான படிப்பினை திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு/திருமதி/செல்வி…………………………………………… (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2 (d)ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்

முதல்வர் / தலைமை ஆசிரியர் /
மாவட்டக் கல்வி அலுவலர் /
முதன்மைக் கல்வி அலுவலர் / இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் / தகுதி வாய்ந்த அலுவலர்

இடம்: கல்வி நிறுவனத்தின் அலுவலக முத்திரை **(அலைபேசி எண்**………………………**)**
நாள்:

* தேர்வர் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை / பனிரெண்டாம் வகுப்பு வரை வெவ்வேறு பள்ளிகளில் பயின்றுள்ளார் எனில், தான் பயின்ற ஒவ்வொரு பள்ளியிலும் தனித்தனியாக சான்றிதழைப் பெற வேண்டும்.

தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் *

திரு./திருமதி/செல்வி………………………………………………………………(பெயர்)…………………………… படிப்பினை (பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** …………....….. ஆண்டு முதல் ………………………ஆண்டு வரை இந்நிறுவனத்தில் படித்தார் எனவும் அப்படிப்பினை…………………………..(பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு/திருமதி/செல்வி……………………………………………………(பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2 (d)ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்

முதல்வர் / பதிவாளர், தொழிற் பயிற்சி
நிலையம் / கல்லூரி / பல்கலைக்கழகம்

(அலைபேசி எண்………………….**)**

இடம்: கல்வி நிறுவனத்தின் அலுவலக
நாள்: முத்திரை

* தேர்வர் வெவ்வேறான படிப்புகளை வெவ்வேறு நிறுவனங்களில் நிறைவு செய்துள்ளார் எனில், தான் படிப்பினை நிறைவு செய்த ஒவ்வொரு நிறுவனத்திலும் தனித்தனியாக இச்சான்றிதழைப் பெற வேண்டும்.

4.2.6. கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வயதின் அடிப்படையில் நேரடியாக பள்ளியில் சேர்க்கப்பட்ட தேர்வர்கள் பின்வரும் படிவத்தில் சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

Certificate for direct admission in School

This is to certify that Thiru/Tmt./Selvi/ __________________(Name) S/o/D/o/Thiru/Tmt./ ________________ had been admitted directly to ________________standard in our School / Institution based on his/her age under the Right to Education Act through direct Admission.

Signature of Principal / Head Master
(Mobile Number) ______________

Place: Official Seal of
Date: School / Institution

4.2.7. தேர்வர்கள் பயின்ற பள்ளியின் பெயர் பின்னாளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அத்தேர்வர்கள் பின்வரும் படிவத்தில் உள்ள சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

Certificate for change of school name

This is to certify that Thiru/Tmt/Selvi. _______________________________ S/o/D/o______________________ studied the classes from______________ to _____________ in Tamil Medium during the years from_________________ to _______________ in this school.

It is further certified that this school was earlier known as ___________________________and consequent to change in the name, this school is presently called as___________________________

This certificate is issued to the above person to claim preferential treatment under section 2 (d) of the PSTM (Amendment) Act, 2020.

Place:____________
Date:_____________

Signature with Seal:

Name:
Seal of the Institution
Designation:
(Head Master/Principal/
District Educational Officer/
Chief Educational Officer)

5. ஆதிதிராவிடர், ஆதிதிராவிட-அருந்ததியர் மற்றும் பழங்குடியினர்

5.1. ஆதிதிராவிடர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பட்டியல்-II பகுதி அ-விலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் பட்டியலில் இருப்பவராவர்.

5.2. "அருந்ததியர்" என்பது அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி, ஆதி ஆந்திரா ஆகிய இனத்தைக் குறிக்கும்.

5.3. பழங்குடியினர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016,** பட்டியல்-II பகுதி ஆ-விலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள பழங்குடியினர் பட்டியலில் இருப்பவராவர்.

குறிப்பு:

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் காணும் பட்டியல்களில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச்சார்ந்தவராக இருந்தால் மட்டுமே அத்தேர்வர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் என்று கருதப்படுவார். பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக கருதப்பட மாட்டார்கள்.

5.4. தேர்வுக் கட்டணச்சலுகை: கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

5.5. நியமன ஒதுக்கீடு: ஆதிதிராவிடர், ஆதிதிராவிட – அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் இடஒதுக்கீடு விதிகளின்படி, தெரிவு செய்யப்படுவர்.

ஆதிதிராவிடர்	15%
ஆதிதிராவிட – அருந்ததியர்	3%
பழங்குடியினர்	1%

5.6. ஆதார ஆவணங்கள்:

5.6.1. ஆதிதிராவிட–அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.2. பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியர் அல்லது சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.3. பழங்குடியினத்தைச் சேர்ந்த தேர்வர், மாநில கூர்நோக்கு குழுவிலிருந்து பெறப்பட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றிருப்பின், அதனைக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில், அவர்தம் உரிமைகோரல், மாநில கூர்நோக்கு குழுவின் சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்படும்.

5.6.4. கணவர் பெயரைக் குறிப்பிட்டு பெறப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்தால் / சமர்ப்பித்தால் தேர்வரின் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.6.5. அரசாணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 02.05.1988-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள், உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5.6.6. தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ள சாதி, "விண்ணபதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-லிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர், ஆதிதிராவிட - அருந்ததியர் அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அத்தேர்வர் ஆதிதிராவிடர், ஆதிதிராவிட – அருந்ததியர் அல்லது பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்தவராக உரிமை கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இப்பட்டியலில் இடம்பெறாத சாதியைச் சேர்ந்தவர், ஏனையோர் (others category) என்ற பிரிவின்கீழ் மட்டுமே உரிமை கோர அனுமதிக்கப்படுவர்.

5.6.7. ஆதி திராவிடர் வகுப்பினை சார்ந்த தேர்வர், கிருத்துவ / இசுலாம் மதம் நீங்கலாக ஏனைய மதங்களுக்கு மாறினால், "ஏனையோர்" ("others" category) எனக் கருதப்படுவர். ஆதி திராவிடர் வகுப்பினை சார்ந்த தேர்வர்கள் இசுலாமிய மதத்திற்கு மாறினால் இசுலாமிய வகுப்பினராக ("Backward Class (Muslim)") கருதப்படுவர். எனினும், சீக்கியம் மற்றும் பௌத்த மதங்களுக்கு மாறிய ஆதி திராவிடர் (Scheduled Caste) ஆதி திராவிடராகவே கருதப்படுவர்.

5.6.8. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

6. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் :

6.1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 - பட்டியல்-I பகுதி அ, ஆ, இ மற்றும் ஈ-யிலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பட்டியலில் இருப்பவராவர்.

6.2. விளக்கம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 - பட்டியல்-I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள சமுதாயத்தினரில் ஒரு பிரிவைச் சார்ந்த தமிழ்நாடு மாநிலத்தைச் சார்ந்த நபர்கள் மட்டுமே அத்தகைய சமுதாயத்தை சேர்ந்தவராகப் கருதப்படுவார்கள்.

6.3. தேர்வுக்கட்டணச் சலுகை: மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை

6.4. நியமன ஒதுக்கீடு: இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் ஆகியோர் இடஒதுக்கீடு விதிகளின்படி, தெரிவு செய்யப்படுவர்.

இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	26.5%
பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்	3.5%
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்	20.0%

6.5. ஆதார ஆவணங்கள்:

6.5.1. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ, அந்த வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச்சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணைவட்டாட்சியர் அல்லது துணைவட்டாட்சியர் (பள்ளி சான்றிதழ்கள்) அல்லது செயற் துணை வட்டாட்சியர் (சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை) அல்லது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

6.5.2. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) சாதியைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த தலைமையிடத்துத் துணைவட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

6.5.3. கணவர் பெயரைக் குறிப்பிட்டு பெறப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்தால் / சமர்ப்பித்தால் தேர்வரின் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

6.5.4. அரசாணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 02.05.1988-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள், உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

6.5.5. தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ள சாதி, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பின்னிணைப்புயில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-லிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அத்தேர்வர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட

இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்தவராக உரிமை கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இப்பட்டியலில் இடம்பெறாத சாதியைச் சேர்ந்தவர், ஏனையோர் (others category) என்ற பிரிவின்கீழ் மட்டுமே உரிமை கோர அனுமதிக்கப்படுவர்.

6.5.6. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தேர்வர்கள், கிருத்துவ / இசுலாமிய மதம் நீங்கலாக ஏனைய மதங்களுக்கு மாறினால், "ஏனையோர்" ("others" category) எனக் கருதப்படுவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தேர்வர்கள் இசுலாமிய மதத்திற்கு மாறினால் இசுலாமிய வகுப்பினராக ("Backward Class (Musim)") கருதப்படுவர்.

6.5.7. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

7. பெண்கள்:

7.1. **நியமன ஒதுக்கீடு**: மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் 30% பெண் தேர்வர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளைப் பொருத்தவரை, ஒவ்வொரு பிரிவு மற்றும் பொதுப்பிரிவில், இடஒதுக்கீட்டின் படி, 30% காலிப்பணியிடங்கள் பெண் தேர்வர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. பெண்கள் / திருநங்கைகள் (பெண்கள்) தேர்வர் மேற்குறிப்பிடப்பட்ட 30% இட ஒதுக்கீட்டில் போட்டியிட தகுதியானவர். மேலும், அவர்கள் மீதமுள்ள 70% காலிப்பணியிடங்களுக்கான இடஒதுக்கீட்டில், ஆண்கள் / திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்கள்) தேர்வருடன் சேர்ந்து போட்டியிடத் தகுதியானவர்கள்.

7.2. **ஆதார ஆவணங்கள்**: மாற்றுச்சான்றிதழ் / சாதிச் சான்றிதழின் அடிப்படையில் பாலினம் சரிபார்க்கப்படும். ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8. திருநங்கைகள்:

8.1. ஆதார ஆவணங்கள்:

8.1.1. திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்) / திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம் சரிபார்க்கப்படும்.

8.1.2. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் அல்லாத மற்ற அமைப்புகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.1.3. இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள திருநங்கைகள் அல்லது திருநங்கைகள் (ஆண்) அல்லது திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள் திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும். இதில் ஏதேனும் முரண்பாடு இருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.1.4. பாலினம் தொடர்பாக தேர்வரின் உரிமைகோரலுக்கு தேவையான ஆவணங்கள் ஆதாரமாக இல்லாதிருப்பின், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.2. சாதி:

8.2.1. எந்தவொரு சாதிச்சான்றிதழும் இல்லாத திருநங்கை தேர்வர், தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.

8.2.2. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட-(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை தேர்வர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

8.2.3. ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட - அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை தேர்வர், அவருடைய வகுப்பு (class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில்,

அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒருமுறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன் பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

8.2.4. தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்த சாதிச்சான்றிதழ் இல்லாத திருநங்கைகள் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்) / சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த திருநங்கைகள் சாதிச்சான்றிதழ் வைத்திருந்தாலும், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதும்படி இணையவழி விண்ணப்பத்தில் விருப்பத்தேர்வு செய்திருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களது உரிமைக்கோரலுக்கு ஆதாரமாக சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய தேவையில்லை.

8.2.5. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள திருநங்கை தேர்வர் அவர்கள் பெற்றுள்ள சாதிச்சான்றிதழின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குமாறு இணையவழி விண்ணப்பத்தில் விருப்பத்தேர்வு செய்திருந்தால், அவர்கள் தங்களது சாதிச்சான்றிதழை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.2.6. சமூகப்பிரிவின் அடிப்படையிலான இடஒதுக்கீட்டைத் தேர்வு செய்வது தொடர்பாக, திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் அவர்களால் பதிவேற்றம் செய்யப்படும், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையினைச் சார்ந்தே அமையும். தேர்வர், திருநங்கைக்கான அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்ய தவறினாலோ, மற்ற வாரியங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினைப் பதிவேற்றம் செய்தாலோ, அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

பின்னிணைப்பு III
பாடத்திட்டம்
தாள்- I
தமிழ் தகுதித் தேர்வு, பொது அறிவு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு
பகுதி – அ - தமிழ் தகுதித் தேர்வு
(பத்தாம் வகுப்பு தரம் – 100 கேள்விகள்)

குறியீடு: 501

அலகு I: இலக்கணம் (25 கேள்விகள்)

எழுத்து: பிரித்து எழுதுதல் – சேர்த்து எழுதுதல் – சந்திப்பிழை – குறில், நெடில் வேறுபாடு – லகர, ளகர, ழகர வேறுபாடு – னகர, ணகர வேறுபாடு – ரகர, றகர வேறுபாடு – இனவெழுத்துக்கள் அறிதல் – சுட்டு எழுத்துக்கள் – வினா எழுத்துக்கள் – ஒருமைப் பன்மை அறிதல்.

சொல்: வேர்ச்சொல் அறிதல் – வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் – அயற்சொல் – தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் – வினைச்சொல் – எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் – இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

அலகு II: சொல்லகராதி (15 கேள்விகள்)

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், ஓரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல் – ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்; ஒருபொருள் பன்மொழி – இருபொருள் குறிக்கும் சொற்கள் – பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு – சொல்லும் பொருளும் அறிதல் – ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.

(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் - (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) - வானில் முகில் தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்); பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - (எ.கா.) ஊடகம் - தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, தகவல் தொடர்புச் சாதனம்) - சமூகம் – மக்கள் குழு (மக்கள் குழு, கூட்டம்); ஊர்ப் பெயர்களின் மரூஉ வை எழுதுக - (எ.கா.) புதுச்சேரி – புதுவை, மன்னார்குடி – மன்னை, மயிலாப்பூர் – மயிலை; பிழை திருத்துக. (எ.கா.) ஒரு – ஓர்; பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் - (எ.கா.) வெத்தில – வெற்றிலை, நாக்காலி – நாற்காலி;

(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் - (எ.கா.) நேத்து மழ பேஞ்சுது - நேற்று மழை பெய்தது; சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும், அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்; அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் - (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அதனால், வரை, பின்பு) - (எ.கா.) நான் காட்டிற்குச் சென்றேன். அதனால் புலியைப் பார்த்தேன் - மாலைநேரம் முடியும் வரை விளையாடுவேன். தேர்வு முடிந்த பின்பு சுற்றுலா செல்லலாம்; பொருள் தரும் ஓர் எழுத்து - (எ.கா.) ஆ-பசு, ஈ-கொடு, தை-மாதம், தீ – நெருப்பு; பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக - (எ.கா.) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம் இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

அலகு III: எழுதும் திறன் (15 கேள்விகள்)

(i) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் – தொடர் வகைகள் – செய்வினை, செயப்பாட்டு வினை – தன்வினை, பிறவினை – ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.

(ii) மரபுத் தமிழ்: திணை மரபு - உயர்திணை: அம்மா வந்தது – அம்மா வந்தாள்; அஃறிணை: மாடுகள் நனைந்தது – மாடுகள் நனைந்தன; பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது – அவன் வந்தான்; பெண்பால்: அவள் வந்தது – அவள் வந்தாள்; பலர் பால்: அவர்கள் வந்தார்கள் – அவர்கள் வந்தனர்; ஒன்றன் பால்: அது வந்தன - அது வந்தது; பலவின் பால்: பறவைகள் பறந்தனர் – பறவைகள் பறந்தன; காலம்: நேற்று மழை பெய்யும் – நேற்று மழை பெய்தது; நேற்று வருவேன் – நேற்று வந்தேன்; இளமைப் பெயர்: பசு – கன்று; ஆடு – குட்டி; ஒலிமரபு: நாய் கத்தியது – நாய் குரைத்தது; வினைமரபு: கூடைமுடை, சோறு உண்; தொகை மரபு: மக்கள் கூட்டம் – ஆட்டு மந்தை; நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.

அலகு IV: கலைச் சொற்கள் (10 கேள்விகள்)

பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: search engine – தேடு பொறி, வலசை – Migration, ஒவ்வாமை – Allergy, மரபணு – Gene, கடல் மைல் – Nautical Mile)

அலகு V: வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன் (15 கேள்விகள்)

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் – தலையங்கம் – முகப்புச் செய்திகள் – அரசு சார்ந்த செய்திகள் –கட்டுரைகள் – இவற்றை வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் – உவமைத் தொடரின் பொருளறிதல் - மரபுத் தொடரின் பொருளறிதல் – பழமொழிகள் பொருளறிதல் – ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.

அலகு VI: எளிய மொழி பெயர்ப்பு (5 கேள்விகள்)

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் – பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று: pendrive, printer, computer, keyboard) – ஆவணங்களின் தலைப்பு – கோப்புகள் – கடிதங்கள் – மனுக்கள் – மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.

அலகு VII: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் (15 கேள்விகள்)

திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை - மேற்கோள்கள் - அறநூல் தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) - தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் - உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் - தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் – தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்: பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.

குறிப்பு: அலகு VII-க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான (upto SSLC Standard) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.

பகுதி ஆ: பொது அறிவு
(பத்தாம் வகுப்புத் தரம் – 75 கேள்விகள்)

அலகு I: பொது அறிவியல் (5 கேள்விகள்)

பேரண்டத்தின் இயல்பு - இயற்பியல் அளவுகளின் அளவீடுகள் - இயக்கவியலில் பொது அறிவியல் விதிகள் - விசை, அழுத்தம் மற்றும் ஆற்றல் - அன்றாட வாழ்வில் இயந்திரவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம் மற்றும் அணுக்கரு இயற்பியலின் அடிப்படை கோட்பாடுகளும் அதன் பயன்பாடுகளும்; தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், உலோகவியல் மற்றும் உணவில் கலப்படம்; உயிரியலின் முக்கிய கோட்பாடுகள், உயிரினங்களின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியல், ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் சுகாதாரம். மனித நோய்கள்; சுற்றுப்புறச் சூழல் அறிவியல்; அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்; நடப்பு நிகழ்வுகள்.

அலகு II: புவியியல் (5 கேள்விகள்)

புவி அமைவிடம் - இயற்கை அமைவுகள் - பருவமழை, மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை - நீர் வளங்கள் - ஆறுகள் - மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் - காடு மற்றும் வன உயிரினங்கள் - வேளாண் முறைகள்; போக்குவரத்து - தகவல் தொடர்பு; தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல்; பேரிடர் - பேரிடர் மேலாண்மை; சுற்றுச்சூழல் - பருவநிலை மாற்றம்; புவியியல் அடையாளங்கள்; நடப்பு நிகழ்வுகள்.

அலகு III: இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம் (10 கேள்விகள்)

சிந்து சமவெளி நாகரிகம் - குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் - தென் இந்திய வரலாறு; தேசிய மறுமலர்ச்சி - ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்ககால எழுச்சிகள் - இந்திய தேசிய காங்கிரஸ் - தலைவர்கள் உருவாதல் — பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், தந்தை பெரியார், ஜவஹர்லால் நேரு, ரவீந்திரநாத் தாகூர், காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ், முத்துலெட்சுமி அம்மையார், மூவலூர் இராமாமிர்தம் மற்றும் பல தேசத் தலைவர்கள்; தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு முறைகள் மற்றும் இயக்கங்கள்; இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை - இனம், மொழி, வழக்காறு; இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு.

அலகு IV: இந்திய ஆட்சியியல் (15 கேள்விகள்)

இந்திய அரசியலமைப்பு - அரசியலமைப்பின் முகவுரை - அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் - ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள்; குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்; ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் - மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் - உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்; கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள்: மத்திய – மாநில உறவுகள்; தேர்தல் - இந்திய நீதி அமைப்புகள் - சட்டத்தின் ஆட்சி; பொது வாழ்வில் ஊழல் - ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் - லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா - தகவல் அறியும் உரிமை - பெண்களுக்கு அதிகாரமளித்தல் - நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் - மனித உரிமைகள் சாசனம்; தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியியல் முறைகளும்; நடப்பு நிகழ்வுகள்.

அலகு V: இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (20 கேள்விகள்)

இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் - ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் - ஒரு மதிப்பீடு - திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்; வருவாய் ஆதாரங்கள் - இந்திய ரிசர்வ் வங்கி - நிதி ஆணையம் - மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு – சரக்கு மற்றும் சேவை வரி; பொருளாதார போக்குகள் - வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை - வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு - தொழில் வளர்ச்சி - ஊரக நலன்சார் திட்டங்கள் - சமூகப் பிரச்சனைகள் - மக்கள்தொகை, கல்வி, நலவாழ்வு, வேலை வாய்ப்பு, வறுமை; சமூகநீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்; தமிழ்நாட்டின் கல்வி மற்றும் நலவாழ்வு முறைமைகள்; தமிழ்நாட்டின் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்; நலன்சார் அரசுத் திட்டங்கள்; தற்போதைய சமூக பொருளாதார பிரச்சனைகள்; நடப்பு நிகழ்வுகள்.

அலகு VI: தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக - அரசியல் இயக்கங்கள் (20 கேள்விகள்)

தமிழ் சமுதாய வரலாறு அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியம்; திருக்குறள் - மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் - அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை - மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் - திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு - திருக்குறளின் தத்துவக் கோட்பாடுகள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் - விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு; தமிழ்நாட்டின் பல்வேறு சீர்திருத்தவாதிகள், சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் மாற்றங்கள்.

பகுதி இ: திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும்
(பத்தாம் வகுப்புத் தரம் – 25 கேள்விகள்)

அலகு I: திறனறிவு (15 கேள்விகள்)

சுருக்குதல் - விழுக்காடு - மீப்பெரு பொதுக் காரணி (HCF) – மீச்சிறு பொது மடங்கு (LCM); விகிதம் மற்றும் விகிதாச்சாரம்; தனிவட்டி - கூட்டு வட்டி - பரப்பு - கொள்ளளவு - காலம் மற்றும் வேலை.

அலகு II: காரணவியல் (10 கேள்விகள்)

தருக்கக் காரணவியல் - புதிர்கள் - பகடை - காட்சிக் காரணவியல் - எண் எழுத்துக் காரணவியல் - எண் வரிசை.

தாள் II – பாடத் தாள்

1. வேளாண்மை
(பட்டயப் படிப்புத் தரம்)

குறியீடு: 431

அலகு I : உழவியல் கொள்கைகள், நடைமுறைகள் வானிலையியல் (30 வினாக்கள்)

வேளாண்மை – வரையறை – பிரிவுகள் – தமிழ்நாட்டின் முக்கியப் பயிர்களின் வகைப்பாடு மற்றும் நிலைகள் பயிர் உற்பத்தியைப் பாதிக்கும் காரணிகள் பயிர்த்திட்டங்கள் – வரையறை – கொள்கைகள் – ஊடுபயிர் – வகைகள் – வேளாண்மைச் செயல்பாடுகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் – உழவு – வரையறை மற்றும் வகைகள் – இடைக்கால பணிகள் – வேளாண்மையில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் – பயிர் வளர்ச்சி நிலைகள் – விளைச்சலைத் தீர்மானித்தல்.

வானிலையியல் – வேளாண் வானிலையியல் – வரையறை – பயிர் உற்பத்தியில் முக்கியத்துவம் – வளிமண்டலத்தின் பிரிவுகள் மற்றும் முக்கியத்துவம் – வானிலைக் காரணிகள் மற்றும் பயிர் உற்பத்தியில் காற்றின் பங்கு – தமிழ்நாட்டின் பருவத்திற்கேற்ப மழை – இடம் சார்ந்த மற்றும் தற்காலிக வேறுபாடுகள் – தமிழ்நாட்டின் காலநிலை மண்டலங்கள் – தானியங்கி வானிலைக் கூடம் மற்றும் அதன் பகுதிகள் – வேளாண் அறிவுரை சேவைகள் – நீர்ப்பாசனம் – மண்ணில் நீர் ஊடுருவுதல் – மண் ஈரப்பத மாறிலிகள் – இட்டும் மண் ஈரப்பதம் – பயிர் விளைச்சலில் நீர் அழுத்தத்தின் தாக்கம் – நீர்ப்பயன்பாட்டுத்திறன் – முக்கியப் பயிர்களின் நீர்த்தேவை – அருந்தல் நிலைகள் – நீர்ப்பாசனத் திட்டமிடல் – வகைகள் மற்றும் நன்மைகள் – நீர்ப்பாசன முறைகள் – நுண்நீர்ப்பாசனம் – தமிழ்நாடு அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் – மண் அரிமானம் மற்றும் கட்டுப்படுத்துதல்.

களைகள் – வரையறை மற்றும் பயிர் உற்பத்தியில் களைக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் – களைகளின் வகைகள் – களை மேலாண்மை முறைகள் – களைக்கொல்லி – செயல்படும் திறன் மற்றும் அளிக்கும் முறைகளின் வகைகள் – சந்தையில் உள்ள பொதுவான மற்றும் புதிய களைக்கொல்லிகள் – முக்கியப் பயிர்களுக்கான களை மேலாண்மை முறைகள் – பிரச்சனைக்குரிய, ஒட்டுண்ணி மற்றும் நீர்நிலைக் களைகள் மேலாண்மை – ஒருங்கிணைந்த களை மேலாண்மை – கருத்து மற்றும் நடைமுறைகள்.

உழவியல் தொழில்நுட்பங்கள் – காலநிலை, மண் தேவை, நிலம் தயாரிப்பு, விதைகள் மற்றும் விதைப்பு – ரகங்கள் – நீர், களை உர மேலாண்மை மற்றும் அறுவடை – தானியங்கள், சிறுதானியங்கள், பயிர் வகைகள் – எண்ணெய் வித்துக்கள் – வணிகப் பயிர்கள், தீவனப் பயிர்கள், பசுந்தழைப் பயிர்கள் மற்றும் மல்பெரி பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்கள்.

அலகு II : பண்ணைத்திட்டங்கள், மானாவாரி வேளாண்மை, வேளாண் காடுகள் (10 வினாக்கள்)

ஒருங்கிணைந்த பண்ணையம் – கூறுகள் மற்றும் மாதிரிகள் – தமிழக அரசின் திட்டங்கள் – பயிர் திட்டங்கள் – முக்கியப் பயிர்களுக்கான நாட்காட்டி – மானாவாரி வேளாண்மை – வரையறை மற்றும் தமிழ்நாட்டின் தற்போதைய நிலை – மானாவாரி வேளாண்மைப் பகுதிகளின் மண் வகைகள் – அதன் பயிர் உற்பத்திக்கான இடர்பாடுகள் – மானாவாரி வேளாண்மையில் முக்கியப் பயிர்கள் – பயிர்களின் உயர் உற்பத்திக்கான தகுந்த தொழில்நுட்பங்கள் – முன்பருவ விதைப்பு – மானாவாரியில் நடைமுறை மற்றும் மாற்று நிலப் பயன்பாடு – வறட்சி மற்றும் பேரழிவுகளின் தாக்கம் மற்றும் மேலாண்மை – பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் – மானாவாரியில் ஒருங்கிணைந்த பண்ணையம் – மண் அரிமானம் – வகைகள் – மண் ஈரப்பத சேமிப்பு முறைகள் – உழவியல், இயற்பியல் மற்றும் உயிரியல் முறைகள் – சாகுபடி முறைகள் – நீர் நிலைப்படுத்துதல் – பண்ணைக் குட்டைகள் – கழிவுநீர் குட்டைகள் – காலநிலை இடர்பாடுகள் – நீர்வடிப்பகுதி மேம்பாடு – வரையறை மற்றும் பகுதிகள் – நிலப்பயன்பாட்டின் வகைகள் – காடுகளின் முக்கியத்துவம் - வேளாண் காடுகள் – வரையறை, வகைகள் – சமூகக் காடுகள் – நகர்ப்புறக் காடுகள் –இடப்பெயர்ச்சி முறை சாகுபடி – காற்றுத் தடுப்பான் – சந்து பயிர் – தேக்கு, சவுக்கு, வேம்பு, மூங்கில், அகேசியா மற்றும் பீநாறி மரங்கள் உற்பத்தி மற்றும் நிர்வாக முறைகள்

அலகு III : மண் மற்றும் மண் வளம் (30 வினாக்கள்)

மண்ணின் வரையறை – மண்ணின் முக்கிய கூறுகள் - தமிழ்நாட்டின் மண் வகைகள் . மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகள் மற்றும் பயிர் உற்பத்தியில் அவற்றின் முக்கியத்துவம். மண் நுண்ணுயிரிகள் - மண்ணின் பண்புகளில் கரிமப் பொருட்களின் முக்கியத்துவம். அமிலம், உப்பு மற்றும் கார மண் மற்றும் அவற்றின் நிவர்த்தி/மறுசீரமைப்பு. மண் மற்றும் நீர் மாசுபாடு மற்றும் மேலாண்மை முறைகள். பாசன நீர் - பாசன நீரின் தரம் – நீர் பரிசோதனை. மண் வளம் - முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும்

நுண்ணூட்டச்சத்துக்கள். மண் வள மதிப்பீடு, மண் மாதிரி எடுத்தல், மண் பரிசோதனை மற்றும் உர பரிந்துரைகள் - மண் வள அட்டை. உரங்கள் - நைட்ரஜன், பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் உரங்கள் – கூட்டு மற்றும் கலப்பு உரங்கள், உரங்களின் பயன்பாடு - முக்கிய பயிர்களில் உர மேலாண்மை. தாவரங்களில் உள்ள முதன்மை மற்றும் நுண்ஊட்டச்சத்து குறைபாட்டு அறிகுறிகளைக் கண்டறிதல் மற்றும் மேலாண்மை செய்தல். உயிர் ஊக்கிகள் – நவீன / தற்கால உரங்கள் – பயிர் பூஸ்டர்கள் – தொலை உணர்வு – புவியியல் தகவல் அமைப்பு (ஜிஐஎஸ்) மற்றும் புவியியல் நிலைப்படுத்தல் அமைப்பு (ஜிபிஎஸ்). உயிர் உரங்கள் - உயிர் உரங்களின் வகைகள்/குழுக்கள் - பாக்டீரியா, பூஞ்சை, பாசி மற்றும் அசோலா.

அலகு IV : தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் (10 வினாக்கள்)

தமிழ்நாட்டில் முக்கிய தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி நிலை – முக்கிய பழப் பயிர்களை இனப் பெருக்கும் வழிமுறைகள் - பயிர் ஊக்கிகளின் பங்கு - மண் மற்றும் தட்பவெப்பத் தேவைகள் - சாகுபடிக்கேற்ற இரகங்கள் - உற்பத்தித் தொழில் நுட்பங்கள் - உர மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் மேலாண்மை – மா, வாழை, திராட்சை, பப்பாளி, சப்போட்டா, கொய்யா, எலுமிச்சை, மாதுளை, இலந்தை, சீதாப்பழம், நெல்லி, ஆப்பிள், பேரிக்காய், வெண்ணெய் பழம், டிராகன்பழம், பிளம்ஸ் மற்றும் அன்னாசி அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள்.

காய்கறிகளின் முக்கியத்துவம் - ஊட்டச் சத்துக்கள் - முக்கிய காய்கறிப் பயிர்களை இனப்பெருக்கும் வழிமுறைகள் - பயிர் ஊக்கிகளின் பங்கு - காய்கறித் தோட்டத்தின் வகைகள் - வீட்டுத் தோட்டம், ஊட்டச்சத்து பயிர்கள் தோட்டம், டிரக் தோட்டம், வணிக காய்கறி தோட்டம் - மண் மற்றும் தட்பவெப்பத் தேவைகள் - சாகுபடிக்கேற்ற இரக / வீரிய ஒட்டு இரகங்கள் - உற்பத்தி தொழில் நுட்பங்கள் - உர மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் மற்றும் மேலாண்மை – தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, வெங்காயம், பந்தல் காய்கறிகள், காளிபிளவர், முட்டைக்கோஸ், டர்னிப், உருளைகிழங்கு, பீட்ருட், காரட், கீரைகள் மற்றும் பல்லாண்டு காய்கறிப் பயிர்கள் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள்.

மலர்பயிர்களின் முக்கியத்துவம் - முக்கிய மலர்ப்பயிர்களை இனப்பெருக்கும் வழி முறைகள் - பயிர் ஊக்கிகளின் பங்கு – மண் மற்றும் தட்பவெப்பத் தேவைகள் - சாகுபடிக்கேற்ற இரகங்கள் - உற்பத்தி தொழில் நுட்பங்கள் - சத்து மற்றும் நுண்ணூட்டக் குறைபாடு மற்றும் மேலாண்மை – மல்லி, ரோஜா, சாமந்தி, துலுக்க சாமந்தி, சம்பங்கி, கனகாம்பரம் மற்றும் கோழிக் கொண்டை அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள்.

தோட்டத்தின் வடிவமைப்பு - முறையான தோட்டம், முறைசாரா தோட்டம் – தோட்டத்தின் பகுதிகள் - புல்வெளி மற்றும் புல்வெளி தயாரித்தல் - ஓராண்டு பூக்கும் செடிகள் - தோட்டம் பூக்கும் மற்றும் பசுமையான மரங்கள் - படரும் மற்றும் ஏறும் செடிகள் - ஆர்கிட்கள் மற்றும் சதைப் பற்றுள்ள செடிகள் - வீட்டின் உட்புற செடிகள் - உட்புறம் அழகுபடுத்துதல் – கொய் மலர்கள் - மலர் ஏற்பாடு - போன்சாய் வளர்ப்பு - உலர் மலர் அழகுபடுத்துதல்.

நறுமணப் பயிர்கள் முலிகைப்பயிர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் இனப்பெருக்கும் வழிமுறைகள் - பயிர் ஊக்கிகளின் பங்கு - மண் மற்றும் தட்பவெப்பத் தேவைகள் - சாகுபடிக்கேற்ற இரகங்கள் - உற்பத்தித் தொழில் நுட்பங்கள் - சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு மற்றும் மேலாண்மை அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் : மணமுட்டும் பயிர்கள் மிளகு, ஏலக்காய், பூண்டு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப் பட்டை, சர்வசுகந்தி, மஞ்சள், இஞ்சி, புளி, கொத்தமல்லி மற்றும் வெந்தயம். மலைத் தோட்டப்பயிர்கள் : காபி, தேயிலை, தென்னை பாக்கு, முந்திரி, கோகோ மற்றும் இரப்பர், மருத்துவப் பயிர்கள் : கண்வலி கிழங்கு, திப்பிலி, அவுரி, சென்னா, கிழாநெல்லி, துளசி, கற்றாழை, கோலியஸ் மற்றும் வசம்பு. தென்னையில் வீரிய ஒட்டு இரகங்கள் – வீரிய ஒட்டு இரகங்கள் உற்பத்தி.

தோட்டக்கலைப் பயிர்களில் திசு வளர்ப்பு மற்றும் நுண் பயிர் பெருக்கம் - பூரணதிறன் - பசைக்கூடு வளர்ப்பு - தாவரத்தின் புத்துயிர்ப்பு - உடல் நகல் வேறுபாடு - திசுவளர்ப்பு - செடிகளை கடினப்படுத்துதல்.

அலகு V : பயிர் இனப்பெருக்கம் மற்றும் விதை உற்பத்தி (20 வினாக்கள்)

வேளாண் பயிர்கள் - முக்கியத்துவம் – வகைகள் - வேளாண் மற்றும் தொழிற்சாலைப் பயிர்கள் – நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள், நார்ப்பயிர்கள், சர்க்கரை மற்றும் மாவுப் பயிர்களின் முக்கியப் பாகங்களின் வேதிப்பொருட்கள் - செடிகளின் ஒளிச்சேர்க்கை – சுவாசம் – சேகரிக்கப்பட்ட மூலக்கூறுகளின் இடமாற்றம் – மலர் உயிரியல் – பயிர்களின் இனப்பெருக்கம் மற்றும் மகரந்தச் சேர்க்கை அமைப்பு – பயிர்களில் தன்மகரந்தச் சேர்க்கை மற்றும் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்கான வழிமுறைகள் – தாவர மரபணு வளங்கள் – முக்கியத்துவம் – சேகரித்தல் – குணாதிசயங்கள் – சேமித்தல். தன் ஒவ்வாமை மற்றும் மகரந்த மலட்டுத்தன்மை - பயன்பாடு மற்றும் இடர்பாடுகள். மகரந்த மலட்டுத்தன்மை வகைகள் – மரபணு மகரந்த மலட்டுத்தன்மை (GMS) சைட்டோ பிளாஸ்மா மகரந்த மலட்டுத்தன்மை (CMS),

மரபணு சைட்டோ பிளாஸ்மா மகரந்த மலட்டுத்தன்மை (CGMS), சூழ்நிலை உணரும் மரபணு மகரந்த மலட்டுத்தன்மை (EGMS), மற்றும் இரசாயனம் தூண்டப்பட்ட மகரந்த மலட்டுத்தன்மை (Gametocides),

தன்மகரந்தச் சேர்க்கை பயிர்களில் இனப்பெருக்க முறைகள் – தனிவழித் தேர்வு – இனக்கலப்பு மற்றும் தேர்வு – சந்ததி வழித் தொடர் முறை - பெருந்திறள் வழித் தொடர் முறை – நெல், உளுந்து, நிலக்கடலை, நெல்லில் இரு வரிசை மற்றும் மூன்று வரிசை கலப்பு – அயல் மகரந்தச் சேர்க்கை பயிர்களில் இனப்பெருக்க முறைகள் – கூட்டுத்தேர்வு – பிற்கலப்பு இனப்பெருக்கம் - வீரிய ஒட்டு இனப்பெருக்கம் - வீரிய ஒட்டு இரகங்கள் உருவாக்குதல் - உட்கலப்பினம் உருவாக்குதல் - ஒற்றை கலப்பு, இரட்டைக்கலப்பு மற்றும் பலஇரகக்கலப்பு – மகரந்த மலட்டு வரிசைகளைப் பயன்படுத்தி வீரிய ஒட்டு இரக விதைகளை உற்பத்தி செய்தல் – சின்தடிக் மற்றும் காம்போசிட் இரகங்கள் – மக்காச்சோளம், கம்பு, துவரை, பருத்தி, சோளம், ஆமணக்கு, சூரியகாந்தி.

பாலில்லா இனப்பெருக்கப் பயிர்கள் – நகல் தேர்வு – கரும்பு, மரவள்ளி, உருளை கிழங்கு மற்றும் தீவனப்பயிர்களில் ஒட்டுக்கலப்பு மற்றும் தேர்வு- பயிர் மேம்பாட்டில் சடுதி மாற்ற இனப்பெருக்கம் - பயிர் மேம்பாட்டில் பன்மடிய இனப்பெருக்கம் - இரு இன ஒட்டுக்கலப்பு – முக்கியத்துவம் மற்றும் சாதனைகள் - புவியியல் குறியீடுகள் – பயிர் இரகங்களின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமை சட்டம் – அறிவுசார் சொத்துரிமைகள்.

விதை – முக்கியத்துவம் – விதைத்தர குணாதிசயங்கள் - விதைகளின் வகைகள் – கரு விதை, வல்லுனர் விதை, ஆதார விதை, சான்று விதை- விதை உற்பத்தி வழிமுறைகள் – விதைப்பெருக்கு விகிதம் – விதைச்சான்றளிப்பு – விதை உற்பத்திக்கான பொது வழிகாட்டு நெறிமுறைகள் – வயல் ஆய்வு மற்றும் சான்றளிப்பு விதைத் தரம் – மகரந்தச் சேர்க்கை – பூச்சிகள், சூழ்நிலை மற்றும் மண்ணின் பங்கு – விதை உற்பத்திப் பதிவு – இரக மற்றும் வீரிய ஒட்டு இரகங்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் நெல், மக்காச்சோளம், சிறுதானியப் பயிர்கள், பயறு வகைகள், பருத்தி, எண்ணெய் வித்துப்பயிர்கள், தீவனப் பயிர்கள் மற்றும் முக்கிய காய்கறிப் பயிர்கள் – தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, அவரை, வெங்காயம், பந்தல் காய்கள் – அறுவடை. பதப்படுத்துதல், விதை நேர்த்தி, சேமித்தல், விதை ஆரோக்கியம் மற்றும் விற்பனை.

அலகு VI : பயிர் பாதுகாப்பு : கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் (30 வினாக்கள்)

பூச்சிகள் - வரையறை - குணாதியங்கள் - பொருளாதார வகைப்பாடு – பட்டுப்புழு வளர்ப்பு - மல்பெரிபட்டுபுழு வளர்ப்பு - தேனீ வளர்ப்பு மற்றும் பராமரிப்பு -நன்மை செய்யும் பூச்சிகள் - மகரந்தச் சேர்க்கைப் பூச்சிகள் - வேட்டையாடும் பூச்சிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் - பயிரைத்தாக்கும் பூச்சிகள் - வரையறை - வகைகள் – பயிரைத்தாக்கும் பூச்சிகள் தீவிரப்பரவல் கண்காணித்தல் - முன்னறிவிப்பு - பொருளாதாரவரம்பு நிலை - பொருளாதார சேதநிலை - பயிரைத்தாக்கும் பூச்சிகளின் மேலாண்மை - வகைகள் - கலாச்சார, உடல் சார்ந்த, இயந்திரங்களை பயன்படுத்துதல் சட்டப்படி மற்றும் ஒருங்கிணைந்த முறைகள் – முக்கிய பூச்சி எதிர்ப்பு இரகங்களைப் பயன்படுத்துதல். உயிரியல் முறைகள் - ஒட்டுண்ணிகள் - வேட்டையாடும் பூச்சிகள் - நுண்ணுயிரிகள்.

பூச்சிக்கொல்லிகள் குழுக்கள் - வகைகள் - செயல்படும் முறை – உருவாக்கம் மற்றும் பயன்பாடு - பூச்சிக்கொல்லி பயன்படுத்தும் முறைகள் – பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவதில் உள்ள ஆபத்துகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு - பூச்சிக்கொல்லிகளைப் பாதுகாப்பாக உபயோகித்தல் - புதிய மற்றும் அங்ககபூச்சிக் கொல்லிகள் - பூச்சிக்கொல்லிகளின் மிகுதி - பூச்சிகளின் மேலாண்மையில் பிரமோன்களின் பங்கு குணங்களை மாற்றும் வேதிப் பொருட்கள் - வழிகள் உயிரியல் முறை கட்டுப்பாட்டுக் காரணிகள் – வகைகள் – நன்மைகள் – வேட்டையாடும் பூச்சிகள், ஒட்டுண்ணிகள், பூஞ்சாணம் வைரஸ், டி. விரிடி மற்றும் பே. சப்டிலிஸ் – அதிக பெருக்கத்திற்கான உற்பத்தி வழி முறைகள் – பொடி வகையிலான தயாரிப்புகள் – உயிரியல் பூச்சிக் கொல்லிகள் – உயிரியல் முறை கட்டுப்பாட்டுக் கூடம்.

சேதார அறிகுறிகள் - வாழ்க்கை சுழற்சி - பயிரைத் தாக்கும் பூச்சியினத்தைச் சாராத இதர உயிரினங்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் – நெல் சிறுதானியப் பயிர்கள், பருத்தி, கரும்பு, பயறுவகைகள், எண்ணெய் வித்துப்பயிர்கள், கத்தரி, தக்காளி, வெண்டை, பந்தல் காய்கறிகள், முருங்கை, மரவள்ளி, மிளகாய், வெங்காயம், தென்னை, பாக்கு, மஞ்சள், கறிவேப்பிலை, தேயிலை, காபி, ஏலக்காய், மிளகு, வெற்றிலை, மலர்ப்பயிர்கள் மா, எலுமிச்சை, வாழை, திராட்சை, சப்போட்டா, கொய்யா மற்றும் மாதுளை. சேமிக்கப்பட்ட உணவுகளை தாக்கும் பூச்சிகள் மற்றும் மேலாண்மை.

பயிர் நோய்கள் – வரையறை - காரணங்கள் - பாக்டீரியா, வைரஸ், பூஞ்சாணம், மைக்கோபிளாஸ்மா - பயிர் நோய்களின் வகைகள் - பரவும் தன்மை - நோய்களின் தீவிர பரவுதலை ஊக்குவிக்கும் சுற்றுச்சூழல் காரணிகள் - மேலாண்மை - ஒழித்தல் தடுத்தல் - பாதுகாத்தல் - கலாச்சார கட்டுப்படுத்தும் முறைகள், உயிரியல் முறைகள் – புதிய தொழில்நுட்பங்களின் பொருளாதாரம் - பயன்படும் பூஞ்சாணங்கள் - காளான் - சிப்பிக்காளான் வளர்ப்பு -

டிரைக்கோடெர்மா பயன்கள் - நூற்புழுக்கள் வகைகள் - அறிகுறிகள் மற்றும் மேலாண்மை.

பூஞ்சாணக் கொல்லிகள் - குணங்கள் - முக்கிய குழுக்கள் - உருவாக்கம் மற்றும் பயன்பாடு – தாவர நச்சுக்கொல்லிகள் – பூஞ்சாணக் கொல்லிகளை பயன்படுத்தும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்புகள் - பயிர் நோய்களின் மேலாண்மையில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பங்கு - நோய் மேலாண்மையில் உயிரிதொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் பயன்பாடு - பயிர் நோய்களால் ஏற்படும் நஷ்டத்தினை மதிப்பிடுதல் – பயிர் நோய் மேலாண்மை - கொள்கைகள் – பூஞ்சாணம், வைரஸ், பாக்டீரியா மற்றும் மைக்கோபிளாஸ்மாவினால் தானியப்பயிர்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள், பணப்பயிர்கள் - பழப்பயிர்கள் - காய்கறிப் பயிர்கள் மற்றும் மலைத்தோட்டப்பயிர்கள், மணமூட்டிப்பயிர்கள், மலர்ப்பயிர்கள் - ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை.

அலகு VII : கால்நடை, கோழி நிர்வாகம், செயற்கை முறை கருவூட்டல் மற்றும் கன்றுகள் வளர்ப்பு (10 வினாக்கள்)

இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின் முக்கியத்துவம் – கால்நடை உற்பத்தியின் முறைகள் – மேய்ச்சல் முறை – கொட்டகை – வெளிப்புற, பகுதிநேர – கலப்பு முறை – ஒருங்கிணைந்த பண்ணையம் – எரு மேலாண்மை முறைகள் – மாட்டு இனங்கள் – வரையறை – உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இனங்கள் – எருமை – சிந்தி, காங்கேயம், உம்பளாச்சேரி, ஜெர்சி, ஹோல்ஸ்டின் பிரிசியன், முர்ரா மற்றும் சுருதி – செயற்கை கருவூட்டல் – நன்மை மற்றும் குறைகள் – மாட்டுக் கொட்டகை – ஒரு வரிசை முறை – இரட்டை வரிசை முறை – தலை – தலைமுறை மற்றும் வால் – வால் முறை நிர்வாகம் – கன்றுகள், பால்மாடுகள், காளை மாடுகள் – இடம் தேர்வு – கொட்டகை அமைக்கும் முறைகள் – நிறை, குறைகள் – சினை, பால்கரக்கும், காளை மாடுகள் பராமரிப்பும் நிர்வாகமும்.

பால் – வரையறை – சுத்தமான பால் உற்பத்தி – பால்கறவை – வகைகள் – கைக்கறவை மற்றும் இயந்திரக் கறவை முறை – பால் பதப்படுத்துதல் – வகைகள் – குறைந்த வெப்பநிலை அதிக நேரம் மற்றும் அதிக வெப்பநிலை குறைந்த நேரம் - நிறை, குறைகள்.

தீவனங்கள் – வரையறை – சமச்சீர் பகுதிப் பொருட்கள் – பசுந்தீவனம் – தேவை மற்றும் முக்கியத்துவம்.

நோய்கள் – வகைகள் – பொதுவான கட்டுப்பாடு மற்றும் தடுப்பு முறைகள் – வைரஸ், பாக்டீரியா நோய்கள் – ஆந்தராக்ஸ், ஹீமோராஜிக் செப்டிசிமியா மற்றும் சப்பை நோய்கள் – வளர்சிதை மாற்றங்கள் – டிம்பானிடிஸ், கீட்டோசிஸ் மற்றும் பால் காய்ச்சல் – மடிநோய் மற்றும் அதன் மேலாண்மை – மனிதனுக்குப் பரவும் நோய்கள் (ஆந்த்ராக்ஸ், டியூபர்குலோசிஸ், கன்று வீச்சு மற்றும் வெறிநாய்க்கடி) - தடுப்பு மற்றும் மேலாண்மை – வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டு பண்ணையம் – வகைகள் – நாட்டு மற்றும் வெளிநாட்டு இனங்கள் – வளர்ப்பு முறைகள் – கொட்டகை நிர்வாகம் – அமைப்பு – வகைகள் – தரை – வரைபடம் – இடம் தேவை – தீவனம் – பொதுவான தீவன மரங்கள் – குடற்புழுக்கள் – அம்மை – கோமாரி நோய் – நீலநாக்கு – துள்ளுமாரி – அக, புற ஒட்டுண்ணிகள் –நோய்கள் – பராமரிப்பு மற்றும் மேலாண்மை.

கோழி வளர்ப்பு – கோழி வளர்ப்பு முறைகள் – புறக்கடை – கூண்டு முறை – வியாபார முட்டை மற்றும் இறைச்சி கோழி வகைப்பாடுகள் – குஞ்சுகள் – பராமரிப்பு மற்றும் மேலாண்மை – வெப்பக்காப்பான் நிர்வாகம் – வளர்ப்பு முறை – ஆழ்கூழ் மற்றும் கூண்டில் வளர்ப்பு – நிறை, குறைகள் – பரண்மேல் கூண்டு முறை – தரை இடம் தேவை – கழிவு மேலாண்மை.

கோழித் தீவனம் – பகுதிப் பொருட்கள் – தீவன மாற்று விகிதம் / டசன் முட்டைகள் அல்லாத கிலோ கறி – கோழி நோய்கள் – வகைகள் – வைரஸ், பாக்டீரியா – புரோட்டோசோவா – ஏற்படுத்தும் காரணிகள் – அறிகுறிகள், தடுப்பு முறைகள் – ராணிக்கட், இன்பெக்சியஸ் பர்சல் நோய், இ.கோலை – கோரிசா – சால்மொனசோசிஸ் – காக்சிடியோசிஸ் – வைட்டமின் மற்றும் மினரல் குறைபாடுகள் – அறிகுறிகள் – தடுப்பு முறைகள் – தமிழக அரசின் சிறப்பு கால்நடை வளர்ப்பு திட்டங்கள், கொள்கைகள், மானியங்கள்.

அலகு Vlll : பண்ணை இயந்திரங்கள் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல். (10 வினாக்கள்)

கதிரடிக்கும் தளம் - உலர்த்தும் தளம் - ஐ சி என்ஜின்கள் - வகைகள் அறிமுகம் - தடுப்பு பராமரிப்பு மற்றும் சிறிய பழுது – டிராக்டர் - டிராக்டரின் வெவ்வேறு அமைப்புகள் - ஹைட்ராலிக் அமைப்பு - கிளட்ச் மற்றும் டிரான்ஸ்மிஷன் அமைப்புகள் - டிராக்டருடன் கருவிகளை இணைத்தல் - பவர் டில்லர் மற்றும் பொருத்தக்கூடிய கருவிகள் - விதையிடும் கருவி - நடவு செய்யும் இயந்திரம் - பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் - அறுவடை இயந்திரம் - விவசாய பம்புகள் - பம்புகளின் வகைகள் - தனிப்பயன் செயல்பாட்டு மையம் - இ-வாடகை.

நீண்ட கால பயிர்கள் மற்றும் அழுகக் கூடிய பயிர்களின் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகள் - ஈரப்பதம் தீர்மானிக்கும் முறைகள் – உலர்த்துதல் - சூரிய உலர்த்துதல் - இயந்திர உலர்த்துதல் - நன்மைகள் மற்றும் தீமைகள் - ஷெல்லிங் மற்றும் டிகாட்டிகேட்டர் இயந்திரங்கள் - ரப்பர் ரோல் ஷெல்லர் - மைய விலக்கு டிஹஸ்கர் - நெல் கொதிநிலைப் படுத்துதல் - நன்மைகள் மற்றும் தீமைகள் - மெருகூட்டல் - சோளம் மற்றும் பருப்பு வகைகள் அரைத்தல் - கொள்கைகள் மற்றும் முறைகள் - விதை நேர்த்தி வகைகள் - தானியம் மற்றும் விதை சேமிப்பு - பாதுகாப்பான சேமிப்புக்கான நிபந்தனை - முக்கிய உணவு தானியங்களுக்கு மதிப்பு கூட்டல் மற்றும் பொருத்தமான இயந்திரங்கள்.

ஆற்றல் வளங்கள் மற்றும் ஆற்றலின் வடிவங்கள் - மரபுசார் மற்றும் மரபுசாரா ஆற்றல் - சூரிய ஆற்றல் நன்மைகள் மற்றும் வரம்புகள் - உயிர் நிறை ஆற்றல் – தொழில்நுட்பங்கள் - வகைப்பாடு

மற்றும் உயிர்வாயு ஆலைகளின் வகைகள் - தாவர கழிவிலிருந்து உயிர் வாயு - உயிர் வாயு பயன்பாடு - உயிரி எரிபொருள் ஆலை - வாயுவாக்கிகள் - புகையற்ற சுலாக்கள்.

சுழலியல் - இயற்கை வளங்கள் - சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் மேலாண்மை - வளிமண்டல மாசு - தொழிற்சாலை மற்றும் வாகனங்கள் மூலம் நுண்துகள்கள் உமிழ்வு - புகை மூட்டம் - அமில மழை - ஓசோன் துளை - புவி வெப்பமடைதல் - காரணங்கள் - விளைவுகள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் - பாரம்பரிய விவசாய முறைகள் - விவசாயத்தில் சுற்றுச்சூழல் - பாதுகாப்பான தொழில்நுட்பங்கள்.

அலகு IX வணிக மேலாண்மை: (20 வினாக்கள்)

உயிரிய கட்டுப்பாட்டு முகவர்கள் - பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு மேலாண்மையில் பங்கு - உயிரிய கட்டுப்பாட்டு முகவர்களின் வகைகள் - உயிரிய கட்டுப்பாட்டு ஆய்வகத்தை அமைத்தல் - புகையிலை பூச்சி புழுக்களின் பெரும் உற்பத்தி - ஸ்போடோப்டெரா லிட்டுரா மற்றும் பயறு நெற்று துளைப்பான் ஹெலிகோவெர்பா ஆர்மிகெரா - செயற்கை உணவு - எஸ் ஐ என் பி (SINPV) மற்றும் எச் ஏ என் பி வி (HaNPV) இன் பெரும் உற்பத்தி - ட்ரைக்கோகிராமா கிரிசோபெர்லா - காசினெல்லிட் - டிரைக்கோடெர்மா விரிடி சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மற்றும் என்டோமோபதோஜெனிக் நூற்புழுக்கள் இபிஎன் (EPN) பெரும் உற்பத்தி.

உயிர் உரங்கள் - பயிர் ஊட்டசத்துக்கான நுண்ணுயிர்கள் வகைகள் - நல்ல தரமான விகாரங்களின் ஆதாரங்கள் – வசதிகள் - உபகரணங்கள் தேவையான மூலப்பொருட்கள் - கேரியர் பொருட்களின் வகைகள் மற்றும் விவரக் குறிப்பு - அசோஸ்பைரில்லம், அசோட்டோபாக்டர் - குளூகானோ அசிட்டோபாக்டர் - பாஸ்பேட் கரைப்பான் - தாவர வளர்ச்சி தூண்டிகள் - பி ஜி பி ஆர் (PGPR) - பி ஜி ஏ (BGA) நீலப் பச்சை பாசி - இளம் சிவப்பு நிறமி உருவாக்கும் நுண் உயிர்கள் (PPFM) அசோலா - உட்குமிழ் உருவாக்கும் வேர் உட்பூசனம் - கேரியர் மட்டும் திரவ அடிப்படையிலான உயிர் உரங்களின் சேமிப்பு மற்றும் இருப்பு நிலை - பெரும் உற்பத்தியின் கட்டுப்பாடுகள் - சேமிப்பு மற்றும் பாதுகாப்பு - வணிக உயிர் உரங்களின் தரநிலை - தமிழ்நாட்டில் தரக்கட்டுப்பாடு - உயிர் உர ஆய்வகம்.

காளான் – உருவவியல் - பொதுவாக உண்ணக்கூடிய காளான்கள் - புளூரோடஸ், காலோசைப் - நச்சு காளான்கள் - ஆய்வக நுட்பங்கள் - நுண்கிருமி நீக்கம் - ஊடக தயாரிப்பு - தூய வளர்ப்பு நுட்பங்கள் - பின்வளர்ப்பு மற்றும் சேமிப்பு - ஸ்பான் வகைகள் - தாய் ஸ்பான் மற்றும் பெட் ஸ்பான் சாகுபடி - சிப்பி காளான் - பால் காளான் சாகுபடியில் உள்ள சிக்கல்கள் - உயிரியல் மற்றும்

உயிரியல் அற்ற கோளாறுகள் - காளானின் பயன்பாடு – உணவு - ஊட்டச்சத்து மற்றும் மருந்து மதிப்புகள் - தென்னை நார் மட்டும் பிற வேளாண்மை கழிவுகளை உரமாக்குதல் அறுவடைக்கு பின் தொழில்நுட்பம் - பாதுகாப்பு மற்றும் மதிப்பு கூட்டல் முறைகள்.

விதை உற்பத்தி - வயலை தேர்வு செய்தல் - மரபியல் தூய்மையைப் பராமரித்தல் - மாற்று வகைகளை (offtypes) நீக்குதல் - தனிமைப்படுத்துதல் தூரம் - கைமுறையாக மகரந்தம் நீக்குதல் - எமாஸ்குலேஷன் - மகரந்த சேர்க்கை - கலப்பினங்கள் - ஒற்றை சேர்க்கை - இரட்டை சேர்க்கை - கலப்பின விதை உற்பத்தி வகைகள் - விதை உற்பத்தி – கேமடொசைட்டின் (gametocide) பயன்பாடு - நன்மைகள் மற்றும் தீமைகள் - கலப்பினங்கள் மற்றும் வகைகள் - நெல் திணை எண்ணெய் வித்துக்கள் பருப்பு வகைகள் – பருத்தி, தக்காளி, வெண்டைக்காய் ஆகியவற்றில் தன் இனசேர்க்கை (selfing) - மகரந்தம் நீக்குதல் - எமஸ்குலேஷன் - கலப்பின நுட்பம் (crossing technique) - குளோனல் பெருக்கம் - கம்பு நேப்பியர் - விதை பதிவு - கள ஆய்வு மற்றும் சான்றிதழ்.

அறுவடை - இயற்பியல் மற்றும் இரசாயன குறியீடுகள் பிரித்தெடுத்தல் நுட்பங்கள் - விதை செயல் ஆக்குதல் -

விதை சுத்திகரிப்பு மற்றும் தரப்படுத்தும் சாதனங்கள் உபயோகம் - விதை நேர்த்தி - விதைகளை பைகளில் அடைத்தல் - விதை சேமிப்பு - தூய்மை - சான்றிதழ் செய்முறை - நாற்றங்கால் தொழில்நுட்பம் - நிலம் மற்றும் விதை நேர்த்தி செய்தல் - வேர் தண்டுகளை விதைத்தல் மற்றும் வளர்ப்பு - பழங்கள் மற்றும் மலர் பயிர்கள் - திரவ உரங்களின் பயன்கள் - வேர் தண்டு பாதுகாப்பு - கலவை பொருட்கள் மற்றும் கலவை தயாரிப்பு - வேர் தண்டு கடினப்படுத்துதல் – வாரிசு (scion) தாவரம் தேர்வு மற்றும் ஒட்டுதல் - ஒட்டு செடிகளை பராமரித்தல் - ஒட்டு பிரித்தல் மற்றும் கடினப்படுத்துதல் - அலங்கார செடிகளின் தண்டு வெட்டுகள் தயாரித்தல் - தண்டு வெட்டுகளில் வளர்ச்சி ஊக்கிகள் செலுத்தி பாலித்தீன் பைகளில் நட்டு மூடுபனி அறைகளில் வளர்த்தல் - வேரூன்றிய தண்டுகளை வளர்ப்பு கலவையில் நட்டு கடினப்படுத்துதல் - ஏர் லேயரிங் அலங்கார செடிகள் மற்றும் பழசெடிகள் - அலங்கார செடிகளில் ரோஜா பட்டிங் (Budding) - கலவையில் செடிகளை பராமரித்தல் - பேக்கிங் மற்றும் சந்தைப்படுத்துதல்.

கரிம உரமாக்கல் - பல்வேறு கனிம உரங்களின் ஊட்டச்சத்துத் திறன் - தொழு உரம்- தயாரித்தல் - உரமாக்கல் முறைகள் - செறிஊட்டப்பட்ட தொழு உரம் தயாரித்தல் - தென்னை நாற்கழிவு உரம் - கரும்பு குப்பை - பிரஸ்மட் (pressmud) - பண்ணை கழிவுகள் - பார்த்தீனியம் உரமாக்கல் - கரிம உரத்தின் முதிர்வு குறியீடுகள் அரிதல் - உரத்தின் வர்த்தக குறியீடுகள் - கரிம உரங்கள் - மண்புழு உரம் வகைகள் - மண்புழு உரம் தயாரிப்பிற்கான பொருட்கள் - உரம் தயாரிக்கும் பொருட்களின் ஆரம்ப நிலை செயல்கள் - சிறிய அளவிலான மண்புழு உரம் தயாரிப்பு - பெரிய அளவிலான மண்புழு உரம் தயாரிப்பு - மற்ற வகை மண்புழு உரம் - மண்புழு உரம் தயாரிக்க தேவையானவை - படுக்கை பொருட்கள் - கொள்கலன் பி எச் (pH) – வெப்பநிலை - ஊட்ட மூலக்கூறுகள் - சரியான மண்புழு வகை தேர்ந்தெடுப்பது – படுக்கைகள் - மண்புழு உர சேகரிப்பு - மண்புழு உரம் திறன் - உயிருள்ள இயக்கம் - மண்புழு உரம் பயன்பாடு.

அலகு X: வேளாண் விரிவாக்கம், பொருளியல் மற்றும் நவீன விவசாயம் (30 வினாக்கள்)

கிராமிய மற்றும் வேளாண் பொருளாதாரம் – பொருள், முக்கியத்துவம் மற்றும் வாய்ப்புகள் – பிரச்சினைகள் – மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் அதன் விளைவுகள் – உற்பத்திக் காரணிகள் – நிலம் வழங்குதல் – நிலம் வைத்திருக்கும் அளவு – மனிதன் – நில விகிதம் – நிலச் சீர்திருத்தம் – பூமிதான இயக்கம் – வெற்றி – தோல்விகள் – கிராம கூலியாள் – பொருள், வகைகள், குணாதிசயங்கள், வேளாண் கூலியாட்கள், வேலை, கூலி, வருமானம் – குறைந்த கூலிச்சட்டம் மற்றும் மற்ற நலத்திட்டங்கள்.

கிராம வங்கியியல் மற்றும் நிதி – கொள்கை, வகைகள் – நிதி ஆதாரங்கள் – நபார்டு – தோற்றம், பங்குகள் – கிராமத் தொழில்கள் – முக்கியத்துவம், வகைகள் – முதலீட்டுத் தேவைகள்.

வேளாண் தொழில்கள் – வகைகள் – காதி மற்றும் கிராமத் தொழில்கள் – பிரச்சினைகள் – வேளாண் விளை பொருட்கள், கழிவுப் பொருட்கள் – கரும்பு, பருத்தி விதை, வாழை நார், வனப்பொருட்கள் – கிராமத் தொழில்நுட்பம் – தொழில்நுட்ப இடைவெளி – தொழில்நுட்ப பரவலில் சமூக, பொருளாதார குறைகள் – கிராமப்புற முன்னேற்றத் திட்டங்கள் – வேளாண் விற்பனை – வரையறை, கொள்கை,

பங்குகள், வகைகள், சந்தை அமைப்பு – வேளாண் சந்தைகளின் பண்புகள் – தரம் பிரித்தல் – விற்பனை விலை, இலாபம் – விலைப் பகிர்வு – நிறை, குறைகள்.

வேளாண் விற்பனை கூட்டுறவு சந்தைப்படுத்துதல் சங்கம் – ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் – தேசிய வேளாண்மை கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு – மற்றும் டேன்பெட் – சிறப்பு அமைப்புகள் – இந்திய உணவு கழகம் – மத்திய, மாநில சேமிப்பு கழகம் – அக்மார்க் – இ-நாம்.

பணிமனையில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு மற்றும் பொதுவான முன்னெச்சரிக்கைகளின் முக்கியத்துவம், முதலுதவியின் ஆரம்பநிலை, தொழில் பாதுகாப்பு, உடல்நல ஆபத்துகள், தீயை அணைக்கும் கருவிகள், ஹவுஸ் கீப்பிங் மற்றும் 5S முறைகள் - பயன்படுத்திய இன்ஜின் ஆயிலை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் - மின்சார பாதுகாப்பு குறிப்புகள் - எரிபொருள் கசிவு மற்றும் பாதுகாப்பான கழிவுகளை அகற்றுதல், நச்சுக் கழிவுகளை பாதுகாப்பாக கையாளுதல் - லிப்டிங் கருவிகள் – கைக் கருவிகள் - மார்க்கிங் மெட்டீரியல்ஸ் - சாக், புருஷியன் நீலம் - சுத்தம் செய்யும் கருவிகள் - ஸ்கிராப்பர், வயர் பிரஷ், எமரி பேப்பர் - மார்க்கிங் கருவிகள் – சர்பேஸ் பிளேட் - அளவிடும் கருவிகள் – ஸ்டீல் ரூல், அளவிடும் டேப், ட்ரை ஸ்குயர், காலிப்பர்ஸ் – இன்சைடு மற்றும் அவுட்சைடு, டிவைடர்ஸ், ஸ்க்ரைபர்ஸ், ப்ரிக் பஞ்ச், சென்டர் பஞ்ச், பின் பஞ்ச், ஹாலோ பஞ்ச், நம்பர் மற்றும் லெட்டர் பஞ்ச் - உளி - பிளாட், கிராஸ்-கட் - சுத்தியல் - பால்பீன், லம்ப், மேலட், ஸ்க்ரூடிரைவர்களின் வகைகள், ஆலன் &கீ, பெஞ்ச் வைஸ் மற்றும் C-கிளாம்ப்கள், ஸ்பேனர்கள், ஸ்பேனர்களின் வகைகள், யுனிவர்சல் மற்றும் அட்ஜெஸ்டபுல் ஸ்பேனர்கள், ஓப்பன் எண்ட் ஸ்பேனர், ஏர் இம்பாக்ட் ரெஞ்ச், ஏர் ராட்செட், ரெஞ்ச்ஸ் - டார்க் ரெஞ்ச்ஸ், பைப் ரெஞ்ச்ஸ், பைப் ஃப்ளாரிங் மற்றும் கட்டிங் டூல், புல்லர்ஸ் - கியர் மற்றும் பேரிங் - குறைந்த எண்ணிக்கையிலான கணக்கீடு, மைக்ரோமீட்டர்களின் பராமரிப்பு மற்றும் பயன்பாடு, அவுட்சைடு மற்றும் டெப்த் மைக்ரோமீட்டர், இன்சைடு மைக்ரோமீட்டர், வெர்னியர் காலிபர் மற்றும் அதனை சரிசெய்தல், டெலஸ்கோப் கேஜ், டயல் போர் கேஜ், டயல் இண்டிகேட்டர், ஸ்ட்ரைட் எட்ஜ், ஃபீலர் கேஜ் - த்ரெட் பிட்ச் கேஜ் - வாக்கம் கேஜ் மற்றும் டயர் பிரஷர் கேஜ்.

அலகு II: வாகன விவரக்குறிப்பு, சர்வீஸ் நிலைய உபகரணங்கள், இன்ஜின் வகைப்பாடு - டாஷ் போர்டு கேஜ்கள், ஹைட்ராலிக்ஸ் & நியூமேடிக்ஸ் (15 வினாக்கள்)
மத்திய மோட்டார் வாகன விதி, சக்கரங்கள், ஃபைனல் டிரைவ் மற்றும் பயன்படுத்தப்படும் எரிபொருள், ஆக்ஸில், இன்ஜின் மற்றும் ஸ்டீயரிங், டிரான்ஸ்மிஷன், பாடி (Body) மற்றும் சுமை (Load) ஆகியவற்றின் அடிப்படையில் வாகனங்களின் வகைப்பாடு - வாகன ஹாய்ஸ்ட் பயன்பாடு, 2 போஸ்ட் மற்றும் நான்கு போஸ்ட் ஹாய்ஸ்ட், இன்ஜின் ஹாய்ஸ்ட், ஜாக்ஸ், ஸ்டாண்டுகள் - இன்ஜின் அறிமுகம் - 2 மற்றும் 4-ஸ்ட்ரோக் டீசல்

என்ஜின் கம்ப்ரஷன் இக்னிஷியன் இன்ஜின் (C.I) – ஸ்பார்க் இக்னிஷியன் இன்ஜின் (S.I), 2-ஸ்ட்ரோக் மற்றும் 4-ஸ்ட்ரோக், C.I இன்ஜின் மற்றும் S.I இன்ஜின் – I.C இன்ஜினின் முக்கிய பாகங்கள் - நேரடி இன்ஜக்ஷன் மற்றும் மறைமுக இன்ஜக்ஷன், எஞ்சினில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப விதிமுறைகள், என்ஜின் விவரக்குறிப்பு – வாகனத்தின் டேஷ் போர்டில் உள்ள பல்வேறு அளவீடுகள் / கருவி பற்றிய - வேகமானி, டகோமீட்டர், ஓடோமீட்டர் மற்றும் ஃப்யுவல் கேஜ் – கியர் ஷிப்ட் இன்டிகேட்டர் – பார்க்கிங், பிரேக்-என்கேஜ்மென்ட் - வார்னிங் லைட் மற்றும் இன்ஜினின் மால்ஃபங்சன் லைட்.
ஹைட்ராலிக்ஸ் மற்றும் நியூமேடிக்ஸ் – கியர் பம்ப், இன்டர்னல் & எக்ஸ்டெர்னல், சிங்கிள் ஆக்டிங், டபுள் ஆக்டிங் & டபுள் எண்டடு சிலிண்டர் – டேரக்ஷனல் கண்ட்ரோல் வால்வு, பிரஷ்ஷர் ரிலீப் வால்வு – நான் ரிடர்ன் வால்வு (Non Return Valve), ப்ளோ கண்ட்ரோல் வால்வுகள் மற்றும் ஆட்டோமொபைலின் பயன்பாடுகள்.

அலகு III : இன்ஜின் கட்டுமான விவரங்கள், குளிரூட்டும் மற்றும் லூப்ரிகேஷன் சிஸ்டம் (30 வினாக்கள்)
சிலிண்டர் ஹெட்டின் கட்டமைப்பு மற்றும் விளக்கம், சிலிண்டர் ஹெட் வடிவமைப்பின் முக்கியத்துவம் - டீசல் கம்பஷன் சேம்பர் வகை - உட்கொள்ளும் மற்றும் வெளியேற்றும் பாதைகளின் அளவு, ஹெட் கேஸ்கட்கள் டர்புலன்ஸ் வால்வுகள் மற்றும் வால்வு செயல்படுத்தும் இயந்திரத்தின் முக்கியத்துவம் - இன்ஜின் வால்வுகளின் இயக்கம் மற்றும் செயல்பாடு, பல்வேறு வகையான வால்வுகள் அவற்றின் உலோகங்கள் – பல்வேறு வகையான வால்வு இயங்கும் விதம் - சிலின்டர் ஹெட்டில் வால்வு சீட்ஸ் மற்றும் வால்வு சீட்ஸ் , இன்செர்டின் முக்கியத்துவம் - வால்வு சுழற்சியின் முக்கியத்துவம், வால்வு ஸ்டெம் ஆயில் சீல், இன்லெட் வால்வுகளின் அளவு, வால்வு டிரெயின், வால்வு - டைமிங் டையகராம் – வேரியபுல் வால்வு டைமிங் டையகிராமிங் நோக்கம் - கேம்ஷாஃப்ட்ஸ் மற்றும் டிரைவ்களின் விளக்கம் ஓவர்ஹெட் கேம்ஷாஃப்ட்டின் விளக்கம் (SOHC – சிங்கிள் ஓவர் ஹெட் கேம்ஷாஃப்ட் மற்றும் DOHC – டபுள் ஓவர் ஹெட் கேம்ஷாஃப்ட்), கேம் லோப், டைமிங் செயின், பெல்ட்கள் மற்றும் டென்ஷனர்கள் பல்வேறு வகையான பிஸ்டன்கள், பிஸ்டன் ரிங்க்ஸ் மற்றும் பிஸ்டன் பின்கள் மற்றும் பொருட்களின் விளக்கம் மற்றும் செயல்பாடுகள்- ரிங்க்ஸ்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட இடைவெளிகள் (Clearance) மற்றும் ரிங்க்ஸ்களைப் பொருத்தும்போது அதன் அவசிய முன்னெச்சரிக்கைகள், பொதுவான பிரச்சனைகள் மற்றும் தீர்வு – கம்ப்ரஷன் விகிதம் – கனெக்டிங் ராடின் விளக்கம் மற்றும் செயல்பாடு - கனைக்டின் ராட் பிக் என்ட் மற்றும் மெயின் பேரிங் மெட்டீரியல் – பிஸ்டன் பின்கள் மற்றும் பிஸ்டன் பின்களின் லாக்கிங் முறைகள் - கிராங்க் ஷாஃப்ட், கேம்ஷாஃப்ட் - இன்ஜின் மெயின் பேரிங் விளக்கம் மற்றும் செயல்பாடுகள் - பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பேரிங்கில் கலந்திருக்கும் உலோகங்கள் – செல் பேரிங் நன்மைகள்- டீசல் இன்ஜினில் பயன்படுத்தப்படும் சிறப்பு பேரிங்கின் உலோகங்கள்- பேரிங் பழுது ஏற்படுவதற்கான காரணம் – பராமரிப்பு – கிராங் ஷாப்ட் பேலன்ஸிங் – இஞ்சின் ஃபயரிங் ஆடர் –பிளை வீல் மற்றும் வைப்ரேசன் டேம்பர் செயல்பாடுகள் - கிராங்க் கேஸ் & ஆயில் பம்ப் - கியர்ஸ் டைமிங் மார்க் - செயின் ஸ்ப்ராக்கெட்டுகள், செயின் டென்ஷனர் - ஃப்ளைவீலில் இணைக்கப்பட்ட கிளட்ச் & கப்ளிங் யூனிட்களின் செயல்பாடு - சிலிண்டர் பிளாக்கின் விளக்கம் - சிலிண்டர் பிளாக் கட்டுமானம் - வெவ்வேறு வகையான சிலிண்டர் ஸ்லீவ்கள் (லைனர்).

வெப்ப பரிமாற்ற முறை - கொதிநிலை மற்றும் அழுத்தம் - மையவிலக்கு விசை- வாகன குளிரூட்டி பண்புகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட இடைவெளி மாற்றம் - பல்வேறு வகையான குளிரூட்டும் அமைப்புகள், அடிப்படை குளிரூட்டும் அமைப்பு கூறுகள் - ரேடியேட்டர், குளிரூட்டும் குழல்களை - நீர் பம்ப் - குளிரூட்டும் அமைப்பு தெர்மோஸ்டாட் - குளிர்விக்கும் மின்விசிறிகள் - வெப்பநிலை குறிகாட்டிகள் - ரேடியேட்டர் அழுத்த முடி – ரெக்கவரி சிஸ்டம்- தெர்மோ ஸ்விட்ச் .

லூப்ரிகேசன் சிஸ்டத்தின் தேவை – ஆயில் செயல்பாடுகள் - SAE இன் படி பாகுத்தன்மை மற்றும் அதன் தரம் – ஆயில் சேர்மங்கள், செயற்கை எண்ணெய்கள், லூப்ரிகேஷன் சிஸ்டம், ஸ்பிளாஸ் சிஸ்டம் - பிரஷர் சிஸ்டம் - லூப்ரிகேஷன் சிஸ்டத்தில் அரிப்பு மற்றும் சத்தம் குறைப்பு - லூப்ரிகேஷன் சிஸ்டம் பாகங்கள் - சம்ப், ஆயில் சேகரிப்பு , ஆயில் டேங்க், ஆயில் பில்டர், ஆயில் பிரஷர் ரிலிப் வால்வு, பிக்கப் டியூப், ஆயில் பம்ப் மற்றும் பிரஷர் ஹோல்களின் விளக்கம் மற்றும் செயல்பாடு - ஆயில் இண்டிகேட்டர், ஆயில் குளிர்விப்பான்.

அலகு IV: இன்டேக் & எக்ஸாஸ்ட் சிஸ்டம்ஸ், டீசல் இன்ஜின் எரிபொருள் அமைப்பு (25 வினாக்கள்)
இன்டேக் & எக்ஸாஸ்ட் சிஸ்டம்ஸ் – டீசல் இண்டக்ஷன் & எக்ஸாஸ்ட் சிஸ்டம்களின் விளக்கம் மற்றும் ஏர் கம்ப்ரசர், எக்சாஸ்டர் - சூப்பர் சார்ஜர் - இன்டர்கூலர்கள் - டர்போ சார்ஜர் - வேரியபுல் டர்போ சார்ஜர் மெக்கானிசம் - இன்டேக் சிஸ்டம் பாகங்கள் - ஏர் கிளீனர்களின் செயல்பாடு - வெவ்வேறு வகையான ஏர் கிளீனர், இன்டேக் மேனிபோல்டு மற்றும் பொருட்களின் விளக்கம்- எக்ஸாஸ்டர் சிஸ்டம் பாகங்கள், எக்ஸாஸ்டர்ஸ் மஃப்லர்ஸ் – வினைத்திறன் கேட்டலாட்டிக் கன்வேக்டர், இணைப்புகள் மற்றும் செராமிக் கோட்டிங் மின்னனு மஃப்லரின் செயல்பாடுகள்.
IC இன்ஜினில் எரிபொருள் ஃபீடு சிஸ்டம் (பெட்ரோல் & டீசல்) - புவியீர்ப்பு ஃபீடு முறை, போர்ஸ்டு ஃபீடு சிஸ்டம், முக்கிய பாகங்கள், எரிபொருள் குழாய்கள் - இயந்திர மற்றும் மின்சாரம் - ஃபீடு பம்புகள் – கார்பரேட்டரின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் - டீசல் எரிபொருள் இன்ஜெக்ஷனின் செயல்பாடு மற்றும் தன்மைகள், பியூவல் சிஸ்டத்தின் பாகங்கள் மற்றும் செயல்படும் திறன் – பியூவல் டேங்க் லைன்ஸ், டீசல் பியூவல் பில்டர், வாட்டர்

சேபரேட்டர், லிப்ட் பம்ப், பிளெஞ்சர் பம்ப், பிரைம் பம்ப் - இன்லைன் இன்ஜெக்ஷன் பம்ப், டிஸ்ட்ரிபியூட்டர் வகை இன்ஜெக்ஷன் பம்ப், டீசல் இன்ஜெக்டர்கள், க்ளோ பிளக்குகள், கம்மின்ஸ் மற்றும் டெட்ராய்ட் டீசல் இன்ஜெக்ஷன் - எலக்ட்ரானிக் டீசல் கட்டுப்பாடு - எலக்ட்ரானிக் டீசல் கட்டுப்பாட்டு அமைப்புகள், காமன் ரெயில் டீசல் இன்ஜெக்ஷன் (CRDI) அமைப்பு, ஹைட்ராலிக் ஆக்சுவேட்டட் எலக்ட்ரானிக் கன்ட்ரோல்ட் யூனிட் இன்ஜெக்டர் (HEUI) டீசல் இன்ஜெக்ஷன் அமைப்பு. டீசல் இன்ஜின்களில் பயன்படுத்தப்படும் சென்சார்கள், ஆக்சுவேட்டர்கள் மற்றும் ECU (எலக்ட்ரானிக் கண்ட்ரோல் யூனிட்).

அலகு V: அடிப்படை எலக்ட்ரிக்கல் மற்றும் பேட்டரி, சார்ஜிங், ஸ்டார்ட்டிங் சிஸ்டம் மற்றும் எமிஷன் கண்ட்ரோல் (20 வினாக்கள்)

அடிப்படை மின்சாரம் - மின்சாரக் கோட்பாடுகள் – கிரவுண்ட் கனெக் ஷன் - ஓம் விதி - மின்னழுத்தம், மின்னோட்டம், மின்தடை, பவர், எனர்ஜி - வோல்ட்மீட்டர், அம்மீட்டர், ஓம்மீட்டர், மல்டி மீட்டர் - கடத்திகள் மற்றும் இன்சுலேட்டர், வயர், ஷீல்டிங் – நீளம் மற்றும் மின்தடை ரெஸிஸ்டன்ட் ரேட்டிங், ஃப்யூஸ் மற்றும் சர்க்யூட் பிரேக்கர்ஸ் – பேலாஸ்ட் ரெஸிஸ்டர் – ஸ்ட்ரிப்பிங் வயர்ஸ் இன்சுலேஷன், கேபில் கலர் கோடு மற்றும் அளவு, தொடர் சுற்றுகள், இணை சுற்றுகள் மற்றும் தொடர் இணை சுற்றுகள் - பேட்டரி – பேட்டரி வகைகள், லெட் ஆசிட் பேட்டரிகள் SMF பேட்டரிகள் - இரசாயன விளைவு, காந்த விளைவுகள், வெப்ப விளைவுகள் - தெர்மோ-எலக்ட்ரிக் ஆற்றல் - தெர்மிஸ்டர்கள், தெர்மோ கப்பில் – மின்வேதியியல் ஆற்றல் - போட்டோ வோல்டாயிக் எனர்ஜி – பீஸோ எலக்ட்ரிக் எனர்ஜி– எலக்ட்ரோ மேக்னடிக் இன்டக்ஷன், ரிலே & சோலனாய்டுகள், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை வைண்டிங் - மின்மாற்றிகள் - ஸ்டேட்டர் மற்றும் ரோட்டார் சுருள்கள்.

AC மற்றும் DC ஜெனரேட்டர்கள் – ஆல்டர்னேட்டர் மற்றும் ஸ்டார்டர் மோட்டரின் அமைப்பு - சார்ஜிங் சர்க்யூட் – ஆல்டர்னேட்டர் மற்றும் ஸ்டார்டர் மோட்டரின் செயல்படும் விதம் - இக்னிஷன் வார்னிங் லேம்ப் – ரெகுலேட்டர் யூனிட் - சொலினாய்டு சுவிட்சுகள்.

அலகு VI: டிரான்ஸ்மிசன் சிஸ்டம் (30 வினாக்கள்)

கிளட்ச், பற்சக்கரங்களின் விகிதாச்சாரம், ஆட்டோமேட்டிக் மேனுவல் ட்ரான்ஸ்மிஸன்அமைப்பு (AMT) - கியர்பாக்ஸ் வரைபடம் மற்றும் வேலை செய்யும் விதம், சிங்கொரோமெஷ் கியர் பாக்ஸ் அமைப்பில் உள்ள ரிங் கியர்களின் தொகுப்பு, சக்தி கடத்தும் முறை, நான்கு வீல் சுழற்சி மற்றும் அனைத்து வீல்களும் சுழல தேவையான சக்தி கடத்தும் அமைப்பு சாதனம் (டிரான்ஸ்ஃபர் கேஸ்), ஆல்-வீல் டிரைவ் டிரான்ஸ்பர் கேஸ், டிரான்ஸ்ஃபர் கேஸ் டிப்பெரன்ஷியல் தானியங்கி டிரான்ஸ்மிஷன்கள் இயக்க முறைகள் – உந்த சக்தியை கடத்தும் சாதனம் (டார்க் கன்வெர்ட்டர்கள்), பிளானட்டரி கியர்கள், எலக்ட்ரானிக் கண்ட்ரோல் டிரான்ஸ்மிஷன், ப்ரொப்பல்லர் ஷாஃப்ட், யுனிவர்சல் ஜாயின்ட், ஃபைனல் டிரைவ், டிப்பெரன்ஷியல் யூனிட், முன்பக்க வீல் ஆக்ஸில், பின்பக்கவீல் ஆக்ஸில் – அச்சு வகைகள், முன்சக்கரத்தை இயக்கும் வகைகள்.

அலகு VII: சக்கரம் & டயர், ஸ்டியரிங் சிஸ்டம், சஸ்பென்சன் சிஸ்டம் மற்றும் பிரேக்கிங் சிஸ்டம் (30 வினாக்கள்)

காற்று நிரப்புவதை பொறுத்து, பிளேரேட்டிங்கை பொறுத்து–டயரினுடைய குறுக்கு வெட்டு தோற்றத்தின் பாகங்கள், டிஸ்க் & ரிம்மின் வகைகள் மேற்கண்ட அனைத்து பொருட்களின் தயாரிப்பு மூலப் பொருட்கள் (மெட்டீரியல்கள்) - கட்டுமானம், பண்புகள். டயர் அளவுகள் மற்றும் டயர் தயாரிப்பாளர்களுடைய பெயர்கள், டயர் பற்றிய குறிப்பு தகவல்கள், டயர் பாதுகாப்பு வடிவமைப்புகள், டயரின் வெப்பநிலை மற்றும் இணக்கமான டயர் மதிப்பீடுகள். விளக்கங்கள் மற்றும் டயர் ட்ரெட் வடிவங்கள் பொறுத்து டயர்களில் நைட்ரஜன் காற்று நிரப்பும் டயர்கள் மற்றும் வளிமண்டல காற்று (சாதாரணமான காற்று) டயர்கள் இரண்டிற்கும் ஒப்பீடு செய்தல்.

ஸ்டீயரிங், ரேக்-அண்ட் - பினியன் டைப் வகைகள் ஸ்டீயரிங் சிஸ்டம், ரீசர்குளேட்டிங் பால்ஸ் வித் நட் வகைகள், சுழலும் பால்ஸ் மற்றும் நட் ஸ்டீயரிங் சிஸ்டம், நான்கு சக்கர திசைமாற்றி அமைப்புகள், ஒன்றோடு ஒன்று இணைப்புடன் இயங்கும் ஸ்டீயரிங் அமைப்பு ஆகியவற்றின் இயக்கங்கள். ஸ்டீயரிங் பாக்ஸ்கள் & குழாய் இணைப்பு, பவர் அசிஸ்டட் ஸ்டீயரிங், எலக்ட்ரிக் பவர் அசிஸ்டட் ஸ்டீயரிங். சக்கர சீரமைப்பு:- அடிப்படைக் கோட்பாடுகள், வீல் பேஸ், வீல் டிராக், கிங் பின் சாய்வுகோணம், கேஸ்டர், கேம்பர், தொகுப்பு சாய்வு கோணம் - ஸ்க்ரப் ஆரம், டோ-இன் & டோ அவுட், டோ - அவுட் ஆன் டர்ன்கள், டர்னிங் ஆரம், த்ரஸ்ட் ஆங்கிள் & மையக் கோடுகள்.

சஸ்பென்ஷன் சிஸ்டத்தின் தத்துவமும்கோட்பாடுகளும் – வகைகள், தன்னிச்சை இயக்க (independent system) சஸ்பென்ஷன் சிஸ்டம் – கன்வென்ஷனல் அல்லது ரிஜிட்டைப், பின் சுயஇயக்க சஸ்பென்ஷன் சிஸ்டம், மின் அணுமுறையில் கட்டுப்படுத்தப்படும் சஸ்பென்ஷன் சிஸ்டம், காற்றின் கட்டுப்பாடு சஸ்பென்ஷன் சிஸ்டம், திரவ மற்றும் காற்றழுத்த சஸ்பென்ஷன் சிஸ்டம் – ஸ்பிரிங்னுடைய வகைகள் – காயில் ஸ்பிரிங்ஸ், லீஃப் ஸ்பிரிங்ஸ், டார்ஷன் பார்கள், ரப்பர் ஸ்பிரிங்ஸ் ஆகியவற்றின் விளக்கம் மற்றும் செயல்பாடு. ஷாக் அப்சார்பர் வகைகள்- ஹைட்ராலிக் ஷாக் அப்சார்பர்கள், கேஸ்-பிரஷரைஸ்டு ஷாக்

அப்சார்பர்கள், லோட் அட்ஜஸ்ட்பிள் ஷாக் அப்சார்பர்கள், மேனுவல் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய-ரேட் ஷாக் அப்சார்பர்கள், எலக்ட்ரானிக் சமிக்கை-ரேட் ஷாக் அப்சார்பர்கள், ஆட்டோமேட்டிக் லோட் அட்ஜெஸ்ட் ஷாக் அப்சார்பர்கள், டெலஸ்கோப்பிக்ஷாக் அப்சார்பர்களுடைய பாகங்களும், அது வேலை செய்யும் விதமும் - ஃப்ரண்ட் சஸ்பென்ஷன் வகைகள் & பாகங்கள்-மேக் ஃபர்சன்ஸ் ட்ரூட் சஸ்பென்சன். குறுகிய/நீண்ட கை சஸ்பென்ஷன், லீஃப் ஸ்பிரிங்ஸ் சஸ்பென்ஷன் பின்புற சஸ்பென்ஷன் வகைகள் & பாகங்கள்-ரிஜிட் ஆக்சில் லீஃப் ஸ்பிரிங் சஸ்பென்ஷன், ரிஜிட் ஆக்சில் காயில் ஸ்பிரிங் சஸ்பென்ஷன், இன்டிபென்டன்ட் டைப் சஸ்பென்ஷன், ரிஜிட் நான்-டிரைவ் சஸ்பென்ஷன்.

பிரேக் வகை - தத்துவம், ஏர் பிரேக்குகள், எக்ஸாஸ்ட் பிரேக்குகள், எலக்ட்ரிக் பிரேக்குகள், பார்க்கிங் பிரேக்குகள், என்ஜின் பிரேக்குகள், ரீஜென்ரேட்டிங் பிரேக்கிங், பிரேக்கிங் சிஸ்டம், பாகங்கள் பிரேக் அமைப்பு, பிரேக் உராய்வு பொருட்கள், ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் செயல்பாடு, ஏபிஎஸ் (ABS) பிரேக்கிங்கின் கோட்பாடுகள், ஏபிஎஸ் மாஸ்டர் சிலிண்டர், ஹைட்ராலிக்கண்ட்ரோல் யூனிட், வீல் ஸ்பீட் சென்சார்கள், ஏபிஎஸ்யுடன் இணைந்த ஈபிடி எலக்ட்ரானிக் கண்ட்ரோல் யூனிட். ஏபிஎஸ் அதன் அமைப்பு மற்றும் செயல்பாடு. பிரேக்கிங் சிஸ்டம் பாகங்கள்.

அலகு VIII: அடிப்படை எலக்ட்ரானிக்ஸ் மற்றும் ஹீட்டிங் வென்டிலேஷன் ஏர் கண்டிஷனிங் (HVAC) (20 வினாக்கள்)

செமி கண்டக்டர்களின் விளக்கம், திட நிலை சாதனங்கள்- டையோடுகள், டிரான்சிஸ்டர், இக்னிஷன் சிஸ்டம் - டிஸ்டிரிஃபூட்டர் இல்லாத இக்னிஷன் அமைப்புகள், இன்சுலட்டர் காயில்கள், டிஸ்டிரிஃபூட்டர்லெஸ் இக்னிசன் சிஸ்டம் டைமிங், ஹார்ன், வைப்பர், பவர் வின்டோ, பவர் டோர் லாக், ஆட்டோமேட்டிக் டோர் லாக், ரிமோட் கீலெஸ் என்ட்ரி சிஸ்டம், ஆண்டிதெஃப்ட் சிஸ்டம், இம்மொபைலைசர் சிஸ்டம் சர்க்யூட்கள் மற்றும் அதன் பாகங்கள். ஏர்பேக்குகள், சீட்பெல்ட், வாகன பாதுகாப்பு அமைப்புகள், கிராஷ் சென்சார்கள், சீட் பெல்ட் ப்ரீ டென்ஷனர்கள், டயர் பிரஷர் கண்காணிப்பு அமைப்புகள் ஒருங்கிணைந்த தகவல் தொடர்புகள், ப்ராக்ஸிமிட்டி சென்சார்கள் ஆகியவற்றின் விளக்கம் மற்றும் செயல்பாடு.

கோட்பாடுகள், ஏர் கண்டிஷனிங் திறன், ஏர் கண்டிஷனிங் ரெஃப்ரிஜெரண்ட், ஈரப்பதம் விவரம் மற்றும் நிலையான துளையின் செயல்பாடு, கட்டுப்பாட்டு சாதனங்கள், தெர்மோஸ்டேடிக் விரிவாக்க வால்வு அமைப்பு, வெப்ப விரிவாக்க வால்வுகள், காற்றழுத்தம் மின்தேக்கிகள் மற்றும் ஆவியாக்கிகள், ரிசீவர் உலர்த்தி, ஹோஸ் மற்றும் பைப்லைன்கள், TX (தெர்மோஸ்டேடிக் எக்ஸ்பான்ஸன் வால்வு) வால்வு அமைப்பு, வெப்பநிலை கண்காணிப்பு தெர்மோஸ்டாட், குளிர்பதனப் பொருட்கள், அழுத்த சுவிட்சுகள், வெப்பமூட்டும் கூறுகள் ஏர்-கண்டிஷனிங் ECU, சுற்றுப்புற காற்று வெப்பநிலை சென்சார், சர்வோ மோட்டார்கள், மின்சார சர்வோ மோட்டார்கள், தானியங்கி காலநிலை கட்டுப்பாட்டு வெப்பநிலை சென்சார்கள், Evaporator வெப்பநிலை சென்சார்கள், சென்சார், ப்ளோவர் வேகக் கட்டுப்பாடு, காற்றோட்ட அமைப்புகள்.

அலகு IX: மின்சார வாகனத் தொழில்நுட்பம் (10 வினாக்கள்)

ஹைப்ரிட் & எலக்ட்ரானிக் வாகனம், ஹைட்ரஜன் எரிபொருள் வாகனம், (EV) எலக்டிரிக் வாகனம் டெக்னாலஜி, எலெக்ட்ரிக் வாகனத்தை IC இன்ஜின் வாகனத்துடன், ஒப்பிட்டு வெளியேறும் வாயுக்களின் அடிப்படையில் வரம்பு நிர்ணயம் செய்தல், எரிபொருள் வகை ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பிடுதல். மின்சார வாகனத்தின் வகைகள், BEV (பேட்டரி எலக்ட்ரிக் வாகனம்), HEV (ஹைபிரிடு எலக்ட்ரிக் வாகனம்), PHEV (பிளக் – இன் ஹைபிரிடு எலக்ட்ரிக் வாகனம்) மற்றும் FCEV (ஃப்யூவல் செல் எலக்ட்ரிக் வாகனம்). மின்சார வாகனத்தின் அமைப்பு, முழு மின்சார வாகனத்தின் வேலை தத்துவம், முக்கிய பாகங்கள், எலக்ட்ரிக் மோட்டார்களின் அடிப்படை தத்துவம் மற்றும் தேர்வு, அளவு, மோட்டாரின் சிறப்பியல்பு, மோட்டார் தேர்வுக்கான கணக்கீடு, மின்சார பரிமாற்றம். உந்துவிசை அமைப்பின் கொள்கை, வேலை மற்றும் செயல்பாடு, டிசி மோட்டார் - டிரைவ்கள் ஆர்மேச்சர் மின்னழுத்தம், சோப்பர் சர்க்யூட், ஸ்டெப் அப், ஸ்டெப் டவுன் சோப்பர், கண்ட்ரோல் ஸ்ட்ராடஜி, சோப்பர் பெருக்கி. பிரஷ்லெஸ் டிசி மோட்டார் அதன் வேலை செய்யும் தத்துவம், பிரஷ் இல்லாத டிசி மோட்டாரின் வேகக் கட்டுப்பாட்டு அமைப்பு, செயல்திறன், கணக்கீடு. பேட்டரி மேலாண்மை அமைப்பு.

அலகு X: குறைபாடு கண்டறியும் குறியீடு (DTC) மற்றும் வெளியேறும் வாயுநிலை (Emission) கட்டுப்பாடு (10 வினாக்கள்)

ஸ்கேன் கருவியின் மூலம் குறியீடுகளை மீட்டெடுப்பது மற்றும் பயன்பாடு. EFI (எலக்ட்ரானிக் ஃப்யூவல் இன்ஜக்சன்) சென்சார்கள்- உள்வெப்பநிலை சென்சார், மாஸ் ஏர்ஃப்ளோ சென்சார், மெனிஃபோல்ட் அழுத்தம் சென்சார் (MAP சென்சார்), காற்று சுழல் சென்சார், எரிபொருள் அமைப்பு சென்சார், த்ரோட்டில் பொசிஷன்

சென்சார், வெளியேற்ற வாயு ஆக்ஸிஜன் சென்சார், கிராங்க் ஆங்கிள் சென்சார், ஹால் எஃபெக்ட் வோல்டேஜ் சென்சார், ஆப்டிகல் வகை சென்சார்கள்.

வாகன வாயுதர (Emission) நிலைகள் - யூரோ மற்றும் பாரத் (Euro & Bharath) II, III, IV, VI -ன்படி வெளியேற்றும் வாயுக்களின் நச்சுத்தன்மை கட்டுப்பாட்டு உயர்வு நிலை, கம்பூசன் சேம்பர் வடிவமைப்பு. வெளியேறும் வாயு வகைகள்: ஹைட்ரோகார்பன்களின் குணங்கள் மற்றும் விளைவு, வெளியேற்ற வாயுக்களில் உள்ள ஹைட்ரோகார்பன்கள், நைட்ரஜனின் ஆக்சைடுகள், துகள்கள், கார்பன் மோனாக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, எரிபொருளில் உள்ள கந்தக உள்ளடக்கம், ஆவியாதல் வெளியேறும் வாயுகள் கட்டுப்பாடு, வினையூக்கி மாற்றம், மூடிய வாயு வெளியேற்றம், மூடிய வாயு வெளியேற்றம் (EGR) வால்வு, காற்று எரிபொருள் விகிதங்களைக் கட்டுப்படுத்துதல், கார்பன் துகள்கள் அகற்றும் சாதனங்கள், டீசல் எரிவாயு மாசுத் துகள் வடிகட்டி (DPF). செலக்டிவ் கேட்டலிக் ரிடக்க்ஷன் (SCR) நச்சுத் தன்மை குறைக்கும் அமைப்புகள் மற்றும் EGR ஒப்பீடு SCR.

46. சுரங்கபணித்துணைவர்
(சான்றிதழ் படிப்புத்தரம்)

குறியீடு: 591

அலகு I: உலோக சுரங்கங்கள் ஒழுங்குமுறை சட்டம் 1961 இன் படி சுரங்கத் துணைவர் மற்றும் வெடியாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் (40 வினாக்கள்)

விதிமுறைகள் 1961 -ன்படி உலோக சுரங்கத் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறைகள் - சுரங்க பணித்துணைவர் மற்றும் வெடியாளரின் கடமைகள் - சுரங்கங்களில் பணிபுரியும் நபர்களின் பொதுவான கடமைகள்

சுரங்கப்பணித் துணைவர் மற்றும் வெடியாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் - தகுதிவாய்ந்த நபர்களின் நியமனம் – வெடிமருந்து சேமிப்பு கிடங்கு பொறுப்பாளர் – பதிவேடு பராமரிப்பாளர்

அலகு II: சுரங்க விதிகள், 1955-ன் படி சுரங்கப்பணித் துணைவர் மற்றும் வெடியாளர் கடமைகள் மற்றும் பொறுப்புகள் (20 வினாக்கள்)

சுரங்க விதிகள் 1955 –ன் படி – தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறைகள் - சுரங்கப் பணித்துணைவர் மற்றும் வெடியாளரின் கடமைகள் – சுரங்கங்களில் பணிபுரியும் நபர்களின் பொதுவான பாதுகாப்பு.

சுரங்கங்களில் பணிபுரியும் நபர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் – சுரங்கம் அறிக்கை தாக்கல் செய்தல் - தொழிலாளர் ஆய்வாளர் மற்றும் பாதுகாப்பு குழு - சுகாதாரம் மற்றும் சுகாதார வசதிகள் - முதலுதவி மற்றும் மருத்துவ சாதனங்கள் – தொழிலாளர்களை பயன்படுத்துதல் - ஊதியத்துடன் கூடிய விடுப்பு மற்றும் கூடுதல் நேரப்பணி – தொழிலாளர் நலத்திட்ட ஏற்பாடுகள் – உற்பத்திப் பிரிவு அறிக்கைகள், பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் தயாரித்தல் – போன்றவை.

அலகு III: சுரங்கச் சட்டம், 1952 இன் படி சுரங்கப் பணித்துணைவர் மற்றும் வெடியாளர் கடமைகள் மற்றும் பொறுப்புகள் (10 வினாக்கள்)

சுரங்கச் சட்டம் 1952 இன் படி சுரங்கங்களில் பணிபுரியும் நபர்களின் பாதுகாப்பு - பொதுவான கடமைகள் மற்றும் சுரங்க பணித்துணைவர் மற்றும் வெடியாளர்களின் கடமைகள் - சுரங்க பணிகள் மற்றும் சுரங்க மேலாண்மை - சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விதிகள் - விபத்துகள் குறித்து

அறிக்கை – வேலை நேரம் மற்றும் பணி வரம்புகள் - ஊதியத்துடன் கூடிய விடுப்பு - அபராதம் மற்றும் நடைமுறைகள் – விதிமீறலுக்கான பொதுவான விதிகள்

அலகு IV: இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலை (10 வினாக்கள்)

இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலை – திறந்த வெளி சுரங்கத்தின் பயன்பாட்டில் உள்ள இயந்திரங்கள் - இயந்திரங்களின் பராமரிப்பு – காற்றழுத்தத்தால் இயங்கு இயந்திரங்களின் பாதுகாப்பு நடைமுறைகள், நகரும் இயந்திரங்கள் பாதுகாப்பு குறித்த முன்னெச்சரிக்கைகள், இயந்திரங்களின் வேலைத்திறன் மற்றும் செயல்பாடுகள் ஆய்வு செய்தல்.

அலகு V: சுரங்கங்களில் கனிமங்கள் ஏற்றுதல் மற்றும் போக்குவரத்துக்கான பாதுகாப்பான செயல்பாட்டு நடைமுறைகள் (20 வினாக்கள்)

கனிமங்கள் / கனிம கழிவுகளை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் போக்குவரத்துக்கான பாதுகாப்பான இயக்க நடைமுறைகள் குறித்த தகவல்கள் - உபகரணங்கள் மற்றும் வாகன பாதுகாப்பு வேகத்தை குறைக்கும் அமைப்பு - சாலை பராமரிப்பு – கனரக வாகனம் செல்லும் சாலைகளின் வடிவமைப்பு - பொருட்களை கையாளுதல் - அதிக சுமைகளைத் தவிர்த்தல் – தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் பயிற்சி.

அலகு VI: திறந்தவெளி சுரங்கங்களில் மேல் தளப் பகுதி மற்றும் சரிவான பகுதி – வேலி அமைத்தல் (30 வினாக்கள்)

சுரங்க மேல் தளப் பகுதி மற்றும் சரிவான பகுதியுள்ள திறந்தவெளி சுரங்க பணிகள் ஆய்வு மற்றும் மேல் தளப் பகுதியின் பக்கவாட்டின் பாதுகாப்பு வேலி அமைத்தல், முதலுதவி மற்றும் சுகாதாரம் – சுரங்க வேலை முடியும் முன் செய்ய வேண்டிய பாதுகாப்புப் பணிகள் - சுரங்க எல்லைகளுக்கு அருகில் பணிபுரியும்போது மேற்கொள்ள வேண்டிய பொதுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் – வேலி மற்றும் வாயில்களை ஆய்வு செய்தல் போன்றவை – விபத்துகளை தவிர்த்தல் – பொதுவான பாதுகாப்பு முன்னேற்பாடுகள்.

அலகு VII: சுரங்க தொழில் பயிற்சி விதிகள் 1966 (05 வினாக்கள்)

பொது மேலாண்மை - பொது தொழிற்கல்வி பயிற்சி - புதுப்பிப்பு பயிற்சி – வெடிபொருட்களை வெடிக்க வைக்கும் பயிற்சி மற்றும் வெடிபொருட்களை கையாள்வதில் சம்மந்தபட்ட நபர்களுக்கு பயிற்சி – வெடிவெடிப்பு மற்றும் பாதுகாப்பு விதிகள்

அலகு VIII: திறந்தவெளி சுரங்கங்களில் வெடிபொருட்கள், வெடிவைத்தல் வெடிபொருட்கள் போக்குவரத்து மற்றும் வெடிபொருட்களின் பயன்பாடு (45 வினாக்கள்)

வெடிபொருட்களை சேமித்தல், வெடிப்பொருட்களை எடுத்துச் செல்லுதல் வெடியாளர், துளையிடும் தொழிலாளர், துளையில் வெடி மருந்துகளை தேவையான அளவு நிரம்பதல், ஆழ்துளை துளையிடுதல் மற்றும் வெடிவைத்தல், மண்ணை வைத்து இறுக்குதல், வெடியை பற்ற வைத்தல், வெடியாளர் பாதுகாப்பிடம், வெடி வெடித்தபின்பு ஆய்வு செய்தல் வெடிவைத்து வெடிக்காமல்உள்ள வெடிபொருட்கள் வெடியாளரின் கடமைகள் மற்றும் – வெடிபொருட்கள் தொடர்பான பொதுவான முன்னெச்சரிக்கைகள்

அலகு IX: பொது மற்றும் பல்வேறுபட்ட பாதுகாப்பு (10 வினாக்கள்)

வேலிகள் - அறிவிப்புகள் – நச்சுத்தன்மை மிக்க பொருட்களால் ஏற்படும் ஆபத்து - பொதுப் பாதுகாப்பு - பாதுகாப்பு காலணிகள் / தலைக்கவசம் பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் - பிற பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் - விபத்து நடந்த பகுதி குறித்து அறிந்திருத்தல்.

அலகு X: தீ, தூசு, நீர் மற்றும் தொழில்சார் சுகாதார அபாயங்களிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் (10 வினாக்கள்)

தீக்கு எதிரான முன்னெச்சரிக்கைகள் - தீயணைப்பு உபகரணங்கள் – தூசுக்கு எதிரான முன்னெச்சரிக்கைகள் - மேற்பரப்பு நீரிலிருந்து ஆபத்து – திறந்தவெளி சுரங்கங்களில் தூசி, சத்தம் மற்றும் அதிர்வு, வெப்ப அழுத்தம் தொடர்பான தொழில்சார் சுகாதார அபாயங்கள்.

பின்னிணைப்பு IV
தேர்வர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

1. எழுத்துத் தேர்வு

1.1. தேர்வு மையத்திற்கு வருகை புரியும் நேரம்

1.1.1.. தேர்வு எழுத வரும் தேர்வர்களின் மெய்த்தன்மையை உறுதி செய்யவும், இதர தேர்வு விதிமுறைகளை தேர்வர்களுக்கு விளக்கும் விதமாகவும், தேர்வர்கள், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒருமணிநேரத்திற்கு முன்பாகவே தேர்வு மையங்களுக்கு வருகை புரிதல் வேண்டும்.

1.1.2. தேர்வுமையத்தின் அனைத்து நுழைவாயில்களும் தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே மூடப்படும். அதன் பின்னர், வரும் எவரும் தேர்வுமையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.1.3. காலை மற்றும் பிற்பகல் ஆகிய இருவேளைகளில் நடைபெறும் தேர்வுகளில், பிற்பகல் தேர்விற்கு, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வர்கள் தேர்வுக்கூடத்துக்குள் வந்துவிட வேண்டும். அதன் பின்னர் வருகைபுரியும் எவரும் தேர்வுக்கூடத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.2. தேர்வு மையத்திற்குள் அனுமதித்தல்

1.2.1. தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுடன் தேர்வு மையத்திற்கு வர வேண்டும். தவறும் பட்சத்தில், தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை தேர்வுமையத்திற்கு கொண்டு வர வேண்டும்.

1.2.2. தேர்வர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் (அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையத்தை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. உரிய முன் அனுமதி இல்லாமல், தேர்வர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வுமையத்திற்குப் பதிலாக வேறொரு தேர்வு மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.2.3. தேவைப்பட்டால், தேர்வு மையத்தில் காவல்துறையிலுள்ள ஆண் / பெண் காவலர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர்கள் மூலமாக தேர்வர்கள், முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

1.2.4. தேர்வர்களுடன் வரும் பெற்றோர்கள் மற்றும் பிற நபர்கள், தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.3. தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு

1.3.1. தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில், தேர்வரின் புகைப்படம் அச்சிடப்படவில்லை அல்லது தெளிவாக இல்லை அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லை என்றாலோ, தேர்வர்கள் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளை காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண் ஆகியவற்றை குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை, இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து, அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலொப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தேர்வர்கள் தன்னுடைய அசல் அடையாள அட்டையை, சரிபார்ப்பு நோக்கத்திற்காக அறைக்கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அறைக் கண்காணிப்பாளர் தேர்வரின் மெய்த்தன்மையை உறுதி செய்த பிறகு, தேர்வர்களின் மெய்த்தன்மையை குறித்தும், தேர்வர்களால் அளிக்கப்பட்ட தகவல்கள் பின்னாளில் தவறானவை என கண்டறியப்படும் பட்சத்தில், தேர்வாணையம் எடுக்கும் எந்தவொரு குற்றவியல் அல்லது மற்ற நடவடிக்கைக்கும் பொறுப்பேற்பார் என்பது குறித்தும் ஓர் உறுதிமொழியினை தேர்வர்களிடமிருந்து பெற்று தலைமைக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

1.3.2. தேர்வர்கள் தேர்வுக்கூடத்தில் அறைக்கண்காணிப்பாளர் / தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் / அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் எவரும் அனுமதிச்சீட்டினை ஆய்வுக்காக கேட்கும்பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

1.3.3. தேர்வர்கள் அனுமதிச்சீட்டினை தங்களது பாதுகாப்பில் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவேண்டும். தேர்வர்கள், தங்களது அனுமதிச்சீட்டினை அடுத்த கட்ட தேர்வுக்கு தெரிவு செய்யப்படும் நேர்வுகளில் / தேர்வாணையத்தால் கோரப்படுகின்ற நேர்வுகளில், சமர்ப்பிக்க வேண்டும். தேர்வர்கள், அனுமதிச்சீட்டினை தேர்வுக்குப் பின்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒளிநகல் எடுத்து தங்கள் வசம் வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு அனுமதிச்சீட்டின் பிரதி வழங்கப்படமாட்டாது.

1.4. தேர்வு அறை

1.4.1. தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் முன்பாகவே தேர்வு அறைக்குள் தங்களது இருக்கையில் அமர்ந்து விடவேண்டும்.

1.4.2. தேர்வறையின் இருக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு எண், பெயர், புகைப்படம் ஆகியவற்றை சரிபார்த்த பின்னரே, தேர்வர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர வேண்டும்.

1.4.3. தேர்வு அறைக்கு உள்ளே குடிநீர், தேநீர், காபி, சிற்றுண்டி, குளிர்பானங்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது.

1.4.4. தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் தேர்வர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற தேர்வர்களுடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் தேர்வர்களின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன், தேர்வாணையம் தக்கதெனக் கருதும்காலம் வரை

தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அத்தேர்வர்கள் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

1.4.5. உடல்நலக் குறைவுடன் தேர்வு எழுதவரும் தேர்வர்கள், தலைமைக் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று அவர்களுக்குத் தேவையான மருந்து மற்றும் மருந்து உபகரணங்களைக் கொண்டு வந்து, அறைக் கண்காணிப்பாளரின் மேஜையில் வைத்து தேவைப்படும்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

1.4.6. எதிர்பாராத நிகழ்வுகளில், தொற்றுநோய் போன்ற காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள்/ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதாவது தொற்று நீக்கி பயன்படுத்துவது, முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவைகளை கடைப்பிடிக்கவேண்டும்.

1.5. எச்சரிக்கை மணி

தேர்வர்கள் நேரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, கீழ்க்கண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளின் போதும் ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும். தேர்வு அறைக்கண்காணிப்பாளர்களால் அவ்வப்பொழுது உரிய அறிவிப்புகள் வழங்கப்படும்.

நிகழ்வு	கால வரிசை	மணி ஒலிக்கும் கால அளவு
தேர்வு தொடங்குவதற்கு முன்		
கொள்குறி வகை தேர்வு i) OMR விடைத்தாள்களை வழங்குதல்	30 நிமிடங்களுக்கு முன்பாக	சிறு மணியோசை (2 நொடிகள்)
ii) வினாத்தாள்களை வழங்குதல்	15 நிமிடங்களுக்கு முன்பாக	சிறு மணியோசை (2 நொடிகள்)
தேர்வு தொடங்கும் பொழுது மற்றும் நடைபெறும்பொழுது		
தேர்வு எழுதத் தொடங்குதல்	நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில்	நீண்ட மணியோசை (5 நொடிகள்)
தேர்வு நடைபெறும் பொழுது	ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும்	சிறுமணியோசை (2 நொடிகள்)
தேர்வு முடிவடைவதற்கு முன்	தேர்வு முடிவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக	சிறு மணியோசை (2 நொடிகள்)
தேர்வு முடிவுறும் போது		
தேர்வு முடிவடைதல்	நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில்	நீண்ட மணியோசை (5 நொடிகள்)

1.6. கொள்குறி வகைத் தேர்விற்கான அறிவுரைகள்

1.6.1. தேர்வர்கள் தேர்வு அறைக்கு கருமை நிற மையுடைய பந்து முனை பேனா, குறிப்பிடப்பட்டுள்ள அடையாளச் சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் மற்றும் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) ஆகியவற்றை மட்டுமே எடுத்து வர அனுமதிக்கப்படுவர். பிற பொருட்களுக்கு அனுமதி இல்லை.

1.6.2. ஒளிக்குறி உணரி (OMR) விடைத்தாள்

1.6.2.1. தேர்வுக்கூட அனுமதிச் சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்பட்டுள்ளபடி, புகைப்படம், பெயர், பதிவு எண், பாடம், தேர்வு மையம் மற்றும் இடம், தேதி மற்றும் அமர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட OMR விடைத்தாள், கொள்குறி வகை தேர்வு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பாக விநியோகிக்கப்படும்.

1.6.2.2. OMR விடைத்தாளை பயன்படுத்துவதற்கு முன்பு, புகைப்படம் மற்றும் அதில் அச்சிடப்பட்ட விவரங்கள் தேர்வர்களால் சரிபார்க்கப்பட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் உள்ள விவரங்கள் அத்தேர்வரின் விவரங்கள் தான் என உறுதி செய்ய வேண்டும். ஏதேனும் விவரங்கள் தவறாகவோ அல்லது குறைபாடுடையதாகவோ கண்டறியப்பட்டால், அதை உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் மாற்றுவதற்காக தெரிவிக்க வேண்டும். OMR விடைத்தாளினை பயன்படுத்திய பின்னர் மாற்றித் தரப்படமாட்டாது.

1.6.2.3. தேர்வர்கள், OMR விடைத்தாளின் 2 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான முறைப்படி, தேவையான விவரங்கள் மற்றும் விடைகள் உட்பட, தொடர்புடைய அனைத்துப் புலங்களையும் கருமையாக்க வேண்டும்:



1.6.2.4. OMR விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள வட்டங்களில் தேர்வர்கள் பயன்படுத்தும் சரியான வினாத்தாள் எண்ணை அவர்களால் எழுதி கருமையாக்கப்பட வேண்டும். தேர்வரால் கருமையாக்கப்பட்ட வினாத்தாள் எண்ணே இறுதியானது. வட்டங்களில் தேர்வர்களால் கருமையிடப்பட்டிருக்கும் வினாத்தாள் எண்ணின் படியே அவர்களது OMR விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும். வினாத்தாள் எண்ணை கருமையிடுவதற்கான சரியான முறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, வினாத்தாள் எண் 1234 எனில்.



1.6.2.5. தேர்வர்கள், ஒவ்வொரு வினாவிற்கும் OMR விடைத்தாளில் ஒரு வட்டத்தை மட்டும் கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் கருமையாக்கப்பட்டிருந்தால், அவ்வினாவிற்கான விடை மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

1.6.2.6. OMR விடைத்தாளில் எந்த வட்டத்தையும் காலியாக விடக்கூடாது. தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். தேர்வருக்கு ஏதாவது ஒரு வினாவிற்கு விடை தெரியவில்லை எனில், [E] என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கருமையாக்கியிருந்தால் "ஆம்" என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வினாக்களுக்கான விடைக்குரிய வட்டத்தை கருமையாக்காமல் காலியாக விடப்பட்டிருந்தால் "இல்லை" என்ற வட்டத்தை கருமையாக்குவதுடன் கருமையாக்கப்படாத வினாக்களின் மொத்த எண்ணிக்கையை பகுதி - I (IV) இல் அதற்குரிய கட்டத்தில் எழுத வேண்டும்.

1.6.2.7. தேர்வர்கள் OMR விடைத்தாளில் தங்கள் கையொப்பத்தை அதற்கென உள்ள இடத்தில் இட வேண்டும்.



1.6.2.8. தேர்வர்கள் தங்கள் இடது கை பெருவிரல் ரேகையை OMR விடைத்தாளில் அதற்கென உள்ள இடத்தில் பதிய வேண்டும்.


இடது கை பெருவிரல் ரேகை பதியவில்லையெனில் தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.
0.5 mark will be deducted from total marks obtained by the candidate for not affixing Left Hand Thumb Impression.
(V) தேர்வரின் இடதுகை பெருவிரல் ரேகை மட்டும்.
Candidate's Left Hand Thumb Impression only.

1.6.2.9. அறை கண்காணிப்பாளர் வரிசை IA இல் உள்ள வட்டத்தை கருமை நிறமுடைய பந்து முனைப் பேனாவால் பின்வரும் விவரங்களுக்காக கருமையாக்க வேண்டும்:-

(I A) TO BE DARKENED BY THE INVIGILATOR (with Black ink Ballpoint pen)		
(a) Candidate's signature available in the space provided	YES ○	NO ○
(b) Candidate's Left Hand Thumb Impression available in the space provided	YES ○	NO ○

1.6.3. வினாத்தாள்

1.6.3.1. வினாத்தாள், தேர்வு தொடங்குவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் வழங்கப்படும்.

1.6.3.2. OMR விடைத்தாளில் வினாத்தாள் எண்ணை எழுதி கருமையாக்குவதற்கு முன், அனைத்து வினாக்களும் எவ்வித விடுதல்களும் இன்றி அச்சிடப்பட்டுள்ளதா என்பதை தேர்வர் முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டால் அதனை உடனடியாக அறை கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, முழுமையான மாற்று வினாத்தாளை பெற்றுக்கொள்ளலாம். தேர்வு தொடங்கிய பின்னர் வினாத்தாளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டு முறையிட்டால், வினாத்தாள் மாற்றித் தரப்பட மாட்டாது.

1.6.3.3. தேர்வர்கள் வினாத்தாளில் உள்ள விடைகள் குறித்து குறியீடு செய்யவோ அல்லது குறிக்கவோ கூடாது. இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றத் தவறினால், தேர்வரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

1.6.4. வருகைப் பதிவேடு: OMR விடைத்தாள் மற்றும் வினாத்தாளில் ஏதேனும் முரண்பாடுகள் உள்ளதா என சரிபார்த்த பிறகு, தேர்வர்கள் வருகைப் பதிவேட்டில் தங்கள் பெயர் மற்றும் பதிவு எண்ணைச் சரிபார்த்து, வினாத்தாள் எண்ணை முறையாகக் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும்.

1.6.5. கொள்குறி வகைத் தேர்வுகள் எழுதும் தேர்வர்களுக்கான விதிமுறைகள் தொடர்பான அறிவுரைகள் அடங்கிய காணொளி https://tnpsc.gov.in/English/omr-guidelines.html இல் உள்ளது.

1.7. கணினிவழித் தேர்வு (Computer Based Test)

1.7.1. தேர்விற்கான பதிவு செய்தல், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகத் தொடங்கும்.

1.7.2. தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் ஒரு கணினி ஒதுக்கப்படும்.

1.7.3. கணினி வழித் தேர்விற்கு, சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை.

1.7.4. தேர்வர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியன வழங்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை (login) செய்ய வேண்டும்.

1.7.5. பதிவு எண், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றுக்கு மட்டும் விசைப் பலகையைப் பயன்படுத்தவும்.

1.7.6. தேவையான அறிவுரைகள் திரையில் தோன்றும். அனைத்து அறிவுரைகளையும் கவனமாகப் படித்து அவற்றை தவறாது பின்பற்றவும்.

1.7.7. கணினி வழித் தேர்வில், ஒவ்வொரு வினாவும் ஐந்து விடைகளுடன் திரையில் காட்டப்படும்.

1.7.8. ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1.7.9. வினாக்களானது ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித் திரையில் தோன்றும். அதற்கு ஒன்றன் பின் ஒன்றாக விடையளிக்கவும்.

1.7.10. தேர்வர்கள் சுட்டியைப் பயன்படுத்தி சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் வினாக்களுக்கு பதிலளிப்பதைத் தொடரலாம்.

1.7.11. ஒரு வினாவிற்கான விடையைத் தேர்வு செய்ய அதற்கென அளிக்கப்பட்டுள்ள விடைத் தெரிவுகளில் ஒன்றின் மீது கிளிக் செய்யவும்.

1.7.12. ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்த பின் உங்கள் விடையை சேமிக்க Save and Next பட்டன் மீது கிளிக் செய்யவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்பட மாட்டாது.

1.7.13. நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்க வேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பட்டனை கிளிக் செய்யவும் அல்லது Clear Response பட்டன் மீது கிளிக் செய்யவும்.

1.7.14. தேர்வர்கள் வினாவிற்கு உரிய மிகச் சரியான விடையினைச் சொடுக்க வேண்டும். தேர்வர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முந்தைய கேள்விக்கு செல்லலாம்.

1.7.15. தேர்வர்கள் எந்த ஒரு வினாவினையும் பார்வையிடலாம், தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எப்போது வேண்டுமானாலும் விடையினை மாற்றலாம், அவர்கள் விரும்பினால், சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்ல முடியும்.

1.7.16. தேர்வர்கள் தேர்வு நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடைகளை சமர்ப்பிக்கலாம்.

1.7.17. விடைகளைச் சமர்ப்பித்த பின்னர், தேர்வர் மேலும் தேர்வினைத் தொடர வாய்ப்பில்லை.

1.7.18. தேர்வர்கள் தங்கள் விடையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேர்வு முடியும் நேரத்தில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

1.7.19. பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளின் எழுத்து வடிவங்களைத் தேவைக்கேற்ப பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

1.7.20. வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது கிளிக் செய்து மவுசில் உள்ள ஸ்க்ரோலிங் வீலை சுழற்றவும்.

1.7.21. கேள்வி எண் பெட்டி: திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையையும் காண்பிக்கும்.



'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன.

கேள்வி எண் பெட்டியின் இடது பக்கத்தில் தோன்றும் ">" அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்விஎண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்விஎண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால், திரையின் வலதுபுறம் உள்ள "<" அம்புக்குறி மீது கிளிக் செய்யவும்.

உங்கள் கேள்விப் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ ஸ்க்ரோல் செய்யாமலேயே பார்க்க விரும்பினால் மற்றும் ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

1.7.22. தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை Time Left: என காண்பிக்கும். (உதாரணமாக தேர்விற்கான கால அளவானது 3 மணி நேரமாக இருப்பின், தேர்வின் தொடக்கத்தில், timer 180 நிமிடங்களைக் காண்பிக்கும் மற்றும் தேர்வில் உதவியாளருடன் / உதவியாளரின்றி வரும் தகுதியான மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு 240 நிமிடங்கள் என காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும்). Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

1.7.23. தேர்வர் ஒவ்வொருவருக்கும், வழிமுறைகளுக்காக பயன்படுத்தும் (Rough Work) பொருட்டு தனித்தாள் வழங்கப்படும். தேர்வு முடிவுற்ற பின் தனித்தாள் திரும்பப் பெறப்பட்டு விடும்.

1.7.24. தேர்வர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத் தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும்.
1.7.25. தேர்வறை கண்காணிப்புக் கருவி மூலம் கண்காணிக்கப்படும்.

1.7.26. தேர்வர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

1.7.27. வினா விடைகளில் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினா விடைகளே இறுதியானது.

1.7.28. தேர்வாணைய இணையதளம் (www.tnpsc.gov.in) -ல் உள்ள மாதிரி தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்து கொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது, தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணையத் தேர்வு போன்றது. மாதிரித் தேர்வில் படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் மாதிரித் தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளலாம்.

1.8. எழுத்துத் தேர்விற்கான பிற அறிவுரைகள்

1.8.1. எந்த ஒரு தேர்வரும் தேர்வு முடிவடைவதற்குள் தேர்வுக் கூடத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்.

1.8.2. தேர்வின் போது, தேர்வர்கள் தங்களது முகத்தையும், மேசையில் எழுதப்பட்டிருக்கும் அல்லது ஒட்டப்பட்டிருக்கும் தங்களது பதிவு எண்ணையும் ஒளிப்பதிவாளர் படம்பிடிக்க ஒத்துழைக்க வேண்டும். மேசையில் எழுதப்பட்டிருக்கும் அல்லது ஒட்டப்பட்டிருக்கும் பதிவு எண் தெளிவாகத் தெரியவில்லை என்றால், தேர்வர்கள் தங்களது அனுமதிச் சீட்டை (நுழைவுச் சீட்டு) காட்ட வேண்டும். அப்போதுதான்

அதில் அச்சிடப்பட்டிருக்கும் பதிவு எண்ணும் ஒரே நேரத்தில் படம்பிடிக்கப்படும்.

1.8.3. ஒரு பதவிக்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது விடைத்தாள் நகல் அளிக்குமாறு கோரும் தேர்வர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1.8.4. தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், தேர்வர்களின் விடைத்தாள் தேர்வாணைய இணையதளத்தில் கிடைக்கப் பெறும். உரிய கட்டணம் செலுத்தி தேர்வர்கள் அவர்களது விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

1.9. பதிலி எழுத்தர்கள் (Scribes) மற்றும் கூடுதல் நேரம் பயன்படுத்துதல் தொடர்பான அறிவுரைகள்

1.9.1. மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.9.1.1. இணையவழி விண்ணபத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைப்பெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.9.1.2. மாற்றுத் திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(s)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் காரணமாக தேர்வு எழுதுவதற்கு பதிலி எழுத்தர் தேவை எனக் கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பதிலி எழுத்தர் மற்றும் கூடுதல் நேரத்திற்காக பின்னிணைப்பு II-ல் உள்ளவாறு மருத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றினைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் பின்னிணைப்பு II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பின்னிணைப்பு VI-ல் உள்ளவாறு மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட சான்றினை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.9.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.9.2.1. இணையவழி விண்ணபத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைப்பெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.9.2.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(r)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பார்வைத்திறன் குறைபாடு, இயக்கக் குறைபாடு (இரண்டு கைகள் பாதிப்படைந்த) மற்றும் பெருமூளை வாதம் வகையினை சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் கோரினால் பதிலி எழுத்தருக்கான வசதி செய்து தரப்படும். அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக பதிலி எழுத்தரை பயன்படுத்தினாலும் / பயன்படுத்தாவிட்டாலும் வழங்கப்படும். மேற்கண்ட நிர்ணயிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பின்னிணைப்பு II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.9.2.3. பிற வகையைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் காரணமாக தேர்வு எழுதுவதற்கு பதிலி எழுத்தர் தேவை என்பதற்காக பின்னிணைப்பு VI-ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றினை சமர்ப்பித்தால் பதிலி எழுத்தர் வசதி செய்து தரப்படும். ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் என 3 மணி நேர தேர்விற்கு கூடுதலாக 1 மணி நேரம் பதிலி எழுத்தர் வசதியை பயன்படுத்தும் தேர்வருக்கு வழங்கப்படும். அத்தகைய தேர்வர்கள் பின்னிணைப்பு II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பின்னிணைப்பு VI -ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.9.2.4. வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் உடைய குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பதிலி எழுத்தர் உதவியினை கோராத நிலையிலும் கூடுதல் நேரம் கோரி தலைமை மருத்துவ அலுவலர் /

அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றினை சமர்ப்பித்தால் தேர்வு எழுதுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் என 3 மணி நேரத் தேர்விற்கு கூடுதலாக 1 மணி நேரம் வழங்கப்படும். அத்தகைய தேர்வர்கள் பின்னிணைப்பு II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பின்னிணைப்பு VI-ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.9.3. இணைய வழியில் விண்ணப்பிக்கும்போது மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் உரிமைகோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

1.9.4. பதிலி எழுத்தரை தேர்வாணையமே நியமிப்பதுடன் அவர்களுக்கான கட்டணம் தேர்வாணையத்தால் வழங்கப்படும். பதிலி எழுத்தரின் பணியினை பயன்படுத்திக் கொள்ளும் தேர்வர்கள் பதிலி எழுத்தருக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.

1.9.5. குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், பதிலி எழுத்தருடன் தேர்வு எழுதுவதற்கென தேர்வுக்கூடத்தின் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில் உள்ள அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

1.10. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கான சிறப்பு அறிவுரைகள்

1.10.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், விடைத்தாளில் தங்களது கையொப்பம் மற்றும் இடதுகை பெருவிரல் ரேகை அடையாளம் ஆகியவற்றை அவற்றிற்கென கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் (முடியும் பட்சத்தில்) இடவேண்டும். பதிலி எழுத்தரைக் கொண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட பார்வை குறைபாடுடைய / இயக்க குறைபாடுடைய தேர்வர்கள், தங்களது கையொப்பமிட இயலாவிடில் இடது கைபெருவிரல் பதிவினை மட்டும் பதிவிடலாம். இடது கையைப் பயன்படுத்த இயலாத மாற்றுத்திறனாளி தேர்வர்கள், தங்களது வலது கையின் பெருவிரல் ரேகை பதிவினை வைக்க வேண்டும். இரண்டு கைகளையும் பயன்படுத்த இயலாத மாற்றுத்திறனாளி தேர்வர்கள், கையொப்பம் மற்றும் பெருவிரல் ரேகைப் பதிவினை வைக்க வேண்டிய இடங்களை காலியாக விட்டு விடலாம்.

1.10.2. மாடிப்படி ஏற இயலாத நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், தேர்வுக்கூடத்தின் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில் உள்ள அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

1.11. தேர்வாணைய அறிவுரைகளை மீறுதலுக்கான தண்டனை

கீழ்க்கண்ட விதிமுறை மீறல்களுக்காக தேர்வர்களின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும் / மதிப்பெண் குறைக்கப்படும் / குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் / தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

1.11.1. கொள்குறி வகை விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்

1.11.1.1. கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனா தவிர மற்ற நிற மையுடைய பேனாவைப் பயன்படுத்துவது.

1.11.1.2. பென்சில் கொண்டு விடைகள் நிரப்பப்படுவது.

1.11.1.3. அடையாளத்தை வெளிப்படுத்தும் எவ்வித பொத்தமற்ற / முக்கியமற்ற கருத்துரைகள் OMR விடைத்தாளில் காணப்பட்டால்.

1.11.1.4. OMR விடைத்தாளின் 1ம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீடு / OMR ட்ராக் (Bar code / OMR Track) சேதப்படுத்தப்பட்டிருத்தல்.

1.11.1.5. OMR விடைத்தாளின் பக்கம்-1, பகுதி II-ல் அதற்குரிய இடத்தில் தேர்வர் கையொப்பமிடவில்லை எனில்.

1.11.1.6. OMR விடைத்தாளில் தேவையான விவரங்கள் நிரப்பப்படாமை.

1.11.1.7. பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் OMR விடைத்தாளினை பயன்படுத்துவது.

1.11.1.8. வினாத் தொகுப்பு எண்ணிற்கான வட்டங்களை நிரப்பாமல் விட்டிருத்தல்.

1.11.1.9. தங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளில் அச்சிடப்பட்டுள்ள வினாத்தொகுப்பு எண்ணினை OMR விடைத்தாளின் பிரிவு II பகுதி I-ல் கொடுக்கப்பட்டுள்ள வினாத்தொகுப்பு எண்ணிற்கான வட்டங்களை சரியாக கருமையாக்காமல் இருந்தால் / ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களோ நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்.

1.11.1.10. ஒவ்வொரு கேள்விக்கும், OMR விடைத்தாளில் அக்கேள்விக்குரிய வட்டத்தில் ஒன்றை மட்டுமே தேர்வர்கள் கருமையாக்க வேண்டும். ஒரு குறிபிட்ட கேள்விக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வட்டங்கள் கருமையாக்கப்பட்டிருந்தால், அந்த பதில் மதிப்பீடு செய்யப்படாது.

1.11.1.11. வினாத்தொகுப்பிற்கான எண்கள் குறிப்பிடப்பட வேண்டிய வட்டங்களில் வினாத்தொகுப்பிற்கான சரியான எண்களை குறிப்பிடாமல் வினாத்தொகுப்பில் அச்சிடப்படாத வேறு எண்களை வினாத்தொகுப்பிற்கான வட்டங்களில் நிரப்பப்பட்டிருந்தால்.

1.11.1.12. OMR விடைத்தாளின் பகுதி I அல்லது II அல்லது இரண்டும் குறுக்கு கோடிட்டு அடிக்கப்பட்டிருந்தால்.

உதாரணத்திற்கு: OMR தாள்



1.11.1.13. தேர்வர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடத்தாள்களுக்கான தேர்வுகளை எழுதும்பொழுது, அவற்றுள் ஏதேனும் ஒரு பாடத்தாள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான நெறிமுறைகளை மீறியதற்காக செல்லாததாக்கப்பட்டிருப்பினும், பொதுப் பாடத்தாள் செல்லாததாக்கப்படாமல் இருந்தால், பிற பாடத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும். இருப்பினும், தேர்வர் எழுதும் பொதுப்பாடத்தாள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான நெறிமுறைகளை மீறியதற்காக செல்லாததாக்கப்படுமாயின், அவர் கலந்துகொண்ட அனைத்து பாடத்தாள்களும் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

1.11.1.14. விண்ணப்பதாரருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடத்தாள்களுக்கான தேர்வுகளை எழுத தேர்வுக்கூட அனுமதி சீட்டு வழங்கப்படும் நிகழ்வில், அவர் ஏதேனும் ஒரு பாடத்தாளிற்கான தேர்வினை எழுதாதிருப்பினும், பிற பாடத்தாள்கள் மற்றும் பொதுப் பாடத்தாள்களுக்கான தேர்வுகளை எழுதியிருந்தால், அவர் எழுதிய அனைத்து தாள்களும் மதிப்பீடு செய்யப்படும். இருப்பினும், தேர்வர் பொதுப் பாடத்தாளுக்கான தேர்வினை எழுதவில்லையெனில், அவர் எழுதிய அனைத்து தாள்களும் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

1.11.2. கொள்குறி வகைத் தேர்விற்கான மதிப்பெண் குறைத்தல்

1.11.2.1. சுய விவரங்கள் கொண்ட OMR விடைத்தாளாக இல்லாத பட்சத்தில், அவ்விடைத்தாளில், தேர்வரின் பதிவு எண் தவறாக நிரப்பப்பட்டிருந்தால் இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

1.11.2.2. OMR விடைத்தாளில் எந்தவொரு வினாவிற்கும் அது தொடர்பான எந்த ஒரு வட்டத்தையும் கருமையாக்காதிருத்தல் (அதாவது வட்டம் காலியாக விடப்பட்டால்) தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.

1.11.2.3. OMR விடைத்தாளின் பக்கம் 1 இல் வழங்கப்பட்ட இடத்தில் இடது கை பெருவிரல் ரேகை பதிய வேண்டிய இடத்தில் பதியாதிருந்தால், தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.

1.11.3. குற்றவியல் நடவடிக்கை:

கீழ்க்கண்ட விதிமீறல்களுக்காக தேர்வர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்

1.11.3.1. தேர்வுக்கூடத்தில் தேர்வர்களின் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீனச் செயல்: தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் தேர்வர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைபிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற தேர்வர்களுடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் தேர்வர்களின் விடைத்தாள் / வினாத்தாளுடன் கூடிய விடைத்தொகுப்பு மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் தேர்வாணையம் தக்கதென கருதும்காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அத்தேர்வர் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

